# இந்திப் போர் முரசு



042
F01

இரு கிழவர்கள்

ஈ. வெ. ரா. (70) திரு. வி. க. (66)

"விடுதலை" வெளியீடு] 1948 [விலை அணா 6.

# உள்ளே

| | | பக்கம் |
|---|---|---|
| 1 | மறைமலையடிகள் | 3 |
| 2 | பெரியார் ஈ. வெ. ரா. | 10 |
| 3 | திரு. வி. க. | 28 |
| 4 | அண்ணாத்துரை | 37 |
| 5 | நாரண. துரைக்கண்ணன் | 48 |
| 6 | ம. பொ. சிவஞானம் | 54 |
| 7 | பாரதிதாசன் | 65 |
| 8 | டாக்டர் கிருஷ்ணசாமி | 68 |
| 9 | ரெவரெண்ட் அருள்தங்கையா | 73 |
| 10 | அப்துல் மஜீத் எம். எல். ஏ. | 76 |
| 11 | வி. பி. எஸ். மணியர் | 78 |
| 12 | ராமாமிர்தம் அம்மையார் | 79 |

# போர் முரசு

★

[17-7-48-ல் சென்னையில் நடைபெற்ற மாகாண ஹிந்தி எதிர்ப்பு மாநாட்டு சொற்பொழிவுத் திரட்டு]

★

1948

"விடுதலை" வெளியீடு

சென்னை.

# பதிப்புரை

ஹிந்தியை எதிர்ப்பவர் ஒரு சாராரல்லர்; பல்வேறு கட்சி-மத-பிரிவுகளைச் சேர்ந்தவர்கள். இவ்வுண்மையை அறைவதே இத்தொகுப்பு. கருத்து வேற்றுமைகள் மலிந்துள்ளவர்களிடையே ஹிந்தி ஒழிப்பு விஷயத்தில் மட்டும் வியக்கத் தக்க ஐக்கிய உணர்சசி ஏற்படுவது கண்கூடு. இதுதான் இன உணர்ச்சியின் அடிப்படை. தமிழ் நாட்டினர் இத்தொகுப்பு நூலைப் படிப்பதுமட்டும் போதாது; பிறர் படிக்குமாறும் செய்தல் வேண்டும்.

பதிப்பாசிரியர்.

# 1. மறைமலையடிகள்

## தலைமையுரை

அன்பர்களே!

இம்மாநாட்டிற்குத் தலைமை வகிக்க நேர்ந்த இந்தச் சமயத்தில் நான் தமிழ் மொழியின் சிறப்பைக் குறித்தும் வட மொழியின் தாழ்வைக் குறித்தும், வட மொழியால் தமிழுக்கும் தமிழர்களுக்கும் ஏற்படக் கூடிய தீமைகளைக் குறித்தும் விரிவாகப் பேசுவேன் என்று எதிர்பார்ப்பீர்கள். அப்படி விரிவாகப் பேசுவதற்கான காலமோ, உடல்வலியோ, போதிய அளவக்கு இல்லாமையால்சென்ற 50 ஆண்டுகளாக நான் எனது தென் மொழி, வடமொழி ஆங்கில மொழி இவற்றின் ஆராய்ச்சியின் மூலம் அறிந்து கொண்ட சிலஉண் மைகளைச் சுருக்கமாகச் சொல்லி எனது தலைமை உரையை முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

## ஆதி மொழி தமிழ்

இந்திய நாட்டில் இன்று வழங்கிவரும் மொழிகளுள் இந்நாட்டிற்குப் பொதுமொழியாக ஆக்கப்படுவதற்கான சகல சிறப்புக்களையும் பெற்றிருக்கும் மொழி தமிழ் ஒன்று தான் என்பதும், உலகிலேயே மக்கள் முதல் முதலாகத் தோன்றிய இடம் இந்தியாவின் தென்பாகந்தான் என்பதும், அவர்கள் சப்த மூலம் முதன் முதலாகத் தம் கருத்துகளை பரிமாறிக் கொண்டது தமிழ் மொழி மூலமாகத்தான் இருக்க வேண்டுமென்பதும் ஆராய்ச்சியின் மூலம் நன்கு புலனாகின்றது. மொழி ஆராய்ச்சி வல்லுநர்களில் ஒருவரான பேராசிரியர் மாக்ஸ்முல்லர் அவர்களும் இதை ஒருவாறு ஒப்புக்கொண்டுள்ளார். அவர் இன்று உலக வழக்கில்

உள்ள மொழிகள் சுமார் 2999 என்றும் அவற்றுள் நாகரீகம் வாய்ந்த மக்களால் பேசப்படுவனவென்று கருதப்படக்கூடியவை சுமார் 15 மொழிகள்தான் என்றும் குறிப்பிட்டுள்ளார். அப்பதினைந்து மொழிகளுள் ஒன்றாகத் தமிழையும் சேர்த்திருப்பதோடு தமிழ் மொழி மிகப் பழமையான மொழிகளுள் ஒன்று என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் சுந்திரம் பிள்ளை யவர்களும் 'மனோன்மணீயம்' என்ற தம் நூலில் தமிழ்த் தாய்க்கு வணக்கம் தெரிவித்துக்கொள்ளுங்கால், "தமிழணங்கே! உன் உதரத்திலிருந்து பற்பல மொழிகள் தோன்றி இன்றும் வழங்கி வருகின்றன என்றாலும் ஆரிய மொழியைப்போல் உலக வழக்கற்ற மொழியாக நீ ஆகிவிடாமல் என்றும் போல் தனிச்சிறப்புடன் வாழ்ந்துவரும் உன் திறமையைப் போற்றி வணங்குகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார். தமிழின் பழமைக்கும் சிறப்புக்கும் ஆதாரமாக இன்னும் இது போன்ற பல கூற்றுக்கள் எடுத்துச் சொல்லலாம். என்றாலும் இவையே போதும் என்று நினைக்கின்றேன்

•

ஆனால், ஒன்றை மட்டும் உங்களுக்கு நிச்சயமாக எடுத்துச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன். ஆரியர்கள் என்று இந் நாட்டில் காலடி எடுத்து வைத்தார்களோ அன்று முதல் தமிழையும், தமிழரின் கலைகளையும், கலாசாரத்தையும் ஒழிப்பதிலேயே அவர்கள் கண்ணுங்கருத்துமாய் இருந்து வருகிறார்கள். இந்த ஆரிய சூழ்ச்சி சென்ற 2500 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தென்னாட்டை ஆரிய நாடாக ஆக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளோடு இவர்கள் பல நூற்றாண்டுகளாக விடா முயற்சி செய்து வருகிறார்கள். இதற்காகவே ஆரியர்கள் சிலர் தம்மையும் தமிழர்கள் என்று கூறிக்கொண்டும் நம்முடன் சேர்ந்து கொண்டும் நயவஞ்சகமாக நமக்கு நன்மை செய்வது போல் ஏதாயினும் கூறி, நம்மை ஏமாற்றி நம்மை வடநாட்டு

ஆரியருக்கு அடிமைப்படுத்த பெருமுயற்சி செய்துவருகிறார்கள். இம்முயற்சிக்கு நாம் ஏமாந்து போய்விடக்கூடாது.

மேலும் வடநாட்டிலுள்ளவர்களில் கூட பெரும்பகுதியினர் தமிழர்களாக இருக்க வேண்டும் என்றே நான் நினைக்கிறேன். அவர்களெல்லாம், நம்மைவிட அதிகமாக ஆரியத்திற்கு அடிமைப்பட்டுப் போய்விட்டதால் அவர்களை நம்மவர்கள் என்று கண்டுகொள்ள முடியவில்லையே தவிர, அவர்களோடு சேர்ந்து பழகினால் அவர்கள் அடிப்படையில் தமிழர்களாகவே காணப்படுவது நன்கு புலனாகும். வடநாடு சென்று நாம் தமிழின் சிறப்பைக் குறித்தும், தமிழருடைய நாகரிகத்தின் சிறப்பைக் குறித்தும் விரிவாக எடுத்துச் சொன்னால் அவர்கள் மிக ஆச்சரியத்தோடு நாம் கூறுவதைக் கேட்கிறார்கள்.

## ஆரிய ஆதிக்கம்

இவ்வளவு பெருமை வாய்ந்த நாகரிகத்தைப் பற்றி நாம் இதுவரை அறிந்து கொள்ளாமல் இருந்திருக்கிறோமே என்று வருத்தப்படுகிறார்கள். மேலும் அதிகமாக நம்மைப் பற்றி அறிந்துக்கொள்ள ஆசைப்படுகிறார்கள். தாங்களும் ஆதியில் தென்னாட்டிலிருந்துதான் வந்து குடியேறி யிருக்கவேண்டும் என்பதையும், தாங்களும் தமிழர்களின் சந்ததிகளாக இருக்கக்கூடும் என்பதையும் கூட அவர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். அவர்களால் பேசப்படும் மொழிகளும் பெரும்பாலும் தமிழ் மொழியிலிருந்து தோன்றியனவாக இருக்கின்றனவே அல்லாது ஆரிய மொழியையே அடிப்படையாகக் கொண்டு தோன்றினவையாகக் காணப்படவில்லை. வடநாட்டில் வழங்கிவரும் மொழிகளுள் ஆரிய மொழியிலிருந்து தோன்றியனவாகக் கொள்ளக்கூடியவை மிகச் சிலவேயாம். வடநாட்டிற் சென்று குடியேறியவர்களுக்கும் தென்னாட்டிலிருந்தவர்களுக்கும் போதிய போக்குவரவுத் தொடர்பின்மை காரணமாகவும் வடநாட்டில் ஆரிய ஆதிக்கம் வளர்ந்துக் கொண்டே வந்த காரணமாகவும் தமிழ்

நாகரிகம் அந்து தழைத்தோங்க வாய்ப்பில்லாமல் போய் விட்டது.

## வர்ணாஸ்ரம தர்ம முறை

நாளடைவில் இங்கும் ஆரியர்கள் குடியேறி நம்மவர் சிலரைத் தம் கையாட்களாக்கிக் கொண்டு நமது கலாச்சார த்தை ஒழிக்க முற்பட்டனர். அவர்கள் தம்மை எல்லோருக் கும் உயர்ந்தவராகவும், தமக்கடுத்த உயர்வுள்ளவர்களாக அரசர்களையும், அதற்கும் அடுத்து உயர்வுள்ளவர்களாக வணிகர்களையும், மற்றவர்களைத் தம் எல்லோருக்கும் அடி மைகளாகவும் (சூத்திரர்களாகவும்) கடவுள் படைத்தாரென்று கூறி, அரசர்களுக்கு மற்றையோரைக் காட்டிலும் தனி உயர் வைக் கற்பித்து விடவே அவர்கள் ஆரியத்திற்குச் சுலபத் தில் அடிமையானார்கள். அரசனது செல்வாக்கை நாடிய வைசியர்களும் (வாணிபர்களும்) அதற்கு உடந்தையாகி விடவே மற்ற குடிகளும் வேறு வழியின்றி ஆரிய வர்ணாஸ் ரம தர்மத்திற்குக் கட்டுப்பட்டவர யினர்.

இப்படி ஆரியர்கள் மற்றவரைத் சூழ்ந்தித் தம்மை தேவர்களாக்கிக் கொண்ட சூழ்ச்சியை, ஏமாற்றுதலை அறி ந்து கொள்வதற்கான போதிய நல்ல அறிவு நமக்கில்லை யாதலால் வர்ணாஸ்ரமம் இன்னும் இந்நாட்டில் இருந்து வருகிறது. ஆரியர்கள் நம்மை என்றென்றும் அடிமையாக்கி வைத்திருக்க வேண்டி நம்மை அடிமைகள் என்றும், அத னால் வேலை செய்யக் கடமைப்பட்டவர்களே ஒழிய அறி வை வளர்க்கக் கடமைப்பட்டவர்கள் அல்லவென்று கூறி நமக்குக் கல்வி அறிவில்லாமற்படி செய்து விட்டனர்.

## சூத்திரப்பட்டம்

சூத்திரன் வேதம் படிக்கக்கூடாது, படித்தால் அவனு டைய நாக்கு துணிக்கப்பட வேண்டும் என்றும், வேதம் ஓது தலையும் அவன் கேட்கக்கூடாது, கேட்பின் அவன் காது களில் ஈயம் காய்ச்சி ஊற்றப்படவேண்டும் என்றும் மனுநீதி

யில் எழுதி வைத்துக்கொண்டு, அதன்படியே கடுந்தண்டனை விதித்து நம்மைப் படிக்க வொட்டாமல் செய்து விட்டனர். படிக்க உரிமை பெற்ற அரச பரம்பரையினரும், வைசியர்களும் கூட ஆரிய மனு நீதி தர்மத்தை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட நூல்களையே படிக்கும்படி செய்யப்பட்டனர். என்றாலும், ஆங்காங்கு சிற்றரசர்களும் சீரிய தமிழ்ப் புலவர்களும் ஆரிய தர்மத்தைக் கண்டித்துத் தம்மாலியன்ற அளவு தமிழ் வளர்த்து வந்தனர். இதன் பயனாகத்தான் தமிழ் அழியாமல் இருந்து வந்தது. தமிழின் இயற்கை வளமும் அதைக் காப்பாற்றி வந்தது. பிறகு ஆங்கில ஆட்சி இந்நாட்டில் ஏற்படவும் அவர்கள் நாளடைவில் எல்லா ஜாதியினருக்கும் கல்வி கற்கும் உரிமை அளித்தனர். அதையும் கல்வி நிலையங்களில் ஆசிரியராக அமையப்பெற்ற பார்ப்பனர்கள் பல காலமாகப் பயன்பட வொட்டாமல் செய்து வந்தபோதிலும் ஒரு சிலராவது படித்துத் தேற வசதி ஏற்பட்டது.

## இன்னும் அடிமையா ?

கல்வி நிலையங்களில் போதிக்கப்படும் கல்வியும் பெரும்பாலும் ஆரிய தர்மத்தையே வலியுறுத்தும் கல்வியாக இருந்து வருவதால் அக்கல்வியும் பேனா அடிமைகளைச் சிருஷ்டிக்கத் தான் உதவி வந்ததே ஒழிய, வருகிறதே ஒழிய, மக்களை மேல் நிலைக்குக் கொண்டுவர பயன்படாமல் இருந்து வருகிறது.

என்ற போதிலும், கல்வி நிலையக் கல்வியே யன்றி சுயமாகப் பல அரிய நூல்களைப் படித்துத் தம் சொந்தப் பகுத்தறிவு கொண்டு அவற்றை ஆராய்ச்சி செய்து பார்த்து நன்மைகளையும், தீமைகளையும் உய்த்துணரக்கூடிய பல பெரியார்கள் இத்தமிழ் நாட்டின் கண் தோன்றியதன் பயனாய் இன்று நம் மக்களுக்குள் ஒரு புத்துணர்ச்சி எழும்பி யிருக்கிறது.

இனியும் ஆரிய அடிமையா யிருக்கக்கூடாது என்ற அறிவு உதயமாகி விட்டது. ஆரியத்தை அழிப்போம், தமிழைக் காப்பாற்றுவோம் என்ற முழக்கம் எங்கும் கேட்கப்படுகிறது. தமிழ் மொழியில் கணக்கிடற்கரிய நூல்கள், ஆராய்ச்சி உரைகள் அன்றாடம் தோன்றிக் கொண்டு வருகின்றன. தமிழர்கள் தன்னுணர்வு எய்தத் துவங்கி விட்டனர் என்பதைக் கண்ணுறும் ஆரியர்களின் வயிறு பற்றி எரிகின்றது.

எனவே, எப்படியேனும் இப் புத்துணர்ச்சியைக் கெடுக்கத் தம்மாலியன்ற அளவு முயற்சி எடுத்துக் கொள்ளத் தீர்மானித்து அதன்படி செயலாற்ற துணிந்து நிற்கின்றனர். ஆகவே தான் இந்நாட்டில் ஹிந்தியைப் புகுத்தி நம்மைக் கெடுக்க, நமது கலாச்சாரத்தை அழிக்க, நமது புத்துணர்ச்சியை ஒழிக்க, ஆரியர் கங்கணம் கட்டிக் கொண்டு அல்லும் பகலும் உழைத்து வருகிறார்கள். எனவே தான் நியாயத்தை மறந்தும், தம் அறிவை ஆசைக்கும் பொறாமைக்கும் அடகு வைத்து விட்டும் அந்நிய, அநாகரிக ஹிந்தி மொழியை இத் தமிழ் நாட்டில் புகுத்துகின்றனர்.

## தமிழர் கலாச்சாரம்

ஹிந்தி ஆரிய தர்மத்தை அடிப்படையாகக் கொண்டது, ஆரிய தர்மம் வர்ணாஸ்ரம தர்மத்தை, சாதி வேறுபாடுகளை. சாதி உயர்வு தாழ்வுகளை அடிப்படையாகக் கொண்டது. தமிழர் கலாச்சாரமோ இதற்கு முற்றிலும் மாறுபாடானது.

அப்படி இருக்க, ஜாதி வேற்றுமைகளையே அடிப்படையாகக் கொண்ட ஹிந்தி மொழியைத் தமிழ் நாட்டில் புகுத்துவதென்றால் இங்கு கொஞ்சம் கொஞ்சமாக ஏற்பட்டு வரும் ஒற்றுமை மனப்பான்மையைக் கெடுக்க ஆரியர்களால் செய்யப்படும் சூழ்ச்சி இது என்றுதானே கொள்ள வேண்டி யிருக்கிறது? நாம் ஹிந்தி வேண்டாம் என்றால் சமஸ்கிருதம் படியுங்கள் என்று கூறுவதன் கருத்து இது தானே! இரண்டும் மக்களுள் வேற்றுமை உணர்ச்சிகளை

வளர்க்கும் மொழிகள் என்பதுதான் இதற்குக் காரணம். தமிழர்களிடையே தோன்றியுள்ள புத்துணர்ச்சியை, பகுத்தறிவு உணர்ச்சியைக் கெடுக்க, நாசமாக்க, தம்மாலியன்ற எல்லா வகையாலும் தொல்லை கொடுக்க முற்பட்டுவிட்டனர் என்பதன் அறிகுறிதான் இது.

## பெரியாருக்குப் பாராட்டு

இதை ஆரம்பத்திலிருந்தே உணர்ந்து கொண்டுள்ள பெரியார் இராமசாமி அவர்களும் ஆரியத்தை இந்நாட்டிலிருந்து எவ்வகையிலேனும் ஒழித்தே தீருவதென்று கங்கணம் கட்டிக்கொண்டு முயற்சி செய்து வருகிறார்கள். இத்தொண்டு மிக விரைவில் வெற்றி காண இருக்கிறது என்பது இங்குக் கூடியுள்ள மக்கள் உணர்ச்சியால் நன்கு தெரியப்படுகின்றது. நான் சைவ சமயத்தில் பிறந்துவிட்டேன். ஆகையால், இவருடன் ஆரம்ப காலத்திலிருந்தே ஒத்து வேலை செய்யும் வாய்ப்புக் கிடைக்காமற் போய்விட்டது

சைவ சமயத்தவரைத் திருத்துவதையே எனது நோக்கமாகக் கொண்டு, சமஸ்கிருதம் கற்று சைவ சமய உண்மைகளை ஆராயப் புகுந்தேன். பார்ப்பனர்களின் தந்திரங்களை, சூழ்ச்சிகளை அறிந்து சில வெளியீடுகளின் மூலம் அவைகளை அம்பலமாக்கினேன். பார்ப்பனர் தம்மை உயர் ஜாதி என்று சொல்லிக் கொள்ளத் தகுதியற்றவர்கள் என்பதை ஆதாரத்துடன் விளக்கிக் காட்டினேன். இதன் பயனாய் பார்ப்பனர்கள் என்னை "வேத விரோதி' என்றும் "பார்ப்பனத் துவேஷி" என்றும் பழித்துக் கூறி எம்மவரிடத்திலேயே எனக்குப் பகைமையை மூட்டிவிட்டனர். இதனால் நான் எடுத்த காரியம் எதிர் பார்த்த பலனைத் தராமல் போய்விட்டது. என்றாலும் இந்த 55-ஆண்டுகளில் சுமார் 40-நூல்கள் வரை தமிழில் வெளியிட்டேன், ஆங்கிலத்திலும் சில நூல்கள் வெளியிட்டுள்ளேன். இவைகள் இளைஞர் உள்ளத்தில் ஓரளவுக்கேனும் எழுச்சியை உண்டாக்க பயன்

பட்டிருக்கும் என்று நினைக்கிறேன். செல்வந்தர்களும் மடாதிபதிகளும் ஆரிய தாசர்களாய் ஆகிவிட்ட போதிலும் இந்நாட்டு இளைஞர்கள், தமிழ் அணங்குகள் யாவரும் பெரியார் சொற்படி அறப்போர் துவக்கி ஹிந்தியை ஒழிப்பதில் விரைவில் வெற்றிகாண வேண்டுமென்று கூறிக்கொண்டு என் தலைமை உரையை முடித்துக் கொள்கிறேன்.

★

# 2. பெரியார் ஈ. வெ. ரா.

பேரன்பு மிக்க தலைவர் அவர்களே! தாய்மார்களே! தோழர்களே!

இந்த மாநாடு ஹிந்தி எதிர்ப்பு மாநாடு என்ற பேரால் துவக்கப்பட்டிருந்தபோதிலும் நமது மாகாணத்தில் ஆட்சியாளர்கள் ஹிந்தியைக் கட்டாய பாடமாகக் கொண்டுவந்து புகுத்தியுள்ளார்களே, அதற்காக நாம் என்ன செய்ய வேண்டும் என்று சிந்தித்து முடிவு செய்யவே இம்மாநாடு கூட்டப்பட்டதாகும். இம்மாநாட்டில் செய்யப்படப்போகும் முடிவு ஒரளவுக்கு முன் கூட்டியே அறிந்து கொள்ளக்கூடியதேயாகையாலும் எதிர்த்துப் போராடினாலன்றி ஹிந்தி இம் மாகாணத்தை விட்டு ஒழியாது என்பதும், ஒரளவுக்கு உய்த்துணரக் கூடியதேயாகையாலும் இவ்வாறு தலைப்புகொடுத்து மாநாடு கூட்டப்பட்டுள்ளது. இம்மாநாடு தனிப்பட்ட கட்சிக்காரரோ, தனிப்பட்ட மதத்தவரோ அல்லது தனிப்பட்ட ஒரு கோஷ்டியாரோ, நடத்தும் மாநாடாக இல்லாமல், திராவிட மக்கள் அல்லது தமிழ் மக்கள் எல்லோருடையவுமான மாநாடாக நடைபெறுகிறது. இம்மாகாண முஸ்லீம் லீக் பிரதிநிதியாக தோழர் அப்துல் மஜீத்தும், கிருஸ்துவர் பிரதிநிதியாக தோழர் அருள் தங்கையா அவர்களும் தாழ்த்தப்பட்ட திராவிடர்கள் பிரதிநிதியாக தோழர் வி. பி.

எஸ். மணியர் அவர்களும், தமிழ்ப் புலவர்கள், கவிவாணர்கள் இலக்கிய நிபுணர்கள் இவர்கள் பிரதி நிதியாக வணக்கத்துக்குறிய மறைமலை அடிகளாரும், பெரியார் கல்யாண சுந்தரனாரும் இம் மாநாட்டில் கலந்து கொண்டுள்ளார்கள். ஆகவே இதை யாரும் சுலபத்தில் சுயமரியாதைக்காரர் மாநாடு என்றோ கருப்புச்சட்டைக்காரர்கள் மாநாடுஎன்றோ நாஸ்திகர்கள் மாநாடு என்றோ கூறிவிட முடியாது. திராவிட கழகத்தவர் மாநாடு என்றும் யாராலும் கூறிவிட முடியாது. ஏன்?

## பல கட்சி பிரமுகர்கள்

தொழிலாளர் இயக்கம் தவிர்த்து வேறு எந்த இயக்கத்திலும் வெகுவாக ஈடுபடாதவரான நண்பர் திரு. வி. க. அவர்களும் இம்மாநாட்டில் கலந்து கொண்டுள்ளார். மேலும் நமது எதிர்க்கட்சியாக கருதப்பட்டு வரும் காங்கிரஸ் பிரமுகரும் அதிலும் இன்று அமைச்சர் பதவியில் வீற்றிருப்பவர்களுக்கு அப்பதவிகளை அடைய பேருதவி செய்தவருமான தோழர் சிவஞான கிராமணியாரும், தமிழ் எழுத்தாளர் தலைவர் நாரண துரைக்கண்ணன் அவர்களும் இம்மாநாட்டில் கலந்து கொண்டுள்ளார்கள். தோழர் துரைக்கண்ணன் அவர்களை நான் இன்றுதான் சந்தித்தேன். தோழர் கிராமணியார் அவர்கள் இன்று சந்தித்துப் பேசுவது 2-வது முறைதான். முதல் முறை வெறும் கும்பிடு போட்டேன். இரண்டாவது இலேசாகப் பேசியிருக்கிறேன். இன்றுதான் மூன்றாம் முறையாக சந்திக்கிறேன். மற்ற எக்கட்சியிலும் சேராத தோழர் டாக்டர் ஏ கிருஷ்ணசாமி அவர்களு ம உற்சாகத்தோடு இதில் பங்கெடுத்துக்கொண்டுள்ளார். தோழர் பாரதிதாசன் அவர்கள், சி. என். அண்ணாத்துரை அவர்கள் ஆகியோரும் கலந்துகொண்டுள்ளனர் மற்றும் சென்னைக்கு வெளியில் இருந்து, தமிழ் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் சுமார் இரண்டாயிரம் மூவாயிரம் பேர்களுக்கு மேல் வந்து கலந்து கொண்டுள்ளார்கள். தாய்மார்களும்

ஏராளமாக வந்து கலந்து கொண்டுள்ளார்கள். போதிய அவகாசம் மட்டும் கொடுத்திருந்து மாநாட்டை நடத்தியிருப்போமானால் இம்மாநாட்டுக்கு தூத்துக்குடியையும்தோற்கடிக்கும் அளவுக்கு ஜனத்திரளை சமுத்திரம்போல் கூட்டியிருக்கலாம் மற்றும் விருதுநகர் வி. வி. ராமசாமி, பி. பாலசுப்ரமண்யம், டி. ஷண்முகம் ஆகிய தோழர்கள் வந்திருக்கிறார்கள்.

## போட்டா போட்டி மாநாடல்ல

ஆகவே ஏதோ அரசியல் போட்டா போட்டிக்காக கூட்டப்பட்ட மாநாடல்ல இது. இன்று நடைபெற்று வரும் மாகாண ஆட்சியைக் கவிழ்த்தே யாகவேண்டும் என்ற கருத்தில் அல்ல, இம்மாநாடு கூட்டப்பட்டிருப்பது. இன்று நடைபெற்று வரும் அரசாங்கத்தை பொது மக்கள் சுயராஜ்ய அரசாங்கம் என்று தான் இன்னமும் கருதி வருகிறார்கள். அப்படியே பலர் நினைத்துக்கொண்டு தான் இருக்கிறார்கள். அரசாங்கத்தாரும் அப்படித் தான் தம்மை விளம்பரப்படுத்திக் கொள்கிறார்கள். அத்தகைய சுயராஜ்ய சர்க்காரை லேசில் கவிழ்த்துவிட முடியாது என்பதும் எங்களுக்குத் தெரியும். கவிழ்க்க வேண்டுமென்ற விருப்பமும் நமக்கில்லை. மறுபடியும் வெள்ளையனே வந்து ஆட்சி புரியவேண்டும் என்ற மனப்பான்மையும் நமக்கில்லை. மேலும் இன்று நடக்கும் மாகாண ஆட்சியைக் கவிழ்ப்பதில் பயனுமில்லை.

## ஆட்சியைக் கவிழ்க்கும் நோக்கமில்லை

மாகாண ஆட்சியைக் கவிழ்ப்பதென்றால் ரெட்டியாரையும், பக்தவத்சலத்தையும், அவினாசிலிங்கனாரையும் ஆகிய இவர்களைத் தான் நாம் கவிழ்க்க வேண்டும். இவர்களைக் கவிழ்ப்பதால் நமக்கு தான் புண்யமென்ன ? இவர்கள் இல்லாவிட்டால் ஒரு ஐயரோ ஒரு ஐயங்காரோ தான் இவர்களுக்குப் பதிலாக மந்திரியாக இருப்பார்.

ஆகவே இவர்கள் இருப்பது நமக்கு முழு திருப்திதான். இதையும் நாம் ஓரளவுக்கு நமது வெற்றியாகவே கருது

கிறோம். இந்த அளவுக்கேனும் வெற்றி கண்டுவிட்டோமே என்று கொஞ்சம் பெருமைகூட அடைகிறோம்.

இதற்கு மேலும் வெற்றி கிடைத்து மந்திரிகளை நியமிக்கும் உரிமை எனக்கே வந்துவிடுவதாக வைத்துக்கொள்வோம். அப்போதுகூட இத்தனை திராவிடர்களை மந்திரியாகப் போட நானே கொஞ்சம் அச்சப்படலாம், அல்லது வேறு யாராவது என்னை ஏமாற்றினாலும் ஏமாற்றிவிடலாம். ஆகவே இவர்களைப் பதவியிலிருந்து வெளியேற்றும் எண்ணம் நமக்குச் சுத்தமாக இல்லவே இல்லை.

## எவனோ வைத்த வினைக்கு...!

10 ஆண்டுகளுக்கு முந்தி மந்திரிசபையில் இருந்த ஆதிக்கம் வேறு. இன்றுள்ள ஆதிக்கம் வேறு. 10 ஆண்டுகளுக்கு முந்தி ஹிந்தியைக் கட்டாய பாடமாகக் கொண்டு வந்தபோது தோழர் ராஜகோபாலாச்சாரியார் பிரதம மந்திரியாயிருந்தார், அவரே மேற்படி திட்டத்தையும் கொண்டு வந்தார்- இன்றோ நிலைமை வேறு. இன்று முதன் மந்திரியார் ரெட்டியார், கல்வி மந்திரியார் அவினாசியார். இருவரும் நம்மவர்கள்; திராவிடர்கள். இவர்களோடுதான் போராடவேண்டியிருக்கிறது, எவனோ வைத்த வினைக்கு அண்ணன் தம்பிகள் சண்டையிட்டுக்கொள்வதுபோல் இருக்கிறது. இதனால்தான் முன்னைய கட்டாய இந்தியன்றிருந்த அளவுக்கு போதிய உற்சாகம் இன்று கிளம்புவது கஷ்டமாயிருக்கிறது.

இவர்கள் தங்கள் இடங்களைக் காலி செய்துவிட்டு இரண்டு பார்ப்பனர்களிடம் தம் பதவியை ஒப்புவித்து விடுவார்களானால், இன்றேகூட இரண்டொன்று பார்த்துவிடுவோம். அத்தகைய துணிவு பிறந்துவிடும்.

## வலது கை இடது கையை அடிக்கும் நிலை!

இன்றுள்ள நிலையோ வலது கை இடது கையை அடிப்பதாகத்தான் இருக்கிறது. இருந்த போதிலும் இங்கு கூடியுள்ள தாய்மார்களையும் சிறுவர் சிறுமிகளையும் பார்க்கும்போது மந்திரிகளுக்கு அவர்களுடைய பதவியைப் பாதுகாத்துக் கொடுப்பதைவிட இவர்களின் தன்மானத்தைப் பாதுகாத்துத் தருவது தான் நமது முக்கிய கடமை என்று தீர்மானிக்கவேண்டியிருக்கிறது.

போனதடவைராஜகோபாலாச்சாரியார்மந்திரியாகஇருந்தார். அப்போது அவர் தனது ஆட்சியை ஒழிக்கப் பார்க்கிறோம் என்று குற்றங் கூறி தப்பிக்கப்பார்த்தார். இன்றோ அத்தகைய சாக்குப்போக்கு சொல்லமுடியாது ரெட்டியாராலோ, அவினாசியாராலோ. உள்ளபடி சொல்கிறேன், ஓமந்தூராருக்கும் எனக்கும் என்ன விரோத மிருக்கிறது, அவரைக் கவிழ்க்கப் பார்க்கிறேன் என்று சொல்ல? ஒரு சீனியர் வக்கீல் தன்னிடம் வேலை கற்றுப் பழகிய ஒரு ஜூனியர் வக்கீலுக்கு நீதிபதி உத்யோகம் கிடைத்தால் அதை எவ்வளவு பெருமையாகக் கொள்வாரோ, அவ்வளவு பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேனே நான் ரெட்டியார் பிரதம மந்திரியாக இருப்பது குறித்து. நான் காங்கிரஸில் இருந்த போது என்னுடைய கைப்பெட்டியை எடுத்துக்கொண்டு என்னுடன் வந்தவர்தானே, இவர். நான்தானே ஒவ்வொரு முறையும் இவரைத் தமிழ்நாடு காங்கிரஸ் காரியக்கமிட்டிக்கு அங்கத்தினராக நியமித்தேன். அவருக்கு என்னிடத்தில் எவ்வளவு அன்பும், மரியாதையும் பக்தியும் உண்டென்று அவரையே கேட்டுப்பாருங்கள், தெரியும். அவர் மந்திரியாராகுமுன் அதுவரை அவர் ஈரோடு பக்கம் வந்தால் என்னைப் பார்க்காமல் திரும்பமாட்டாரே! அப்படிப்பட்ட ஒருவர் பிரதம மந்திரியாக வந்திருப்பது குறித்து நான் அகமகிழ்வேனா அல்லது அவரை ஒழிக்கப் பார்ப்பேனா? அன்று அவருடைய பதவிக்கு போராட்டம் வந்த காலத்து

முடிவறியும் ஆவலுடன் தூக்கமின்றி எவ்வளவு நேரம் கண் விழித்துக் கொண்டிருந்தேன், தெரியுமா, நான். ஆகவே அவரை ஒழிக்கப் பார்க்கிறேன் என்று என்மீது அவரால் கூட கண்டிப்பாக குற்றம் சாட்ட முடியாது.

## கல்வி மந்திரியார் யார்?

அடுத்தபடியாக கல்வி மந்திரியாரை எடுத்துக்கொண்டாலோ, அவர் என் ஜில்லாக்காரர். எங்கள் குடும்பத்துக்கும், அவருடைய குடும்பத்துக்கும் நெருங்கிய சம்பந்தமும், மொய்முறை வழங்கலும் உண்டு. மேலும் அவர் என்னுடைய நம்பிக்கைக்கு வேறானவரும் அல்ல. இன்னும் கூறப்போனால் தன்னுடைய சட்டசபைப் பதவியைக் கூட ஒரு சமயம் எனக்காக விட்டுக்கொடுக்க வேண்டி ராஜாஜியை அழைத்துக்கொண்டு என் வீடு தேடி வந்தவர்தான் அவர். அதுவும் நான் காங்கிரசை விட்டு வெளியேறி, எதிர்க்கட்சியில் இருந்தபோது இது நடந்ததாகும். இப்படியிருக்க அவர் ஒழியவேண்டுமென்றா நான் நினைப்பேன்? எந்த காங்கிரஸ் மந்திரிகளைப் பற்றி நாணயக் குறைவான எண்ணம் எனக்கிருந்தாலும், இந்த இரண்டு பேர்களுடைய நாணயத்தைப் பற்றி எனக்குக் கொஞ்சம்கூட சந்தேகம் கிடையாதே. 'இவர்கள் லஞ்சம் வாங்குவதில்லை என்று உறுதி கூறி, உன்னால் கொதிக்கும் எண்ணையில் கைவிட முடியுமா' என்று கேட்டால், உண்மைக்காக கொதிக்கும் எண்ணெய்க்கு கையைச் சுடாமல் செய்ய சக்தி இல்லாவிட்டாலும், கை வெந்தாலும் பரவாயில்லை என்று என் கையைக்கூட எண்ணெயில் விடத் தயாராயிருப்பேனே நான்! இருவரும் குற்றமற்றவர்கள்தான். சுயநலமற்றவர்கள் தான்.

## அடிமைப் புத்திக்கு என்ன செய்யட்டும்!

என்றாலும் இவர்களுடைய அடிமைப் புத்திக்கு நான் என்ன செய்யட்டும்? அந்த அடிமைத்தனத்திலிருந்து அவர்

களால் மீள முடியவில்லையே. அவர்களுடைய பதவியை காப்பாற்றிக்கொள்ள அவர்களுக்கும் வேறு வழியில்லையே. பதவிப் பித்து இல்லாவிட்டால், அந்த அடிமைப் புத்தி இல்லாவிட்டால், ஹிந்தி தமிழைக் கெடுக்கும் என்று அறிந்திருந்தும் அதைத் தமிழ் நாட்டில் நுழையவிட்டிருப்பாரா? தன் புத்தியைத் தான் அடிக்கடி மாற்றிக்கொண்டிருப்பாரா?

ஆகவே நாம் ஹிந்தியை எதிர்ப்பது மந்திரி சபைமீது நமக்குள்ள விரோதத்தாலோ, காங்கிரஸ் கட்சியின் மீது நமக்குள்ள விரோதத்தாலோ அல்ல என்பதை எல்லோரும் தெளிவாக உணர்ந்து கொள்ளல் வேண்டும். ஹிந்தியால் வர இருக்கும் கேடு கருதித்தான் அதை வன்மையாக எதிர்க்கிறோம்.

## இந்தியும் வாந்தியும்!

வேடிக்கையான ஒரு சம்பவம் நண்பர் ஒருவர் வீட்டில் நடந்ததாம். நண்பர் தம் மனைவியோடு பேசிக்கொண்டிருந்த போது வெளி வராந்தாவில் இருந்து ஏதோ மகன் வாந்தி எடுப்பதுபோல் சத்தம் கேட்டு "அடி! அடி! வெளியே போய்ப் பாரடி. பையன் வாந்தி எடுக்கிறான்போல் இருக்கிறது! அஜீர்ணமோ என்னமோ!" என்றாராம். ஆமாம், இந்த ரேஷன் காலத்திலே அஜீர்ணம் வேறு வந்துடுத்தா? என்று சொல்லிக் கொண்டு எழுந்து போய் பையனைப் பார்த்து 'ஏண்டா ஒக்காளம் வருகிறது?' என்று கேட்டாளாம். பையன் ஒன்றுமில்லை அம்மா, ஹிந்தி படிக்கிறேன் என்று சொன்னானாம். அதைக் கேட்டுவிட்டு வந்து கணவனிடம் "இந்தி எழவு பையனை அப்படி செய்கிறது" என்றாளாம், மனைவி. அப்படியானால் ஏதாவது கேடு வந்து விடப்போகுது, இனி. ஹிந்தி படிக்கவேண்டாமென்று சொல்லிவிடு. அவன் படிப்பு கெட்டுப்போனாலும் பரவாயில்லை. ஏதோ டியூஷனாவது சொல்லிக் கொடுத்துவிடலாம் என்றாராம் கணவன். இப்படித்தானாகும் நம் குழந்தைகள்

நிலை கட்டாய ஹிந்தியை இந்நாட்டில் நாம் அநுமதித்து விட்டால்.

## கல்வி இலாகா கேவல முடிவுகள்

ஹிந்தி நம் நாட்டு சீதோஷ்ணத்திற்கு பொருத்த மற்றது. நம் நாக்குக்கு ஏற்க முடியாதது. நமக்குத்தேவையற்றது. "ஹிந்தி மனிதர்களை மந்திகளாக்கும்!" என்று அன்பர் திரு. வி. க. அவர்கள் கூறினார்கள். அது உண்மையிலும் உண்மை உண்மையிலேயே ஹிந்தி ராமாயணத்தில் தான் அதாவது வடமொழி ராமாயணத்தில் தான் நாம் முதலாவதாக குரங்குகளாக ஆக்கப்பட்டிருக்கிறோம். குரங்குகளாக சித்தரிக்கப்பட்டிருக்கிறோம். அதைப் புகுத்துவது தான் இந்தியின் தத்துவம். எனவே தான் அதை இவ்வளவு கடுமையாக எதிர்த்து நிற்க வேண்டியிருக்கிறது. மந்திரியார் நம்மவர் ஆயிற்றே என்று எவ்வளவு காலம் நாம் சகித்துக் கொண்டிருக்க முடியும்? அதிலும் கல்வி இலாக்கா முடிவுகள் வரவர மிக மிகக் கேவலமாக ஆகிக்கொண்டு போகிறது. தோழர், சர். லட்சுமணசாமி முதலியார் போன்ற அறிஞர்கள் எவ்வளவு எடுத்துக் கூறியும் கல்வி மந்திரியார் அறிஞர்களைக் கலந்து கொண்டு தம் கல்வித் திட்டத்தை அலசிப் பார்ப்பதில்லை. அறிஞர்களைக் கொண்டு எதுவும் தீர்மானம் செய்வதில்லை. சில சமயம் தன் இலாக்கா அதிகாரிகளுக்குக் கூடத் தெரியாமல் எதேச்சையாக ஜில்லா கல்வி அதிகாரிகளுக்கும் சில சமயம் கலாசாலை அதிகாரிகளுக்கும் மற்றும் கலாசாலை உபாத்தியார்களுக்கும் கூட கடிதம் எழுதி விடுகிறாராம். இதன் பயனாய் ஊழல்கள் மிகவாக மலிந்து விட்டனவாம். ஆகவே தான் வாரத்துக்கொருமுறை பல்டி அடிக்க வேண்டியிருக்கிறதாம்.

## விளையாட்டுப் போராட்டமல்ல!

இந்த இந்தி போதனை விஷயத்தில் முதலில் நியமிக்கப்பட்ட கல்வி முறை நிர்மாணக் கமிட்டியார் தமிழ் நாட்டில்

ஹிந்தி விருப்ப பாடமாக இருக்கட்டும் என்று சிபார்சு செய்தார்களாம். அதன்படிதான் முதல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாம். பிறகு சிலரது தூண்டுதலின் பேரில் அதே கமிட்டியில் இந்தி கட்டாய பாடமாக்கப்பட வேண்டுமென்பதற்கு ஆதரவாயிருந்த ஒரு சிலரை மட்டும் கொண்டு மறுபடியும் தந்திரமாக ஒரு கிளைக் கமிட்டி ஒன்றை ஏற்படுத்தி ஹிந்தியை கட்டாயபாடமாக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டதாம். அதுவும் முன்னைய கமிட்டியார் எந்த ஒரு மாணவனோ, மாணவியோ ஹிந்தியைக் படிக்க இஷ்டப்படாவிட்டால் அவர்கள் மீது ஆசிரியரோ, பெற்றோரோ கூட ஹிந்தியை வற்புறுத்தக்கூடாது என்று தெரிவித்திருந்தார்களாம்.

இரண்டாவதாக நியமிக்கப்பட்ட சப்-கமிட்டியாரால் அவ்வளவு உதாசீனம் செய்யப்பட்டுவிட்டது.

ஆகவே தோழர்களே! நாம் இவ்வளவு கேடு செய்யத் துணிந்தவர்களோடு ஒரு போராட்டம் நடத்துவதென்றால் அது வெறும் விளையாட்டுப் போராட்டமாக இருக்காது. பிறகு தீர்மானங்கள் வரும். முறைப்படி நிறைவேற்றப்படும். தீர்மானங்களை நிறைவேற்றுவது பெரிதல்ல. அவற்றை நடத்திக் காட்டுவதுதான் பெரிது. முன் ஹிந்தி நம் மாகாணத்தில் நுழைக்கப்பட்டபோது ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்தவர்கள் வெள்ளையர்கள். அவர்கள் ஒரு நாகரிக பரம்பரையைச் சேர்ந்தவர்கள். மனிதத்தன்மையை அறிந்தவர்கள். மேலும் உலக வாக்குக்கு பயந்தவர்கள்.

## நாகரிகம் தெரியாத ஆட்சியாளர்!

ஆனால் இன்று ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்பவர்களோ நாகரிகம் தெரியாதவர்கள் மட்டுமல்ல தாமே நாகரிகத்தின் பிரதிபிம்பங்கள் என்றுகூட தம்பட்டம் அடித்துக் கொள்பவர்கள். காடுகளில் ஆடு மாடுகளைக் கொன்று தின்று வாழ்ந்துவந்த காட்டுமிராண்டி பரம்பரையைச் சேர்ந்தவர்கள். இன்று நம்மை ஆட்சி புரிபவர்கள் தன்மானமற்றவர்கள்.

தந்திரத்தால் கட்டுப்பாடான பலாத்காரத்தால் ஆட்சியைக் கைப்பற்றியவர்கள்.

ஆகவே வெள்ளையன் "ஆள் கீழே விழுகிறவரை அடியுங்கள்" என்று போலீசுக்கு உத்தரவு கொடுத்தால் இவர்கள் "செத்து பிணமாகி விடும் வரை அடியுங்கள்" என்று உத்தரவிடுவார்கள். அவன், "இவர் அவர் என்று பாரபக்ஷம் பாராமல் அடியுங்கள்" என்றால், இவர்கள் "இன்னார், இன்னாரைப் பார்த்துப் பார்த்து அடியுங்கள்" என்று உத்தரவு போடுவார்கள். அவன், "கண்ணீர் புகை மட்டும் உபயோகியுங்கள்," என்று கூறுவானானால் இவர்கள் "கண்ணீர்ப் புகை ஏன், விஷப் புகை விட்டே கொல்லுங்கள்" என்று உத்தரவு பிறப்பிப்பார்கள். அந்த மாதிரி காட்டு மிராண்டி செயலால்தான் மக்களை அடக்கமுடியும் என்பதில் நம்பிக்கை யுடையவர்கள் இவர்கள்.

## எதற்கும் தயாராவோம்!

ஆகவே எத்தகைய எதிர்ப்புக்கும் நாம் தயாராய் இருக்கவேண்டும் இங்குள்ள திராவிட போலீஸ்காரர்களைக் கூட நம்பமாட்டார்கள். மலையாளத்திலிருந்தோ, கூர்ஜரத்திலிருந்தோ பட்டாளத்தைத் தருவித்து வந்து நம் மீது ஏவி விடுவார்கள். ஏற்கெனவே கூட ஒரு 2000 பேரைச் சென்னைக்குத் தருவித்து வைத்திருப்பதாகத் தெரிகிறது. இந்த பயங்கர நிலைமையில் தான் ஹிந்தி எதிர்ப்பு நடைபெற வேண்டும்.

சென்ற ஹிந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் இரண்டு பேர் ஜெயிலில் இறந்தார்கள் என்றால், இன்றையப் போராட்டத்தில் 200 பேருக்கு மேலாக வெளியிலேயே இறக்க நேரிடக் கூடும்.

இதை நீங்கள் நம்ப வேண்டும், சற்றேனும் மனிதத் தன்மையோடு நீங்கள் வாழவேண்டுமென்று நினைப்பீர்களானால், ஹிந்தியை ஒழிக்க நீங்கள் கட்டாயம் கங்கணம் கட்டிக்கொள்ள வேண்டும்.

தாய்மார்களும் போராட்டத்திற்குத் தயாராக வேண்டும். என்ன விலை கொடுத்தேனும் நாம் போராட்டத்தில் வெற்றி பெறவேண்டும். இது கடைசிப் போராட்டம். ஆகவே வெற்றி அல்லது தோல்வி. இரண்டிலொன்று பார்த்துவிடத்தான் வேண்டும்.

## பண்டைப் பெருமை பேசிப் பயனில்லை

அழகான மேடைப் பேச்சினாலோ, பண்டைச் சரித்திரப் பெருமையினாலோ பயனில்லை. தோழர் அண்ணாத்துரை, "நானும் வந்து விட்டேன், போராட்டத்தில் முன் நிற்க," என்று சற்று முன் கூறியதுபோல் நீங்கள் எல்லோரும், இத்திராவிட நாட்டிலுள்ள ஒவ்வொரு திராவிட ஆணும், பெண்ணும், சிறுவனும், சிறுமியும் முன்வர வேண்டும்.

நான் ஒன்றும் உங்களுக்குப் பூச்சி காட்டவில்லை. உண்மையைத்தான் கூறுகிறேன். நினைத்தால் இரவே கூட உத்திரவை மாற்றி விடலாம் என்கிற நிலையில் இல்லை அது. அந்த உரிமை இவர்கள் கையில் இல்லை. அவ்வுரிமை இவர்களின் சூத்திரதாரிகளான பார்ப்பனர்களிடம் இருக்கிறது. அவர்களுக்கு ஆதரவோ வட நாட்டாரிடம் இருக்கிறது. அந்த இருவரும் சேர்ந்து நம் மந்திரிகளை ஒழிக்கும் வரை தூங்கமாட்டார்கள். ஆகவே வடநாட்டவர்களின ஆதிக்கம், பிணைப்பு நம் மாகாணத்தைவிட்டு ஒழிந்தால்தான் ஹிந்தியும் நம் மாகாணத்தைவிட்டு ஒழியும் என்பதை மனதில் பதிய வைத்துக் கொள்ளுங்கள். பிறகு தெரியும் ஹிந்தி ஒழிவதில் உள்ள சிரமம். நமது குழந்தைகளுக்கு 1-வது வகுப்பு, 2-வது வகுப்பு படிக்கக் கூட பள்ளியில் இடமில்லை. என்று நகர்ப் புறங்களில் கூறப்படுகிறது. அதாவது போதிய பள்ளிக் கூடங்களில்லை. வாத்தியார்கள் இல்லை. என்றாலும் ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒரு ஹிந்தி வகுப்பும், ஹிந்தி வாத்தியாரும் வைத்துக் கொள்ள வேண்டுமாம். யார்

அப்பன் வீட்டுப் பணம் கொள்ளை போவது இதற்கெல்லாம்? ஏற்கனவே பஞ்சத்தில் அடிபட்டுப் பஞ்சைகளாகக் கிடக்கிறோம். மேற்கொண்டு பள்ளிக் கூடப் பிள்ளைகள் சம்பள உயர்வு வேறு. ரூ. 2-12 கொடுத்தவர்கள் இப்போது ரூ. 5-4 கொடுக்க வேண்டும். ரூ. 5-4 கொடுத்தவர்கள் ரூ. 7-8 கொடுக்க வேண்டும். முன்பு 8 ரூ சம்பளம் கொடுத்தவர்கள் இப்போது இந்த உயர்ந்த தொகையை 10 மாதம் கொடுக்க வேண்டும். ஹிந்தி நுழைவு கல்வித்துறையில் பெருத்த சங்கடமென்றால் கலைத்துறையிலும் அதை விட சங்கடந்தான்.

## கலைகள் உண்டா ?

ஹிந்தி மொழியில் மெச்சத் தகுந்த கலைகளே கிடையாது. அதிலுள்ள கலை யாவும் துளசிதாஸ் ராமாயணமும் கபீர் தாஸ் சரித்திரமும் தான். மனுதர்மமும் பாகவதமும் தான். போதுமா இவை? இவற்றின் தன்மைதான்தெரியுமே, உங்களுக்கு? ஹிந்தி மொழி தலை சிறந்த அறிஞர்களைப் பெற்றெடுக்க வில்லை. என்று திரு. வி. க அவர்கள் குறிப்பிட்டார். ஹிந்தி உற்பத்தி செய்த அறிவாளிகள் யார் என்றால நோகாமல் பதவிக்கு வந்த நேருவையும் அவரது ஐயாவையுந்தான் குறிப்பிட வேண்டும். அவர்களது தியாகம் இன்று அந்தக் கூட்டம் குடும்பத்தோடு கொள்ளை அடிப்பது (உங்களுக்குக் தெரிந்தது) தான். வேறு ஆட்களைக் குறிப்பிட முடியாது. தமிழ் மொழியோ எண்ணற்ற கலைகளையும், கலைஞர்களையும் அறிஞர்களையும், சித்தர்களையும், முக்தர்களையும் தோற்று வித்திருக்கிறது. கலையில்லை. காவியமில்லை, நீதி நூல் இல்லை. நீதி மான்களையும் தோற்றுவிக்க வில்லை. அம்மொழி மூலம் அறியக் கிடக்கும் விஞ்ஞான தத்துவங்களும் இல்லை. ஆகவே 100 க்கு 97 பேர் விரும்பாத அம்மொழி என் இங்கு புகுத்தப்பட வேண்டும்? காரணம் தெரியுமா? இங்குள்ள வைத்தியநாதய்யர், வரதாச்சாரியாரின் கோஷ்டியார் இத்திராவிட நாட்டின் கலைகளையும், கலாச்சாரத்தையும் அடியோடு ஒழித்து இந் நாட்டை

வட நாட்டுக்கு வால் நாடாக்கப் பார்க்கிறார்கள். அது தான் மர்மமே ஒழிய, "ஹிந்தி தேசிய மொழி, ஆகவே எல்லோரும் படிக்கவேண்டும்" என்றுகூறுவதெல்லாம் முழுப்பித்தலாட்ட வார்த்தைகள். ஹிந்தி தேசிய மொழியாயின் எல்லோரும் கட்டாயமாக ஹிந்தியைப் படித்துத் தான் ஆகவே வேண்டும் என்று வெளிப்படையாகக் கண்டிப்பாகக் கூறி விடட்டுமே. ஹிந்தி அல்லது சமஸ்கிருதம் படியுங்கள் என்கிறார்களே அது ஏன்? ஹிந்தி தேசிய மொழியா? சமஸ்கிருதம் தேசிய மொழியா? நீங்கள் சற்று அருள் கூர்ந்து சிந்தித்துப்பாருங்கள். உண்மை அறியுங்கள்.

## தேசியம் என்பது பித்தலாட்டம்

தேசியம் என்பதெல்லாம் பித்தலாட்டங்கள். வடமொழியை நுழைத்து அதன் மூலம் வர்ணாஸ்ரமத்தை நுழைத்து பெருமை மிக்க திராவிட மக்களைச் சூத்திரராக்கி என்றென்றும் அடிமைகளாக ஆக்கி வைத்துக் கொள்ள வைத்திநாதய்யர், வரதாச்சாரிக் கூட்டம் செய்யும் பச்சைப் பித்தலாட்டம் தான். இது நமது தாய்மார்களைச் சூத்திரச்சிகளாக, நமது ஆடவர்களைச் சூத்திரர்களாக, நமது பழங்குடி மக்களைப் பஞ்சமர்களாக, சண்டாளர்களாக, நமது கிருஸ்துவத் தோழர்களையும் முஸ்லிம் தோழர்களையும் மிலேச்சர்கள் ஆக வைத்திருக்க செய்யப்படும் சூழ்ச்சிதான் இது.

இந்த சூழ்ச்சிகளுக்கு நமது அமைச்சர்கள் விபீஷணர்களாக ஆகிவிட்டார்களே என்பது தான் வருத்தமாக இருக்கிறது. ஹிந்தி நுழைவால் உண்மைத் தமிழ் மக்களுக்கு எவ்விதபயனும் ஏற்படாது. கடுகளவு பயன்கூட ஏற்படாது. அதற்கு மாறாக எவ்வளவோ கேடுகள் வந்து சூழும். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக நாம் போற்றிக் காப்பாற்றி வந்து இடைக்காலத்தில் கைவிட்டு தற்போது வெகு கஷ்டப்பட்டு பெற்று வளர்த்து வரும் தமிழ்ப் பண்பு அடியோடு கெட்டுப்போம். கன்னியாதானம் என்பதை வாழ்க்கைத் துணை ஒப்பந்தம் என்று மாற்ற எவ்வளவு சிரமப்பட

வேண்டி இருந்தது? மாங்கல்யதாரணம் என்பதை ஒழிக்க எவ்வளவு இம்சைப் படவேண்டியிருந்தது? மற்றும் தேவையில்லாத சடங்குகளை, புராண இதிகாச குப்பைகளின்மீதும், வெறும் கற்கடவுள், செம்புக்கடவுள் இவற்றின் மீதும் இருந்த மூட நம்பிக்கையையும் மூட பக்தியையும் மாற்ற எவ்வளவு காலம் ஆகியது?

## முற்போக்கு மீண்டும் அழிவதா?

இவ்வளவு முற்போக்கும் மறுபடியும் அழிந்துபோக வேண்டுமென்று நீங்கள் ஆசைப்படுவீர்களா? சூத்திரன் என்ற வார்த்தையைக் கைவிட்டு "திராவிடன்" என்று பெருமிதத்தோடு கூறிக்கொள்ளும் நீங்கள் மறுபடி சூத்திரனாக மாற விருப்பம் கொள்வீர்களா? இந்த முற்போக்கைக் கண்டு அஞ்சும் ஆரிய கூட்டம் பார்ப்பனக் கூட்டம் வடநாட்டாரின் கூலிகளாகி அவர்களுக்கு வால் பிடித்து நம்மவர் சிலரை விபீஷணர்களாக்கிக் கொண்டு தேசிய மொழி என்ற பேரால் நம்மீது வட மொழியைச் சுமத்துகிறது என்றால் நம்மை நம் நாட்டை வட நாட்டாருக்குக் காட்டிக் கொடுக்கிறதென்றால் நாம் அதற்கு இடம் கொடுக்கலாமா?

தோழர்களே! தாய்மார்களே! ஹிந்தியோடு, வடநாட்டாரையும் சேர்த்து ஒழிக்க வேண்டியதுதான். அதற்கான அவசியம் ஏற்பட்டு விட்டது. திராவிடர்—ஆரியர் போராட்டம், அதுவும் பல ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக இடையறாது இருந்து வரும் இப்போராட்டம் இன்று ஒரு முடிவான கட்டத்திற்கு வந்து விட்டது. இதை முடித்து வைப்பது நமக்குப் பெருமையும் கூட. நமது பின் சந்ததியார் போற்றிப் புகழக் கூடிய ஒரு அரிய சந்தர்ப்பத்தில் நாம் இன்று இருக்கிறோம். இந்த சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன் படுத்திக் கொள்ளாவிட்டால் நாம் எதிர் காலத்தில் பின் சந்ததியாரால் எள்ளி நகையாடப்படுவோம் என்பதோடு அவர்களின் துன்பத்திற்கும் அடிமைத் தனத்துக்கும் நாமே காரண பூதர்களாகவும் ஆகிவிடுவோம்.

## குண்டு மார்பில் பாயட்டும்!

போராட்டத்தைத் துவக்குவோம். மானமுள்ள மக்களாகப் போராடுவோம். மானத்தோடு போராடி மடிந்தாலும் தவறில்லை. பின் சந்ததியார் மேலும் வீரத்தோடு போராடி நாம் விட்டுச் செல்லும் பணியைப் பூர்த்திச்குக் கொண்டு வருவார்கள். திராவிடர்கள் மானத்திற்கும், வீரத்திற்கும் பேர் போனவர்கள். ஆகவே இவற்றைக் கைவிடாதீர்கள் குண்டு பட்டு இறந்தீர்கள் என்றாலும் குண்டு மார்பில் பாய்ந்திருக்கட்டும். முதுகில் பாயும்படி நடந்துகொள்ளாதீர்கள். என்றாயினும் ஒரு நாள் சாகப்போகிறவர்கள்தான் நாம். ஆகவே நல்ல காரியத்திற்காக நம் உயிரை நல்ல முறையில் அர்ப்பணித்துச் சாவோம்.

மந்திரிகள் நம்மவராயிற்றே என்ற நினைப்பை மறந்து விடுங்கள். நம்மவர்கள் மந்திரி பதவியை இழக்க நேரிடுமே என்ற பயத்தையும் விட்டொழியுங்கள். ஒரு ஓமாந்தூராரின் இடமோ ஒரு அவினாசியாரின் இடமோ காலியாகுமானால் அந்த இடத்தைப் பார்ப்பனர்களைக்கொண்டு அடைக்க முடியும் என்று நினைக்காதீர்கள். தமிழ் நாடு இன்றுள்ள நிலையில் அது சுலபத்தில் சாத்தியமானதல்ல. ஆகவே, ஹிந்தியை ஒழித்துக் கட்டுவதில் நாம் யாவரும் ஒன்றுபடவேண்டும். இதில் நம் இளைஞர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பேத உணர்ச்சி ஏற்படக்கூடாது. ஹிந்தி படித்தால் தம் மக்களுக்குக் கேடு என்பதை ஒவ்வொரு பெற்றோரும் உணர்ந்து அதை ஒழிக்க முன்வர வேண்டும். நம்மிடையே உள்ள பேத உணர்ச்சிகளை விட்டொழிக்க வேண்டும். சின்னஞ்சிறு குற்றங்களை மறந்து நேரடியாகப் போராட்டத்தில் வந்து ஒவ்வொருவரும் கலந்து கொள்ள வேண்டும்.

இப்பொழுது நடக்கப் போவது தான் உண்மையான ஆரிய-திராவிடப் போராட்டம். நம் மானத்தைப் பணயம் வைத்து நடத்தும் போராட்டம். இதில் ஏமாந்து போனால் பிறகு திராவிடர்களாக இந்நாட்டில் வாழ முடியாது.

சண்டிப்பாக சூத்திரனாகத்தான் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். சர்க்காருக்கு நல்ல வீம்பு வந்திருக்கிறது. ஆகவே எளிதில் நமக்கு விட்டுக் கொடுக்கமாட்டார்கள். ஆகவே தான் திரும்பத் திரு பப் போராட்டத்தினிடையே அநுபவிக்க வேண்டியிருக்கக் கூடிய கஷ்ட நஷ்டங்களைப் பற்றிக் கூற வேண்டி இருக்கிறது.

## அடக்கு முறை தீவிரம்

நம்மை அடிப்பார்கள். நம்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்வார்கள். நமது தாய்மார்களை மானபங்கப்படுத்துவார்கள். வட நாட்டுப் பட்டாளத்தைக் கொண்டு வந்து நமது பெண்கள் மீது ஏவி விடுவார்கள். வீடு புகுந்து கொள்ளையடிக்கச் செய்வார்கள். அப்படிப்பட்ட நிலை கட்டாயம் வரும் அந்த நிலையை எப்படியும் ஆட்சியாளர்கள் வரவழைத்துக் கொள்வார்கள். நமது நாட்டு சுதந்திரமும் தனிமையும் இந்தப் போராட்டத்தின் வெற்றியைப் பொறுத்துத் தான் இருக்கிறது.

பிரிவினைக்கு இடம் கொடாமல் இருக்கத்தான் நமது பிரிவினை உணர்ச்சியை அழிக்கத்தான், அவசர அவசரமாக ஹிந்தியைக் கொண்டு வந்து புகுத்துகிறார்கள். இது அதிருஷ்ட வசமாக எல்லோரும் ஒன்று சேரக் கூடிய வாய்ப்பாக இருக்கிறது. மற்ற காரியங்களில் நாமெல்லாம் சுலபத்தில் ஒன்று சேர முடியாது.

இது மொழிப்போராட்டம் மட்டுமில்லை. கலைப்போராட்டம். கலாசாரப் போராட்டம். மானபிமானப் போராட்டம் என்று கூட சொல்லுவேன். இது உரிமை வேட்கைப் போராட்டமாகும். இப் போராட்டத்தின போது எந்த ஒரு திராவிடனாலும், எந்த ஒரு உண்மைத் தமிழ் மகனாலும் தாங்கிக் கொண்டிருக்க முடியாது.

இதை எல்லோரும் அறிந்து கொள்ள வேண்டும். சில நாட்களுக்கு மாணவர்களுக்கு படிப்பில்லா விட்டாலும் பர

வர்யில்லை யென்று, தம் பிள்ளைகளை பள்ளிக்கூடங் களுக்கு அனுப்பாமல் இருக்க வேண்டியது தான். மாணவர் கள் மட்டுமென்ன? அவர்களுக்கும் மனிதத் தன்மை வேண்டமா? தன்மானம் வேண்டாமா? ஏழை மக்களிட மிருந்து வரிப்பணம் வாங்கி அதை ஹிந்திச் சனியனுக்கா அழ வேண்டும்? இந்த அவினாசியாருக்கு எந்த அளவுக்கு மூளை யிருக்கிறதென்று பாருங்கள்! ஒரு குழந்தையை 6 வயதில் அல்லது 7 வயதில் பள்ளியில் சேர்க்கிறோம். 12 வது வயதில் 5 வது வகுப்பு முடிகிறது. 19 வது வயதில் 6-ம்பாரம் முடிகிறது. அப்புறம் கல்லூரிப்படிப்பு 4 வருடம் ஆக 23 அல்லது 24 வயதில் தான் பி. ஏ. பட்டம் பெற முடிகிறது. இதற்குள்ளாக எவ்வளவு பணம் வீணாக்கப் படுவது? இப் படிப்பால் பெறக் கூடிய பயன்தான் என்ன? இவ்வளவு கால செலவையும்பொருட் செலவையும் குறைக்க மந்திரியார் ஏதாவது திட்டம் தீட்டினாரா? அதிகப்படியான ஆரம்ப பாடசாலைகள் ஏற்படுத்தல், ஏழை எளியவர்கள் படிப்பதற்கான இலவச பள்ளிகள் ஏற்படுத்தல் கிராமந் தோறும் பாடசாலை இருக்கும்படி செய்தல், ஆகியவற்றிலும் தொழிற் கல்வியைப் பெருக்கல் ஆகியவற்றிலும் கவனம் செலுத்துவதை விட்டு, ஒன்றுக்கும் உருப்படாத இந்த இந்தி மொழியை ஏன் கட்டி அழத் துணிந்து விட்டார்? காரணம் இது தான். பிரிவினை உணர்ச்சி தலை தூக்கு முன் அதை அடியோடு ஒழித்துக்கட்ட வேண்டும். மக்களுக்கு ஏற்பட் டுள்ள தன்மான உணர்ச்சி வேகமடையுமுன் அவர்களை அடிமைகளாக்க வேண்டும் என்ற வட நாட்டாரின் திட்டத் திற்கு அடி பணிந்து விட்டதுதான்.

## வம்டக்கு வரும் அரசியலார்

ஆகவே நாமாக வம்புக்கு போகவில்லை. வம்பை வர வழைத்துக் கொள்ளுபவர் அரசியலார் தான். மறுபடியும் கூறுகிறேன். இது அரசியல் போராட்டமல்ல. இனப் போராட்டம் கலைப் போராட்டம். மனிதத் தன்மை பாதுகாப்புப் போராட்டமென்று. தென்னாட்டவரின் மனி

தத் தன்மையை அழித்து இதையும் ஆரிய வர்த்தத்தோடு சேர்த்துக்கொள்ள செய்யப்படும் சூழ்ச்சியின் முதல் படிதான் கட்டாய ஹிந்தி நுழைப்பு.

ஆகவே நாம் இதை எதிர்த்துத்தான் ஆக வேண்டும். ஒரு வேளை ஆந்திரர்கள் ஆரிய வர்த்தத்தில் சேர்ந்து விடுவார்களோ என்று கூட நினைக்க வேண்டியிருக்கிறது. எனவே எவ்வகை யாயினும் இதை எதிர்த்துப் போராடியே தீருவோம். இப்போராட்டம் தென்னாட்டுச் சரித்திரத்தில் திராவிட நாட்டுச் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்பட வேண்டிய மகோன்னதப் போராட்டமாக அமையும். இப்போராட்டத்தில் வெற்றியின்றேல், தமிழ் நாடு போம். தமிழ்க் கொடிபோம். தமிழன் சிறப்பெல்லாம் தகர்ந்துபோம். நியாயம் நமது பக்கத்தில் தான் இருக்கிறது. மக்கள் ஆதரவும் நமது பக்கத்தில்தான் இருக்கிறது.

## தமிழ் காக்க வாரீர் !

எங்களுக்கும் வயதாகி விட்டது. நாங்களும் வெற்றி காண ஆசைப்படுகிறோம். ஆகவே தன்மானத் திராவிடர்காள் ! தமிழர்காள்! வெற்றி காணப் போராட்டத்தில் ஈடுபட முன் வாருங்கள். யார் எந்தக் கட்சியில் இருந்தாலும், தன்மானமிருந்தால் தமிழ்காக்க முன் வாருங்கள். "சாவேன் அல்லது வெற்றியோடு மீள்வேன்" என்ற உறுதியோடு முன் வாருங்கள். போராட்டத்தில் வெற்றிக்கு ஆக ஒழிந்துபடவும் தயாராக முடிவு செய்துகொண்டு முன் வாருங்கள். அப்போதுதான் வெற்றி நிச்சயம் கிடைக்கும்" என்று கூறி முடித்தார்.

★

# 3. திரு. வி. க.

## திறப்புரை

பேரன்புமிக்க தாய்மார்களே! தோழர்களே!

தமிழிலே பிறந்து தமிழிலே வளர்ந்து தமிழிலே நினைந்து தமிழிலேயே எழுதி தமிழிலேயே பேசி தமிழை வளர்த்து வரும் எனது குருநாதர் மறைமலை அடிகளாருக்கு எனது வணக்கத்தை முதலில் தெரிவித்துக் சொள்கிறேன்.

இங்கு தமிழை காக்கக் கூடியுள்ள கூட்டம் மிகப் பெரிது. மண்டபத்தில் உள்ள மக்கள் ஒரு பங்கு என்றால் 10 பங்கு மக்கள் வெளியில் கூடியிருக்கிறார்கள். ஆகவே நீங்கள் சற்று அமைதியாக இருக்கவேண்டும். எடுத்த காரியத்தை திறம்பட நடத்த முதலாவது வேண்டுவது அமைதி, அமைதி, அமைதி என்று மும்முறை சொல்லுவேன். நீங்கள் அமைதியாக இருந்தால்தான் என் போன்றாரின் வார்த்தைகளைச் செவ்வனே செவி மடுக்கமுடியும். உடல் நலிவு காரணமாக சென்ற 20 நாட்களாகப் படுக்கையிலேயே இருந்து இன்றுதான் மாநாடு காரணமாக படுக்கை யறையிலிருந்து வெளி வந்துள்ளேன். ஆகவே என்னால் உரத்த குரலிலேயோ, மிக விரிவாகவோ பேச இயலாது. அடிகளாரான நமது தலைவரும் மிக மெல்லிய் குரலில் தான் பேசுவார். ஆகவே நீங்கள் யாவிரும் ஒரே மனிதன் கேட்பதுபோல் அமைதியோடு ஒருமைப் பாட்டோடு செவி கொடுத்து கேளுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது நம் நாட்டிற்கு ஏதோ பெயரளவுக்குத்தான் சுதந்திரம் கிட்டியிருப்பதாகக் கூறப்படுகிறது. அச்சுதந்திரமும் வந்து இன்னும் சரியாக ஓராண்டு கூட ஆகவில்லை. என்றாலும் அச்சுயராஜ்யத்தைக் காப்பாற்றுவதற்கான ஒரு ஆக்க வேலையாவது நடந்து வருவதாக நம்மால் காணக் கூடவில்லை.

நமது நாட்டிலுள்ள மத்திய சர்க்காரும், மாகாண சர்க்காரும் நடந்து கொள்ளும் மாதிரியைப் பார்த்தால் எல்லாம் அழிவு வேலையின் அறிகுறியாகவே நமக்குக் காணப்படுகிறது. ஆக்க வேலையல்ல, அழிவு வேலை தான் மாகாண சர்க்காரில் மட்டுமல்ல, மத்திய சர்க்காரிலும் நடைபெற்று வருகிறது என்று அழுத்தந்திருத்தமாகக் கூறமுடியும். (நீண்ட கைதட்டல்)

சர்க்கார் என்ன செய்கிறது? சட்டங்கள் செய்கிறது. எத்தகைய சட்டங்கள்? பாதுகாப்புச் சட்டம். அதைப் பாதுகாக்க மற்றோர் அடக்குமுறைச் சட்டம். மேலும் அடக்கு முறைக்கு ஆளானவர்களை விசாரணையின்றி சிறையில் பூட்டிக் காவலில் வைப்பதற்காக வேறோர் சட்டம். இன்னோரன்ன சட்டங்கள் தான் இன்றைய சுயராஜ்ய சர்க்கார் அன்றாடம் பிறப்பித்து வரும் சட்டங்களாகும். இவை ஆக்கவேலையின் அறிகுறியா? அழிவு வேலையின் அறிகுறியா? என்று நீங்களே சிந்தித்துப் பாருங்கள்.

## சர்க்காரின் அழிவு வேலை

அந்த அழிவு வேலையின் ஒரு பகுதிதான் இந்த கட்டாய இந்தி நுழைப்புமாகும் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

எந்த ஒரு நாட்டு மக்களின் சிறப்புக்கும் அடிப்படைத் தத்துவமா யிருப்பது அந்நாட்டினரின் தாய் மொழி. அத் தாய் மொழி அம்மக்களின் ரத்தத்திலுள்ள உயிர்ப்பினும் உயிரினும் அதிகம் போற்றிக் காப்பாற்றப்பட வேண்டியது. அத்தகைய தாய் மொழிக்குத் தீங்கு செய்யத்தான் ஆட்சியாளர்கள் அழிவு வேலை செய்கிறார்கள் என்று முன்னர் கூறினேன். இதைத் தடுத்து நம் தாய் மொழியைக் காப்பாற்றி ஆக்க வேலை செய்யத்தான் நாம் இன்று இங்கு கூடியுள்ளோம்.

## இந்திக்கு என்ன அவசியம்

இந்நாட்டில் இந்தியைப் புகுத்தி தாய் மொழியாகிய தமிழைக் கெடுப்பதற்கான அவசியம் என்ன இப்போது வந்து விட்டது என்பதுதான் நமது கேள்வி. இந்தி அல்லது சமஸ்கிருதம் அல்லது உருது அல்லது, அல்லது என்று போய்க் கொண்டே இருக்கிறது. இதை நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்த அல்லது, அல்லது என்பதெல்லாம் நம்மை ஏமாற்றும் தந்திரமாகும். முதல் "அல்லது" ஆபத்தின் அறிகுறி. இரண்டாவது 'அல்லது" ஏமாற்றத்தின் அறிகுறி. மூன்றாவது "அல்லது" படுமோசத்தின் அறிகுறி. இந்த அல்லது, அல்லது என்று போடாமலே நேராகவே இந்தியைக் கட்டாய பாடமாகச் செய்திருக்கலாம். அல்லது புது கல்வித் திட்டத்தை வெளியிட்ட போதே தமிழ் நாட்டிலும் ஹிந்தி கட்டாய பாடமாகவே இருக்கும் என்றும் தாராளமாக உத்தரவு போட்டிருக்கலாம். ஆனால் அமைச்சர் அப்படிச் செய்தாரில்லை. முதலில் ஹிந்தியை தமிழ் நாட்டில்மட்டும் விருப்பபாடமாக்கினார். பிறகு ஒரு வாரத்தில் அதையே கட்டாய பாடமாக்கி உத்தரவு போட்டு விட்டார். ஜுன் இறுதியில் இந்தியை இஷ்ட பாடம் என்று கூறிய அமைச்சர் ஜுலை மாதத் துவக்கத்தில் கட்டாய பாடமாக்கினார் என்றால் ஜுலை மாதக் குளிர் காற்று என்ன அவரது புத்தியைப் பேதித்து விட்டதா என்பதுதான் நமக்குப் புரியவில்லை.

## இதுவா அமைச்சு ?

ஒரு அமைச்சர் ஒரு உத்தரவு பிறப்பிக்கிறார் என்றால் அது குறைந்தது மூன்று ஆண்டுகளேனும் நாட்டில் செல்லுபடியாக இருக்க வேண்டும். வரும் பொருளுரைத்தல் மந்திரிக் கழகு என்பதுபோல் அதுதான் அமைச்சு முறைக்கு அழகு. அமைச்சு முறை தெரிந்தால்தானே நம் கல்வி அமைச்சருக்கு! அதனால் அவர் ஒரு வாரத்திற்கு ஒரு முறை தமது உத்தரவை மாற்றிக்கொண்டு இருக்கிறார். என்னே ஒழுங்கு முறை !

தற்காலத்தில் நமது சிறுவர் சிறுமியர் கட்டாயமாக மூன்று மொழிகள் பயில வேண்டும். மூன்றிலும் தேர்ச்சி பெற வேண்டும். அதாவது பள்ளியேகும் ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் தமிழ், ஹிந்தி, இங்கிலீஷ் ஆகிய மூன்று மொழிகளையும் கட்டாயமாகப் படித்தாக வேண்டும். இந்த மூன்று மொழிகளையும் படிக்கக் குழந்தைகளின் மூளை இடங்கொடுக்குமா ? என்பதைப்பற்றி கல்வி மந்திரியார் சிந்தித்தாரில்லை போலும்.

குழந்தைகளின் கல்வித் திட்டத்தில் ஆராய்ச்சி மிக்குடைய ரஷ்யப் பேரறிஞர் டாக்டர் பாலிலோவ் என்பவர் ஆரம்பப் பள்ளியில் தாய் மொழியும், அதற்கப்புறம் 12 வயதுக்கு மேல் ஒரு புது மொழியும் 18 வயதுக்கு மேல் அவசியமானால் வேறோர் தொழில் மொழியும் கல்வித் திட்டத்தில் புகுத்தப்படலாம் என்று கூறி யிருக்கிறார். குழந்தைகளின் மனோ தத்துவ ஆராய்ச்சியில் தேர்ச்சி பெற்ற அறிஞர் யாவரும் இதை ஒப்புக் கொள்வார்கள்.

அப்படி இருக்க சிறு குழந்தைப் பருவத்திலேயே நமது மந்திரியார் மூன்று மொழிகளை அக் குழந்தைகளின் தலையின்மீது சுமத்துகிறார். அதுவும் இந்த மாகாணத்தில்தான் இந்தக் கட்டாய இந்தி நுழைப்புக் கூத்து நடை பெறுகிறது. இது ஏனோ தெரிய வில்லை.

## இங்கு மட்டும் கட்டாய் மேன்?

வங்காளத்திலேயோ, மராத்தி தேசத்திலேயோ இன்னும் இந்தி கட்டாயமாக்கப்படாதபோது இங்கு மட்டும் ஏன் அது கட்டாய மாக்கப்படவேண்டும் என்பது நமச்குப் புரியவில்லை.

ஹிந்தி நாட்டின் தேசீய மொழி. ஆதலால் கட்டாய பாடமாக்குகிறேன் என்கிறார் நமது அமைச்சர்திருமகனார். இந்தியாவில் வழங்கி வரும் பல மொழிகளில் ஹிந்தி ஒன்று தானா தேசிய மொழியாக ஆக்கப்படக் கூடிய யோக்கியதை பெற்றிருக்கிறது.

ஒரு நாட்டில் ஒரு மொழி தேசிய மொழியாக்ப்பட வேண்டுமானால் அம்மொழியில் ஏனைய மொழிகளைக் காட்டிலும் அதிக கலைகள், அதிக பண்புகள், அதிக காவியங்கள் இருக்க வேண்டும். ஆராய்ச்சியாளர்களை, பேரறிஞர்களை அம்மொழி ஈன்றிருக்க வேண்டும் அப்போது தான் அது தேசிய மொழியாக்கப்படலாம்.

## இலக்கியம் உண்டா?

ஹிந்தியை எடுத்துக்கொண்டாலோ அதில் எவ்வித கலைகளும் கிடையாது. கலையில் அது சிறுமை மொழி. கலையே இல்லாத போது கலைஞர்களை எங்கு அது தோற்றுவித்திருக்கப் போகிறது. ஹிந்தியில் இலக்கியமோ, இலக்கணமோ, காவியமோ, கிடையாது. திறக்குறளுக்கு ஒப்பான நீதி நூலோ, தொல்காப்பியத்திற்கு ஒப்பான இலக்கணமோ, சிலப்பதிகாரத்திற்கு ஒப்பான காவியமோ கிடையாது.

ஹிந்தியில் மிகச் சிறப்பாகக் கூறப்படுவது துளசிதாஸ் ராமாயணம் ஒன்றுதான். அந்த ராமாயணத்தைப் பற்றி காந்தியார் வெகுவாகப் புகழ்ந்து எழுதி வருகையில் சில அன்பர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதில் கூறுமுகத்தான் அவரே துளசி தாஸ் ராமாயணத்தில் தள்ளிவிட வேண்டியவை பல உண்டு என்று எடுத்துக் கூறியிருக்கிறார். தள்ளப்படவேண்டியன பல வற்றுள் ஒரே ஒரு உதாரணத்தை எடுத்துத் கொண்டு பார்ப்போம். அதில் ஓரிடத்தில்,

"இவ்வுலகில் அடிபடுவதற்கென்றே பிறப்பிக்கப்பட்டவைகள் மூன்றாகும். அவை ஒன்று பெண்கள்; இரண்டு சூத்திரர்கள்; மூன்று, பறை (முரசு) இவையாகும். இப்படிப் பட்ட மிக மிக இழி தன்மையான வர்ணாச்சிரம தர்மத்தைக் கொண்ட ஒரு கதைக்காகவா ஹிந்தியை இந்நாட்டில் நுழைக்கவேண்டும்?

பெண்கள் உரிமை வேட்கை கொண்டவையும் இத் தமிழ் நாட்டில், சூத்திரன் என்கிற வார்த்தையை ஏட்டில்

கூட இருக்க விட மாட்டோம் என்று எண்ணிறந்த வாலிபர்கள் துடியாகத் துடித்துக் கொண்டிருக்கும் இக்காலத்திலா பெண்ணடிமையையும் சூத்திர இழிவையும் காக்கும் இந்தியை வீரத் தமிழ் நாட்டில் கட்டாயபாடமாக்க நினைப்பது? இதுபுத்திசாலித்தனமாகுமா? இதை விட முட்டாள் தனமும் வேறுண்டோ?

"ஹிந்தி இந்நாட்டு மக்கள் பெரும்பான்மையோரால் பேச்சளவில் வழங்கப் பட்டு வரும் மொழி, பெரும்பான்மையோரால் பேசப்படும் மொழி. ஆகவே அதை தேசீய மொழியாக்குகிறோம்."

என்று ஆட்சியாளர்கள் கூறுகிறார்கள். இதை ஊன்றிக் கவனித்துப்பார்த்தால் இந்தி நுழைப்பு மொழிப் போராட்டமல்ல. கலைப்போராட்டம், கலாசாரப் போராட்டம் என்பது நன்கு விளங்கும். கல்வித்திட்டத்தில் Majority, Minority (மெஜாரிடி, மைனாரிடி) பெரும்பான்மை சிறுபான்மை பார்ப்பது அறிவீனம் என்று தான் நான் சொல்வேன்.

## ஓட்டெடுப்பு பித்தலாட்டம்

கல்வித்திட்டம் என்பது ஓட்டெடுப்பு அல்ல. மெஜாரிடி மைனாரிடி பார்க்க. ஓட்டு பெறும் ஜால வித்தை எங்களுக்கு கூடத் தெரியும். 0-4-0 அணா கொடுத்து தனக்கு வேண்டியவரை மெம்பராக்கி விட்டு தாங்கள் வேண்டும் போது கை தூக்கும்படி செய்யும் வித்தையல்ல இது. இந்த வித்தையில் நானும் பெரியார் அவர்களும் ரொம்ப அடிப்பட்டவர்கள். ஆகவே கல்வித் திட்டத்திலாவது இந்த மெஜாரிடி மைனாரிடி பித்தலாட்டப் பேச்சைத் தவிர்த்து விடுங்கள்

இரண்டு நாளைக்கு முன்பு வானொலியில் பேசிய கல்வி அமைச்சர் இந்நாட்டிற்கு இங்கிலீஷ் எப்படி அந்நிய மொழியோ அதேபோல் இத்தமிழ் நாட்டிற்கு ஹிந்தியும்

அந்நிய மொழிதான் என்று தெளிவாக ஒப்புக்கொண்டுள்ளார்.

## தேசீய மொழி லட்சணம்

ஆனால் அது தேசிய மொழி. ஆகவே எல்லோரும் கட்டாய பாடமாக அதைப்படிக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார். ஒரு மொழி தேசியமொழியாக வேண்டுமானால் அது தேசத்திற்கு கலைஞர்களை அறிவாளிகளைப் பெற்றுக் கொடுத்திருக்கவேண்டும் என்று முன்பு சொன்னேன். அப்படி ஹிந்தி யாரையாகிலும் தோற்று வித்திருக்கிறதா? ஆங்கிலத்தோடு அதை ஒப்பிட்டுப்பாருங்கள்.

ஆங்கிலம், ஹிந்தி ஆகிய இரண்டு மொழிகளில் எது சிறந்த மொழி? ஒரு தமிழ் நாட்டு சிறு குழந்தையைக் கேளுங்கள். அது கூடச் சொல்லும் ஆங்கிலம் தான் சிறந்ததென்று. ஏன்? அது ஒரு ஷெல்லியை, (Shelly) ஒருடென்னிசனை (Tennyson) ஒரு கீட்ஸை (Keats) எரு ஷேக்ஸ்பியரை (Sahkcspeare) தோற்று வித்திருக்கிறது அப்படிப்பட்ட மொழிக்குத் தான் ஒரு தேசத்தின் தேசிய மொழியாக உரிமை உண்டே தவிர பெரும்பான்மையோரால் பேசப்படும் மொழி என்பதற்காக ஒரு மொழியைத தேசிய மொழியாக்கிவிட முடியாது. இந்தஇந்தியை நம் நாட்டில் நுழையவிடுவோமானால் இந்த 20-வது நூற்றாண்டின் தமிழ் வளர்ச்சி நாகரீக முற்போக்கு வளர்ச்சி பூராவும் அழிந்து போகும். ஆகவே மொழிப் போராட்டத்தில் மெஜாரிடி, மைனாரிடி பார்க்கும் புன்மை மனப் பான்மையை, ஓட்டுப் பெட்டி மனப் பான்மையை விட்டு பண்புப் பொருத்தம், குணப் பொருத்தம் பார்க்கவேண்டும் நமது கல்வி அமைச்சர்.

(Quality)—குவாலிடி—குணம் அல்லது பண்புதான் முக்கியமே தவிர, (Quantity)—குவாண்டிடி-அளவு அல்ல முக்கியமாகக் கருதப்பட வேண்டியது.

அதுவும் கலையிலா அளவு கோலிப் பார்ப்பது பண்புக்கு எதிர்ப்பாக? இந்தப் படி பார்த்தால் பண்பென்பது ஹிந்தி மொழியில் மிக மிகக் குறைவு. அடியோடு இல்லையென்றேக் கூட கூறி விடலாம்.

தமிழ் மொழிக் குள்ள பண்பில் லக்ஷத்தில் ஒரு பங்கு பண்பு கூட ஹிந்தி மொழியில் இல்லை, இல்லை என்பதை அமைச்சரே கூட ஒப்புக்கொள்வார்.

ஒன்று உருவத்தால் பெருத்திருந்தால் போதுமா? உண்மைப் பண்பில் பெருத்திருக்க வேண்டாமா? ஒருமைப் பண்பற்ற ஒரு 5,000 பேர் ஒரு பக்கம் இருந்தாலும் அவர்களை ஒருமைப் பண்புள்ள ஒரு 500 பேரே கூட எதிர்ப் பக்கத்தில் இருந்துகொண்டு தோற்கடித்து விடுவார்கள் அல்லவா? பண்பு பாராமல் பருமனைப் பார்த்து அமைச்சர் இந்நாட்டில் ஹிந்தியைப் புகுத்துவரேல் இந்நாட்டு மக்கள் எல்லோரும் மூர்க்கர்களாகி விடுவார்கள். உலகத்திலேயே குடும்பம் செய்யும் பிராணிகளிலும் குறும்பு செய்யும் பிராணிகளிலும் முதன்மையானது குரங்குதான். அப்படிப்பட்ட குரங்குகளையும் கூட தமிழ் அடக்கி விடும். நல்ல தமிழ் மொழி இசைக்கப்படுமானால் குரங்குகூட அவ்விடத்திற்கு வந்து அதில் லயித்து விடும்.

தமிழ் மொழி மந்தியையும் மனிதனாக்கும் தன்மை பெற்றது. ஆனால் ஹிந்தியோ மனிதனையும் மந்தியாக்கும் தன்மையுடையது.

ஹிந்தி மொழி இந்தியாவில் தோன்றி சற்றேறக்குறைய 200 ஆண்டுகள் தான் ஆகியிருக்கும் அது ஒரு தாஸையோ ஜெகதீச சந்திர போஸையே, ஒரு பானர்ஜியையோ, பி. ஸி. ரேயையோ, ஒரு தாகூரையோ உண்டாக்கிக் கொடுக்கவில்லை. வங்காள மொழிதான் அவர்களை உண்டாக்கிக் காடுத்தது.

## பண்பற்ற இந்தி மொழி

ஆகவே கலையற்ற, பண்பற்ற, கலைஞர்களை ஈன்றெடுக்கும் ஆற்றல் அற்ற, மனிதர்களின் மனிதத் தன்மையை அகற்றி அவர்களை மந்திகளாக ஆக்க வல்ல இவ் இந்தி மொழி இந்நாட்டு மக்களுக்குத் தேவையற்றது. இதை நாம் எதிர்த்தே தீரவேண்டும்.

முதலில் இஷ்ட பாடமாக்கப்பட்டிருந்த இந்த இந்தி மொழி எப்படி ஒரு சிலரின் தூண்டுதலால் கட்டாய பாட மாக்கப்பட்டதோ அதே போல் மறுபடியும் அது நமது இஷ்டபாட மாக்கப்பட வேண்டியதுதான். அதற்காக நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை நாம் இன்றே முடிவு கட்ட வேண்டும். இது நமது கடைசி சோதனை காலம்.

## எதிர்த்தே தீருவோம்

ஒரு காலத்தில் நாவலந் தீவு பூராவும், இன்றைய பரத கண்டம் பூராவும்பரவியிருந்த தமிழகம்விந்தியம்வரை குறுகி, இன்று வேங்கடம் வரை குறுகி நிற்கிறது. இந்த நிலையில் இத்தமிழகத்தில் இந்தி நுழைந்துவிடுமானாலோ தமிழகமே மறைந்துபோகும், மாண்டு போகும்.

ஆகவே இதைக் கடைசி மூச்சுள்ளவரை ஒவ்வொரு தமிழனும் எதிர்த்தே தீர வேண்டும்.

இம் மாநாடு வெற்றிகரமாக நடை பெற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கூறி, தமிழ்ப் பெரியார் தமிழ் என்றார், தமிழ் மக்கள் ஒரே குரலாக வாழ்க என்றனர். இந்தி என்றார் ஒழிக, ஒழிக என்று மண்டபம் அதிர முழக்க மிட்டனர்.

★

# 4. தோழர் அண்ணாத்துரை

தலைவர் அவர்களே ! தாய்மார்களே தோழர்களே !

பல தமிழ்ப் பேரறிஞர்கள், பெரும் பெரும் தலைவர்கள், கலைஞர்கள், கவிவாணர்கள், தாய்மார்கள், மாணவர்கள் மாணவிகள் உள்பட நாம் பல ஆயிரக் கணக்கில் இன்று இங்கு கூடியுள்ளோம். இந்த இடத்தில் கட்டாய இந்தி நுழைவைக் கண்டிப்பதால் ஒரு தீர்மானம் இயற்றி விட்டுச் சென்று விடுவதாலோ அல்லது தமிழின் தொன்மை குறித்தோ, அதன் இனிமை குறித்தோ பேசிவிட்டுப்போய் விடுவதாலோ யாதொரு நன்மையும் ஏற்பட்டு விடாது. சற்றேறக் குறைய 10 ஆண்டுகளுக்கு முன்பிருந்த அதே சூழ்நிலைதான் இன்றும் நம் கண் முன் காணப்படுகிறது. அக்காலத்தில் நாம் தமிழின் இனிமை குறித்தும், தொன்மை குறித்தும் பலவாறு பேசியும், எழுதியும் இருக்கிறோம். அவை இன்று தமிழ் நாடு எங்கணும் கிராமந்தோறுங்கூட பரவி நிற்கிறது. ஆகவே அதைப்பற்றி பேச வேண்டிய அவசியம் இனி இல்லை. தமிழ் மணம் எங்கணும் கமழ்கின்றது. தமிழ் மக்கள் யாவரும் ஆர்வத்தோடு திகழ்கின்றார்கள். அவர்கள் வேண்டி நிற்பது புதியதோர் புரட்சிதான். சென்ற இந்தி எதிர்ப்பில் ஆண்களும், பெண்களும், ஆடும் குழந்தைகளோடும், அடைகாக்கப்படும் குழந்தைகளோடும் சிறை புகுந்துள்ளனர். தாலமுத்துவின் மனைவியாரும் நடராஜனின் மனைவியாரும் தமது தாலிகளையே அரசாங்கத்தினருக்கு அறுத்துக் கொடுத்திருக்கின்றனர். ஆகவே அரசாங்கத்தினருக்கு இந்திக்கு இந்நாட்டிலுள்ள எதிர்ப்பு தெரிந்தே இருக்கிறது. தமிழின் தனிச் சிறப்பும், ஹிந்தியின் தனி இழுக்கும் கூட ஆட்சி புரியும் அவினாசியாருக்குத் தெரிந்துதான் இருக்கும். இதுவரை அவர்

தெரிந்து கொள்ள வில்லை யானால் இனிமட்டும் எப்படித் தெரிந்துகொள்ளப் போகிறார். ஆகவே இவை பற்றிப் பேசிச் கொண்டிருந்தால் இம் மாநாடு ஒரு பயனற்ற மாநா டாகவே முடிந்து போம்.

## வந்த சண்டையை விடமாட்டோம்

தமிழர்கள் வம்புச் சண்டையில் ஈடுபடுபவர்கள் அல்ல. ஆனால், வந்த சண்டையை விடாதவர்கள். ஆட்சியாளரின் ஆணவத்திற்கு அடி பணிவதும் அருமைத் தமிழினத்தவ ரின் பண்பல்ல. எனவே, அறப்போர் தொடுக்கத் தீர்மா னிப்போம். அப்போரில் வெற்றி காண இங்கு கூடியுள்ள நமது பெரும் பெரும் தலைவர்களின் ஆசியை முதலில் பெறுவோம்.

ஆட்சியாளர்கள் தமிழின் இனிமையைக் குறைப்பதற் காகவோ, அல்லது அதன் தொன்மையை மறைப்பதற்காக வோ, அல்லது அதைப் பழிப்பதற்காகவோ இன்று ஹிந்தி யை இந்நாட்டில் நுழைக்க வில்லை. அப்படி இருந்தால் இனிமைத் தமிழ் நிறைந்த கம்பராமாயணத்தையே தொன்மை மிகுந்த தொல்காப்பியம்போன்ற நூல்களையே அழிக்கத் துணிந்திருப்பார்கள்.

தமிழனுடைய பண்பை அழிக்க, அவனது கலாச்சாரத் தை அழிக்க, தமிழ் மக்களிடத்து இன்று ஏற்பட்டுள்ள புத்துணர்ச்சியை ஒழிக்க இவற்றிற்காகத்தான் இந்தியை நுழைக்கிறார்கள். எனவேதான் ஆட்சியாளரின் குறி 'ராவண காவிய'த்தின் மீது சென்றிருக்கிறது. ஆகவே நமது கலாச்சாரத்தில் கைவைக்கத் துணிந்த இந்த அரசாங் கத்தினரின் போக்கை எதிர்த்து அறப்போர் தொடுப்பது தான் முறை.

## தமிழ் காக்கும் பணி

கொஞ்சம் தயக்கம் இருந்தாலும் பல முறை சட்டம் மீறிய சிவஞான கிராமணியாரும் பக்கலில் இருக்கிறார்

நமக்குத் தைரியம் கூற. ஒரே அரசியல் கருத்துக் கொண்ட இரு தலைவர்களை இங்கு காணமுடியாது என்றாலும், தமிழ் காக்கும் பணியில் எல்லோரும் ஒரே கருத்துடன் தான் இன்று கூடியுள்ளார்கள். இப்படி நேரிடுவது தமிழ் நாட்டுச் சரித்திரத்தில் ஒரு புதுமைதான். அவசியம் ஏற்பட்ட போது திருமயிலையும், திருவல்லிக்கேணியும் ஒன்று கூடிக் கொள்வது ரொம்ப சகஜம். ஆரியத்திற்கு ஆபத்தென்றால் ஆச்சாரியரும், சத்திய மூர்த்தியும் ஒன்று சேர்ந்து கொள்வார்கள்! அரசாங்க எதிரிகளான அவர்களோடு, அரசாங்கத்தின் கையாட்களான அல்லாடி கிருஷ்ணசாமி ஐயரும், சர். சி. பி. ராமசாமி ஐயரும் கூட ஒன்று கூடிக் கொள்வார்கள். ஆனால், என்ன தான் அவசியம் ஏற்பட்ட போதிலும் இரு கட்சிகளில் உள்ள தமிழர்கள் ஒரு பொதுக் காரியத்தில் மன மொப்பி கூடி வேலை செய்ய மாட்டார்கள். அப்படிப்பட்ட பரிதாபத்துக் குரிய நிலை, இந்நாட்டில் பார்ப்பனீயம் தங்கு தடையின்றி வளர்ந்தோங்க மூல காரணமாயிருந்த நிலை, இன்றோடு மாய்ந்து போனது. இனி மயிலையும் திருவல்லிகேணியும் கூட கலகலக்கும். தமிழர்கள் ஒன்று பட்டு விட்டார்கள், இனி இவர்களை ஒடுக்க முடியாது என்பதை உணர்ந்து கொள்வார்கள். ஒற்றுமையைக் குலைக்கப்பார்ப்பார்கள். ஆனால் அது இனிப்பலிக்காது. இனி அவர்களால் தமிழ் நாட்டை வடநாட்டாருக்குக் காட்டிக் கொடுக்க முடியாது.

## தமிழர் பேடிகளல்லர்

தமிழ் நாடு பாலைவன நாடல்ல, பிறரை எதிர்பார்த்து வாழ. தமிழர்களும் பேடிகளல்லர், பிறர்க்குப் புறமுதுகு காட்டி ஓட.

தமிழர்கள் மாவீரர்கள். முடியுடை மூவேந்தரின் சந்ததியார்கள். கடல் கடந்து சென்று பர்மா தேசத்தைக் கைப்பற்றி ஆண்டவர்கள். பலதூர அயல் நாடுகளோடும் சிறப்பாக வாணிபம் நடத்தியவர்கள். இவையெல்லாம்

திருவிளையாடற் புராணக் கூற்றுகள் அல்ல. சரித்திர உண்மைகள். எங்கள் இருதய கீதமாக இன்றுவரை இருந்து வருபவைகள் இவைகள். எனவே, எங்களை அழிக்க எக்காலும் ஆரியத்தால் முடியாது. எனவே, அதைரியம் வேண்டாம். அறப்போர் தொடுக்க ஆசி கூறுங்கள். தமிழ் காக்கப் போர் தொடுங்கள் என்று தலைவர்களே கட்டளை இடுங்கள். தமிழ் வாழ்க, ஹிந்தி ஒழிக என்று அன்று கூறிய தற்காக வெலிங்டன் துரையவர்களால் தயாரிக்கப்பட்ட கிருமினல் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் அன்று சிறைப்பட்டோம். 1000க்கு மேற்பட்டவர்கள் சிறைபுகுந்தோம். பெல்லாரி சிறையில் பெரியார் அவர்கள் வாடச்சகித்திருந்தோம். அவவருடைய உடலுக்கு பெல்லாரி உஷ்ணம் தான் ஏற்றது என்றும், நடராஜன் படிக்கத்தெரியாதவன், அதனால் ஹிந்தியை எதிர்த்துப் பிணமானான் என்றும் ஆச்சாரியாரால் கூறப்பட்ட கடுமொழிகள் கேட்டுச்சகித்திருந்தோம்.

எனவே சகித்திருந்தது போதும்; வாதாடிப் பார்த்ததும் போதும். இனியும்தமிழர்கள்பொறுக்கமாட்டார்கள் !!! இனிப் போர்! போர்!! போர்!!!

போர் தொடுப்பது தவிர வேறு வழி இல்லை. இன்றைய அரசாங்கத்திற்குப் போர், போர் தவிர வேறு எதுவும் புத்தி கற்பிக்காது அரசாங்கத்தினர் 10 ஆண்டுகளுக்கு முன்பு தமக்கிருந்த பலத்தைக்காட்டிலும் இப்போது அதிக பலம் பெற்றிருப்பதாக நினைத்திருக்கிறார்கள். உண்மைதான். இன்று அரசாங்கத்தினருக்குக்கிடைத்திருக்கும் பலம் முன்னைவிட அதிகமேதான்; ஆனால் இந்த 10 ஆண்டில் நமது நிலையும் எவ்வளவு வளர்ந்து விட்டது, எவ்வளவு அதிக பலம் பெற்றுவிட்டது என்று அவர்கள் அறிந்தார்களில்லை. இவர்கள் எதைத்தான் உள்ளபடி அறிந்தார்கள்?

### நம் பலம்

சென்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது நம்மிடையே நண்பர் சிவஞானம் இருந்தாரா? இல்லையே!

இல்லை! என்பதை அவரே ஒப்புக்கொள்வாரே? தோழர் நாரண துரைக்கண்ணன் நம்மிடையே அன்று இருந்தாரா? இல்லையே! அதுசமயம் 'தமிழர் யார்? என்று பத்தகம் அவர் வெளியிட்டுள்ளார் அதைப்படித்துப்பாருங்கள்! அவர் அன்று நம் ஹிந்தி எதிர்ப்பு இயக்கத்தையும் தோழர் பன்னீர் செல்வத்தையும் எவ்வளவு கண்டித்திருக்கிறார் என்பது விளங்கும். நமது இயக்கத்தின் வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டு இது ஒன்றே போதும். இந்த 10 ஆண்டுகளில் நமது இயக்கம் பல நூறு மடங்காக வளர்ந்து விட்டது. எனவே, போராட்டத்தில் வெற்றி நமக்குத்தான் கிடைக்கும். அன்றிருந்த ஆச்சாரியாராலேயே நம்மை அழிக்க முடியாமற்போய் விட்டதென்றால், நமது எதிர்ப்பைச் சமாளிக்க முடியாமற் போய் விட்டதென்றால், இந்த அவினாசியார் நமக்கு எம்மாத்திரம்? எனவே மறியல் ஆரம்பிப்போம், மந்திரியார் வீட்டு முன் போ, அல்லது பாடசாலைகளின் முன்போ. மந்திரியாரின் வீட்டின் முன்பு மறியல் செய்வது முடியாத காரியம்.

ஏனெனில் அவர்கள் தற்போது மக்கள் நடமாடும் இடத்தில் குடியிருக்க வில்லை. அடையாறில் குடியிருப்பு. அதுவும் ஆற்றோரத்தில்! ஒருபக்கம் பணத்திமிர் பிடித்த அண்ணாமலைச் செட்டியார் அரண்மனை. மறுபக்கம் அதை எதிர்பார்த்து நிற்கும் சுடுகாடு. நல்ல பொறுத்தமான இடத்தில் தான் குடியிருக்கிறார்கள்.

## பிரெஞ்சுப் புரட்சி—நினைவிருக்கட்டும்!

எனவே பழையபடி பள்ளி முன்புதான் மறியல் செய்ய வேண்டும். பெரியார் அவர்கள் கூறியிருக்கிறார்கள், இம்முறை புதிய புதிய அடக்கு முறைகள், மிருகத்தனமான அடக்கு முறைகள் கையாளப்படுமென்று. நாமும் புதுப் புது அனுபவம் பெறத்தான் காத்துக் கொண்டிருக்கிறோம். ஏற்கனவே. நாம் பஞ்சைகள். அதோடு பஞ்சம் வேறு நம்மை வாட்டிவருகிறது. எனவே நபமிடத்தில் நமது எலும்புக் கூடுதான் மிச்சம் இருக்கிறது. அதை சர்க்கார் என்ன

வேண்டுமானாலும் செய்யட்டுமே. சர்க்கார் நினைக்கலாம், வெறும் எலும்புக் கூடுகளான, இவர்களால் என்ன செய்ய இயலும் என்று. அப்படி நினைப்பார்களானால் பிரெஞ்சு தேசப் புரட்சியைப் பற்றிய வரலாற்றைப் படித்துப் பார்க்கட்டும்! அப்போது புரியும், எலும்புக் கூடுகள் என்ன செய்யும் என்பது. வெறும் எலும்புக் கூடுகள். தசையிலுள்ள ரத்தத்தையெல்லாம் உறிஞ்சி உறிஞ்சி உரம் ஏற்றிக் கொண்ட எலும்புக் கூடுகள். இவற்றிற்கு எதையும் எதிர்த்து நிற்கும் சக்தி யுண்டு. வறுமையால் வடிய எலும்புக் கூடுகள், அதுவும் அற்ப எலும்புத்துண்டுக்காக கனவான்களின் நாய்களோடு போராடிய எலும்புக் கூடுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து தான் புரட்சி செய்து பிரான்சு தேசத்தில் முடியாட்சியை அழித்து குடியாட்சியை ஏற்படுத்தியது என்பதை ஆட்சியாளர்கள் ஞாபகத்திற்கு கொண்டு வந்து பார்க்கட்டும்! அன்று ஒரு சொக்கலிங்கம் எழுதினார், ‘இந்த நகரத்தில் போலீசும் செத்துவிட்டதோ’ என்று. இன்று அதே சொக்கலிங்கம் எழுதத் துணிவாரா அப்படி? அது திராவிடநாடு என்ற நினைப்பே இல்லாத காலம். நம்மை விட்டு மிட்டா மிராசுகள் ஓடாத காலம். இன்று நாம் நமது லட்சியத்தை ஒரு அளவுக்கேனும் அடைந்திருக்கிறோம். நம் நாடு எது வென்றாவது சொல்லத் தெரிந்துகொண்டுள்ளோம். நமது மக்களிடையே அளவிடற்கரிய புது உணர்ச்சியையும் காணப்பெறுகிறோம். இப்படிப்பட்ட காலத்திலா நாம் விட்டுக்கொடுப்போம்? இல்லவே இல்லை.

இது மொழிப் போர் மட்டுமல்ல. கலாச்சாரப் போர். எனவே, அறவே விட்டுக்கொடுக்க முடியாது. ஒரு நாடு மற்றொரு நாட்டைக் கைப்பற்றுவதாயிருந்தால் ஒன்று படையெடுப்பின் மூலமோ அல்லது வியாபாரத்தின் மூலமோ, அல்லது கலாச்சாரத்தின் மூலமோ— ஆகிய இம்மூன்று முறைகளின் மூலம் தான் கைப்பற்ற வேண்டும். இவற்றுள் வடநாட்டினர் மூன்றாவது முறையாகிய, அதாவது கலாச்-

சாரத்தின் மூலம் ஒரு நாட்டைக் கைப்பற்றும் முறையை இத்திராவிட நாட்டில் கையாளத்துவங்கி யுள்ளார்கள்.

## கலாச்சாரப் படை யெடுப்பு

ஹிந்தி நுழைப்பு கலாச்சாரப் படை யெடுப்புதான். எனவே இந்த நிலையில் திருக்குறளைப் பாராட்டிப் பேசுவதாலோ, அல்லது ஹிந்தியையும் தமிழையும் ஒப்பிட்டுத் தமிழன் சிறப்பை எடுத்துக் காட்டுவதாலோ பயனில்லை. பொன்னையும் பித்தளையையும் எவனாயினும் ஒப்பிட்டுப் பார்ப்பானா? இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர். எனவே நமது உயிரைப்பறிக்க வரும் ஹிந்தியை ஒழிக்க முன் வருவதல்லால், ஹிந்தியில் நீதி நூல் இல்லை, கலை இல்லை என்று கூறுவதெல்லாம் சந்தர்ப்பத்திற்கு அவசியமற்றவை. இதை எல்லாம் அவினாசியாரே அறிவார். அறிந்தும் வடநாட்டினரின் உத்திரவிற்கு அடிபணிந்துதான் அதை இந்நாட்டில் புகுத்தியுள்ளார். இதில் ஐயமில்லை. இதை அவரே ஒன்றிரண்டு இடங்களில் ஒப்புக் கொண்டுள்ளார். மந்திரியாக இருக்க விரும்புகிறார்.

எனவே, வடநாட்டுக்கு மண்டியிட்டுக் கிடக்கிறார். மந்திரியாயிருப்பதை விட மானமுள்ள மனிதனாக, உண்மைத் தமிழனாக இருப்பது அவசியம் என்பதை மறந்தார். எனவே, இந்தியைப் புகுத்துகிறார். மானத்தை இழந்த மந்திரியார் மதியை மட்டுமா இழக்காமல் இருப்பார், அவரிடம் நியாயம் எடுத்துக் கூற. எனவே திடமாக அறப்போர் தொடுக்க வேண்டியதுதான். அதில் நாம் எல்லோரும் ஈடுபட வேண்டியதுதான்.

## போர் முரசே இறுதி கட்டம்

ஹிந்தி நுழைவால் தமிழ்கெடுமா, கெடாதா என்பதற்கு பதில் நாம் யாரைக் கேட்போம். மறைமலையடிகளையும், திரு. வி. க. வையும் கேட்பதா, அல்லது கனம் கோபால் ரெட்டியாரையும், காளா வெங்கட்ராவையும் கேட்பதா?

மறைமலையடிகளாரும், திரு. வி. க. அவர்களும் ஹிந்தி நுழைவால் தமிழ் கெடும்; தமிழர் கலாச்சாரம் கெடும் என்று அழுத்தந் திருத்தமாகக் கூறிவிட்ட பிறகு, அவர்கள் சாட்சி நமக்குக் கிடைத்து விட்டபிறகு, போர் முழக்கம் செய்வது தவிர போர் முரசு கொட்டுவது தவிர, நமக்கு வேறென்ன வேலையிருக்கிறது? தமிழ் நாட்டு மூவேந்தர் போற்றி வளர்த்துக்காப்பாற்றி வந்த தமிழ்ப்பண்பை, தமிழ்க் கலாச்சாரத்தை, கனகவிசயன் சந்ததியார் கெடுக்க முன்வந்து விட்டனர். எனவே, மூவேந்தர் சந்ததியாராகிய நாம் இனியும் இந்தக் கலாச்சாரக் கொலைஞர்களைச் சும்மா விட்டு வைத்திருக்க முடியாது. தமிழனுக்கிருப்பது உயர் தனித்தோள்கள். அவை தமிழ் காக்க, வாள் ஏந்தத்தான் இருக்கின்றன. வாள் ஏந்திப் போர் தொடுக்காவிட்டாலும் மன உறுதி பெனும் வாளேந்தியேனும் அறப்போர் தொடுப் போம். அதுதான் அவினாசியாருக்கும் புரியும். மற்ற நியாய வாதங்கள் எல்லாம் அவருடைய மூளையில் குழப் பத்தைத்தான் உண்டாக்கும். ஏற்கனவே குழம்பியிருக்கும் மூளை மேலும் குழம்பித்தான் போகும். பாவம் புத்தி குழம்பினால், அவருக்கு ஆற்றுவாரோ, தேற்றுவாரோ கூட அருகில் கிடையாது. ஏனெனில் அவருக்கு மனைவி மக்கள் இல்லை. அவர் ஓர் பிரமச்சாரி. அதிலும் மூல வியாதிக்காரர். அப்படிப்பட்டவரிடம் போய் தமிழின் இனிமை குறித்து எடுத்துச் சொன்னால் அவருக்குக் கோ பம் வராமல் வேறென்ன வரும்?

## தமிழர் வரலாற்றில் முத்திரை

இதுவரை ஒன்று படாத தமிழர்கள் இன்று இம் மாநாட்டில் ஒன்று கூடியிருப்பதால் இம்மாநாடு தமிழர் சரித்திரத்தில் முத்திரை பொறித்தது போன் றது. பெரியார் அவர்கள், மறைமலையடிகளார், நாாணதுரைக் கண்ணன். சிவஞான கிராமணியார், திரு. வி. க. அவர்கள் ஆகியவர்கள் முத்திரை மோதிரத்தின் சின்னங்கள்! இலச்

சினை இடவேண்டிடவர்கள். எனவே, இம்முத்திரை பொறித்துப்போர் ஓலை இன்றே அனுப்பப்படட்டும். அது அவசியம் அவனாசியார் புரிந்து கொள்ளும் தமிழிலேயே இருக்கட்டும்.

"ஹிந்தி நுழைவால் தமிழர் பண்பு கெட்டுப்போம். தமிழர் கலாச்சாரம் கெட்டுப்போம். ஆகையால், அமைச்சர் அவினாசியாரே! அமைச்சர் குழுத்தலைவர் ரெட்டியார் அவர்களே! இவர்களை ஆட்டிப்படைக்கும் ஏகாதிபத்ய படேல் துரை அவர்களே! ஜவஹர்லால் நேரு அவர்களே! தமிழர்களாகிய நாங்கள் கட்டாய ஹிந்தி நுழைவை எதிர்த்து அறப்போர் தொடுத்து விட்டோம்! தொடுத்துவிட்டோம! தொடுத்துவிட்டோம்!"

என்ற மாதிரியில் ஓலை எழுதப்படட்டும். அவினாசியாரும் உடனடியாக ஜெயில்களையும் காலி செய்துவைத்துக் கொள்ளட்டும். போதுமான போலீஸ் படையையும் தயாரித்து வைத்துக்கொள்ளட்டும். பெரியார் அவர்கள்பல இடங்களில் பேசியிருக்கிறார்கள், அடக்குமுறை எப்படி இருக்கும் என்று. தடியாலும் அடிப்பார்கள். துப்பாக்கிகளாலும் சுடுவார்கள். பக்கிங்காம் மில் தொழிலாளர்கள் மீது அடக்குமுறைப பாணத்தை வீசியவர்கள் தானே இவர்கள். அந்தத் தொழிலாளர்களின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் தானே நாமும்.

அடிக்கட்டும், அஞ்சோம். சுடட்டும் அதற்கும் அஞ்சோம். இவற்றால் ஏற்படும் தழும்புகள் திராவிடத்தனி அரசுக்கு முத்திரையாக அமையும். தலைவருக்கு நமது அஞ்சாமை பற்றிச் சந்தேகமில்லை.

நமது பொறுமையைக் குறித்துத்தான் சந்தேகம். எனவே தான் அவரிடம் கொஞ்சம் தயக்கம் காணப்படுகிறது. தயக்கம் வேண்டாம்!

## பொறுமைமிகக தமிழர்

தமிழர்கள் எந்த அளவுக்கு உரம் படைத்தவர்களோ அந்த அளவுக்குப் பொறுமையும் படைத்தவர்கள் தான்.

சென்ற ஹிந்தி எதிர்ப்பின்போது தாலமுத்துவின் பிணம் ஆஸ்பத்திரியிலிருந்து சுடுகாட்டிற்கு ஊர்வலமாக எடுத்துச்சென்றபோது கணக்கில்லாத மக்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். என்ன நேருமோ என்று பார்ப்பனக் குடும்பங்கள் அத்தனையும் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருந்தன. ஆனால் என்ன நேர்ந்தது ? தமிழர்கள் தாலமுத்துவின் பிணம் சாம்பலாகச் சாம்பலாக ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு பெருமூச்சு விட்டனர். ஒன்றிரண்டு கண்ணீர்த்துளி விட்டனர். அவ்வளவு மனோ உறுதியும் பொறுமையும் படைத்தவர்கள்தான் தமிழர்கள். எனவே அதிலும் தலைவர்க்குச் சிறு துளியும் சந்தேகம் வேண்டாம். இந்த பஞ்சகாலத்தில் நமக்கும் அடிபடப் போதிய வலுவில்லை. போலீசுக்கும் அடிக்கப் போதிய வலுவில்லை. அவர்களும் இரண்டு அடிதான் அடிப்பார்கள். அவ்வளவு தான் அவர்களுக்கும் வலுவுண்டு. நாமும் அந்த இரண்டு அடிகளிலேயே கீழே விழுந்து விடுவோம். அவ்வளவு தான் நமக்கும் தாங்கச் சக்தியுண்டு. நம்மிடம் ஆயுதத் தளவாடங்கள் இல்லை, அவர்களை எதிர்ப்பதற்கு.

## லட்சியம் பெரிது; வெற்றியல்ல

எனவே, நமது போர் அறப்போராகத்தான் இருக்கும். அதை அமைச்சர் விரும்பினால் ரத்தப் போராக்கலாம். ஆக்கமாட்டார், என்று நினைக்க ஆதாரமொன்றுமில்லை நம்மிடம். அமைச்சர் ரத்தத்தை விரும்பினால் அதற்கும் நாம் தயாராகத்தான் இருக்கிறோம்.

இந்தப்போரில் வெற்றி கிடைக்குமா, தோல்வி கிடைக்குமா என்று சிந்திக்க வேண்டியது அவசியமில்லை. நமது லட்சியத்தை இருதயத்தில் தீர்மானமாகக் கொண்ட பிறகு நமது கொள்கை நியாயத்தை அடிப்படையாகக் கொண்டது தான் என்ற நிச்சயம் நமக்கு ஏற்பட்டுவிட்ட பிறகு, வெற்றி கிடைப்பது பற்றியோ, தோல்வி நேர்வது பற்றியோ நமக்குக்

கவலையேன்? நியாயத்தை அடிப்படையாக வைத்துச் செய்யப்படும் போரில் ஒரு முறை தோல்வியுற்றாலும் மறு முறை நிச்சயம் வெற்றியே கிடைக்கும். எனவே மாஜி தளகர்த்தன் என்கிற முறையில் தெரிவித்துக் கொள்கிறேன், அறப்போர் விரைவில் தொடங்கட்டும். பெரியார் விருப்பப் பட்டால் என்னுடைய பெயரை முதல் வரிசையிலேயே சேர்த்துக்கொள்ளட்டும்.

## எல்லோரும் வாருங்கள் சிறைச்சாலை!

சென்ற 10 ஆண்டுகளாக நாங்கள் அடிவயிறு வலிக்கப் பேசி வந்தது உண்மையானால், அதன் மூலம் உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் புத்துணர்ச்சி உண்மையானால், தமிழனுக்குத்தன்மானமிருப்பது உண்மையானால், தமிழ் மகனுக்குத் தன்மானம் காத்துக்கொள்ளும் வீரம் இருப்பது உண்மையானால், சென்ற போரின் போது தாலமுத்துவும் நடராஜனும் உயிர்த்தியாகம் செய்தது உண்மையானால், அச்சமயத்தில் ஆண்களும் பெண்களுமாக ஆயிரத்திற்கு மேற்பட்டு சிறைக்குச் சென்றது உண்மையானால், இத்தனை உண்மைகளும் பயனளிக்க வேண்டுமானால் திராவிடர் கழகம் இதுகாறும் ஆற்றி வந்த பணி வீண்போகாது இருக்கவேண்டுமானால், வாருங்கள் எல்லோரும் சிறைச்சாலைக்கு! அதை மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை யாக்கிடுவோம்! மயிலினங்காள் வாருங்காள்! குயிலினங்காள், வாருங்கள்! தமிழ்க்காளைகாள், வாருங்கள்! மூவேந்தர் வழிவந்த செம்மல்களே, வாருங்கள்! வாருங்கள் யாவரும் சிறைச்சாலை நோக்கி!!

சிறுமதியாளர்கட்கு நன்மதி போதித்திடுவோம். சர்க்கார் அடக்குமுறைக்குச் சரியான புத்தி கற்பித்திடுவோம். கடந்த போராட்டத்திற்கு 10 வருடத்திற்குப் பிறகு இப்போதேனும் முற்றுப்புள்ளி வைத்திடுவோம். தாய்மார்களே!

பெரியார் உங்களை அழைக்கிறார். சென்றஎதிர்ப்பின்போது அவரை எதிர்ப்பில் மாட்டிவிட்டது தாய்மார்கள்தான். எனவே, தாய்மார்களையே அவர் விரும்பி அழைக்கிறார் எனவே வாருங்கள் விரைந்தோடி! உங்கள் எதிர்ப்பால் சர்க்காரே அழிந்துபோம்! ஹிந்தியும் ஒழிந்துபோம்!

★

# 5. நாரண - துரைக்கண்ணன்

## வரவேற்புரை

பெரியார்களே! தாய்மார்களே!

நம் தாய் மொழியைப் பாதுகாக்க தாய்மொழிப் பற்றைச் குறைக்கக் கூடியதென நாம் நம்பும் ஹிந்தி நுழைவைத் தடுக்கத் தமிழர்களாகிய நாம் இரண்டாவது முறையாகப் போர் தொடங்கியிருக்கிறோம் ஹிந்தி நுழைவை எதிர்த்து முதலாவதாகத் தொடங்கிய போர் 1938-ம் ஆண்டு—அதாவது நம் மதிப்புக்குரிய பெரியார் சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் பிரதம மந்திரியாக இருந்த காலத்தில் என்பது இங்கு குழுமியுள்ள தமிழ்ச் சகோதரர்களுக்கு ஞாபகமில்லாமலிருக்காது. இவ்விதம் மொழிக்காகக் கிளர்ச்சி ஏற்பட்டதையோ, மொழிக்காக உரிமைப் போர் நடத்தியதையோ இதுவரை நாம் கேட்டதுமில்லை. கண்டதுமில்லை. மொழி காரணமாக ஏற்பட்ட போராட்டத்தில் ஆண்களும்பெண்களுமாக 1200 பேர் சிறை புகுந்த அதிசயத்தை உலக சரித்திரத்தில் கூட நாம் படித்ததில்லை

### அவரே செய்யத் துணியார்

முன் சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் காங்கிரஸ் மந்திரி என்ற முறையில், காங்கிரஸ் மகா சபையின் நிர்மாண வேலைத் திட்டங்களில் ஒன்றான ஹிந்தி, நாட்டுப் பொது மொழியாக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை அனுச

ரித்து காந்தியடிகளின் அபிப்ராயத்துக்கு மதிப்புக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் ஹிந்தியைத் தமிழ் நாட்டில் பள்ளி மாணவர்களுக்குக் கட்டாய பாடமாக்க முயன்றார். அவர் அவ்விதம் செய்ய எண்ணியபோது ஹிந்தி நுழைவுக்குத் தமிழ் நாட்டில் இவ்வளவு பலத்த எதிர்ப்பு இருக்குமென்று எண்ணியிருக்கமாட்டார். பின்னால் அறிந்த பிறகு, அவர் தமிழ் மக்கள் விஷயத்தில் மொழி சம்பந்தமாகச் செய்ததவற்றை மாற்றிக்கொண்டிருக்கலாம். ஆனால், சுய கௌரவம் அதற்கு இடந்தரவில்லை. கடைசி வரை அவர் பிடிவாதங் காட்டினார், ஆனால் அவரே, இப்போது நம் நாட்டில் அதிகாரத்தில் இருந்தால், ஹிந்தியைத் தமிழ் மாணவர்கள் மீது திணிக்க முயலமாட்டார் என்பது நிச்சயம். நமது தமிழ்ச் சகோதரர் அவினாசிலிங்கஞ் செட்டியார் காங்கிரஸ் மேலிடத்தாரின் ஒப்பந்தங் காரணமாகவோ, வேறு எக்காரணத்தாலோ, தமது புதிய கல்வித் திட்டத்தில் ஹிந்தியை வலுக்கட்டாயமாக நுழைத்துவிட்டு, இப்போது சங்கடப்படுகிறார். ஹிந்திக்கு முன் இருந்த எதிர்ப்பை, நம் கல்வி யமைச்சர் நன்கு அறிவார். இப்போதும் பலத்த எதிர்ப்பு ஏற்படுமென்று அறிந்துதான் முதன் முதலாக தமிழ் நாட்டில் மட்டும் ஹிந்தி ய விருப்பப்பாடமாக எடுத்துப் படிக்கலாம் என்று தெரிவித்துக் கண் துடைப்பு வேலை செய்தார்.

## இரண்டும் ஒன்றுதான்

"விருப்பப் பாடம் என்பதற்கும், கட்டாயபாடம் என்பதற்கும் அதிக வேற்றுமை யில்லை. நடைமுறையில் ஒன்று தான்

விருப்பப் பாடம் என்னும்போது ஹிந்தியைப் படிக்க விரும்பாத மாணவர்கள் அந்த நேரத்தில் வேறு எந்த பாடத்தைப் படிப்பது என்று தெளிவாகக் கூறவில்லை. ஹிந்தி வேண்டாம் எனப் பெற்றோரிடமிருந்து கடிதம் பெற்றாலொழிய, ஹிந்தி வகுப்பில் சேர்ந்தே தீர வேண்டுமென்பதன் பொருளென்ன? சர்க்கார் உத்தியோகத்துக்கு ஹிந்தி அவசி

யும் என்று கூறிவிட்ட பிறகு எந்தப் பெற்றோராவது ஹிந்தி யைப் படிக்கவேண்டாமென்று தங்கள் பிள்ளைகளுக்குச் சொல்வார்களா? ஆகவே, முதல் திட்டத்திலேயே கல்வி மந்திரி பொடி வைத்துத்தான் வெளியிட்டார். கோவையில் பிரதம மந்திரி தமிழ் மக்களின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்வதற்காகத்தான், ஹிந்தியை விருப்பப் பாடமாகத்தமிழ் நாட்டில் மட்டும் வைத்தோம் என்று கூறியதையும், கல்வி யமைச்சர் பத்திரிகா நிருபர் கூட்டத்தில், "சென்னை சர்க் கார் உத்தியோகங்களுக்குக்கூட, ஹிந்தி பழக்கம் அவசியம்என விதிக்கப் போவதாகவும், ஹிந்தியை மாணவர்கள் படிக்க வேண்டிய அவசியத்தைப் பற்றித் தாமே பிரசாரஞ் செய்யப் போவதாகவும் சொன்னதையும் பார்த்தபோது, அவர்களு டைய அந்தரங்க எண்ணம் நமக்கு நன்கு விளங்கலாயிற்று.

## கல்வி அமைச்சர் 'பல்டி'

காங்கிரஸ் மந்திரிகளுடைய இந்த அந்தரங்கக் கருத் தைத் தெரிந்துங்கூட சில பத்திரிகைகளும், முத்தரங்க முத லியார் போன்ற பிரமுகர்களும், "யாரோ சிலர் எழுதுகிறார் கள் என்பதற்காக இப்படிக் குழப்பக்கூடாது. ஹிந்தியைக் கட்டாயமாகப் படித்துத்தான் ஆகவேண்டும் என்று வெளிப் படையாகக் கூறிவிட வேண்டு"மென்று நிர்ப்பந்திக்கலாயினர் இவ்வித நிர்ப்பந்தத்தைத் தாங்காமல் தான் கல்வியமைச்சர் இரண்டாவது உத்தரவைப் போட்டார். தமிழ் நாட்டில் இரண்டாவது மொழியாக ஹிந்தியையோ, சமஸ்கிருதம் முதலியவைகளையோ கட்டாயமாக எடுத்துப் படிக்க வேண் டியதில்லை என்று முதல் உத்தரவில் குறிப்பிட்ட அதே கல்வி யமைச்சர், பிரதேச மொழியை முதல மொழியாகவும், ஆங்கிலத்தை மூன்றாவது மொழியாகவும் படிக்க வேண்டும். ஹிந்தி, சமஸ்கிருதம் போன்றவைகளில் ஒன்றை இரண் டாம் மொழியாகக் கட்டாயம் படிக்க வேண்டும் என்று இரண்டாம் உத்தரவில் வற்புறுத்தியதற்கு இதைத் தவிர வேறு காரணம் என்ன சொல்ல முடியும்? கொஞ்ச நஞ்சம் உள்ள சந்தேகத்தையும், ஹிந்தி மொழிப்பயிற்சி சர்க்கார்

வேலைகளுக்கு ஒரு விசேஷத் தகுதியாக, வருங் காலத்தில் பாவிக்கப்படும் என்ற வியாக்கியானம் போக்கடித்து விடும். அப்படியும், ஹிந்தியைத் தான் படிக்க வேண்டும் என்று நேரடியான முறையில் கட்டாயமாக வற்புறுத்தப்படவில்லை. இதற்குக் காரணம் மந்திரி சபைக்குத் தைரிய மில்லாதது தான்.

அகில இந்திய மொழி என்ற முறையில் ஆங்கிலத்தின் ஸ்தானத்திற்கு அடுத்த வாரிசாக ஹிந்தியைப் புகுத்தவேண்டும் என்ற கொள்கையை உருவாக்கவே முயற்சி செய்யப்படுகிறது.

## தமிழே பொதுமொழி யாகலாமே !

இலக்கிய வளமோ, இலக்கண அமைதியோ இல்லாத இந்தியை எப்படிப் பொது மொழியாக்க முடியும்? பீகார், ஐக்கிய மாகாணம், டில்லி, மகோசலம் ஆகிய நான்கு இடங்களில் தான் ஹிந்தி பேசப்படுகிறது. அதுவும் பலவிதமாக; உண்மையாகப் பார்த்தால் 20 மாவட்டங்களில் 4 வட்டங்களில் அது பேசப்படுகிறது. அதைவிட, இலக்கிய, இலக்கண வளம் மிகுந்ததும், மிகப் பழமையானதும், ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் வழங்கி யிருந்ததுமான தமிழ் மொழியை இந்தியப் பொது மொழியாக வைத்தாலென்ன?

சமீபத்தில் வங்காள மொழி நூலாசிரிய ரொருவர், 'தமிழ் மொழி வளத்தை மற்ற மொழிகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால், தமிழ் தான் இந்தியப் பொது மொழியாக இருக்கத் தகுந்தது' எனக் கூறி யிருக்கிறார்.

இந்தியா முழுவதுக்கும் பொதுவான ஒரு மொழிபற்றி இதுவரை எத்தனைவாதப் பிரதிவாதங்கள் நடந்தன. இதுவரை எவ்வித முடிவும் ஏற்படவில்லை. அதற்குப் பதிலாக இந்திய மக்களிடையே மொழித் தகராறு காரணமாக வேற்றுமைதான் அதிகரித்து வருகிறது. ஹிந்தி பேசுவோருக்கும் உருது பேசுவோருக்கும் மனமாச்சரியம் மிகுந்திருக்

கிறது. வகுப்பு வேற்றுமையும் மொழி வேற்றுமையும் வளருகிறது.

எனவே, இவ்வித மனமாற்சரியத்தை முளையிலேயே கிள்ளியெறிந்துவிட்டு, அகில இந்தியாவுக்கும் திருப்திகரமான ஒரு மொழி இயற்கையாக ஏற்படும்படி செய்வது தான் சரியான முறையாகும். ஒவ்வொரு மாகாணங்களுக்கும் சொந்தமாக வளம்பெற்ற வலுப்பெற்ற மொழிகள் இருக்கும் போது அவைகளை சுலபத்தில் ஆக்கிரமித்துவிட ஒரே ஒரு தனி மொழியால் முடியாது. ஒரு வேளை கால வளர்ச்சியில் ஒரு மொழி அதன் முக்கிய யோக்கியதைகளினாலும் விரிவடையும் தன்மையினாலும் அனேகமாக அகில மாகாண மொழியாக மாறுவது சாத்தியமாகலாமே யொழிய, ஒரு மொழியே முழுவதும் ஆதிக்கம் பெறுவதென்பது சாத்தியமானதல்ல. சாத்தியமானாலும் வரவேற்கக் கூடியதல்ல. உதாரணமாக, ஐரோப்பா (ரஷ்யா தவிர) சர்வ தேசிய விவகாரங்களுக்காக ஒரு பொது மொழியைப் பெற்றிருக்கவில்லை. பிரஞ்சு மொழி தன் பரம்பரைப் பாத்தியதையினாலும், வளைந்து கொடுக்கும் தன்மையினாலும் சற்று முக்யத்துவம் பெற்றிருக்கிறது. இதுபோல, நம் தேசத்தில் ஏதாவது ஒரு மொழி தானாக அகில இந்திய மொழியாக உருவடையட்டுமே! அவ்விதம் எந்த மொழி பொது மொழியாக உருவாகும் என்று முன்கூட்டிச் சொல்வது கடினம். இப்பொழுதிருக்கும் பெரிய மொழிகளுள் ஒன்றாக அது இருக்கலாம். ஏன் அது தமிழாக இருக்கக்கூடாது? மிகப்பழைய மொழிகளில் ஒன்றல்லவா அது? அதுவும் பேச்சு வழக்குஒழியாமல் சீர் இளமையோடு இருக்கும் மொழியல்லவா?

## பாசிசம் ஒழிக !

எனவே, ஹிந்தியைத் தமிழ் போன்ற மொழிகள் மீது திணிக்கும் பாசிச மனப்பான்மை இருக்கக்கூடாது. ஹிந்தியை மட்டுமல்ல; எந்த மொழியையும் அதற்கு எத்தனை விசேஷ குணங்களோ மதிப்போ இருந்த போதிலுஞ்சரி; மக்கள் மீது திணிப்பதென்பது பெருந்தவறாகும்.

சரித்திரக்கண் கொண்டு நோக்கினால், இதுவரை இந்தியா முழுமைக்கும் (அரசியல் விவகாரங்களுக்காக ஏழும்பிய அரசாங்க மொழியைத் தவிர) பொது மொழி என்று ஏதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. இன்று இந்தியா முழுமைக்கும் பொது மொழியாக வழங்குவதற்கு ஒரு மொழி அவசியமென்றால், அது எல்லோரும் ஒப்புக் கொள்ளக் கூடியதாக—பேரறிஞர்களின் அபிப்பிராயத்தை அநுசரித்து—ஒரு மொழியை ஏற்படுத்த வேண்டுமே யொழிய, யதேச்சாதிகாரமாக, ஹிந்தி போன்ற மொழியைத் திணிப்பதை யாரும் ஏற்றுக்கொள்ள முடியாது.

## முழு மூச்சாக எதிர்ப்போம்

ஹிந்திக்குத் தான் பொது மொழியாவதற்குரிய தகுதியிருக்கிறது என்று சொல்வது, மற்ற மொழிகளுக்கு இருக்கும் ஆற்றலையும், பெருமையையும் அவமதிப்பதாகும் என்றும் ஹிந்திக்கே தேசிய யோக்கியதைகள் இருப்பதாகக் காட்டுவது, மற்ற மொழிகளை தேசிய யோக்கியதைகளற்ற மொழிகள் என மறைமுகமாகக் கூறிக் கேவலமாகக் கருதச் செய்வதாகும் என்றும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எனவே, இன்றைய நிலையில் எவ்வகையாலும், ஹிந்தி பொது மொழி என்ற ஹோதாவில் நம் நாட்டில் புகுவதை நாம் அநுமதிக்க முடியாது. தமிழராயினார் அனைவரும் ...பிராமண சகோதரர்கள் உட்பட (தாங்களும் தமிழர் தான் எனக்கருதினால்) ஹிந்தி தமிழ் நாட்டில் நுழைந்து, தமிழ் மாணவ மாணவிகளின் தாய்மொழிப் பற்றைக் குலைக்க முயலும் முயற்சியை முழு மூச்சாக எதிர்க்கவேண்டுமென நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

★

# 6. ம. பொ. சிவஞானம்

தலைவர் அவர்களே! தாய்மார்களே! தோழர்களே!

எங்கு தோன்றியது? என்று தோன்றியது? என்று ஆராய்ச்சியாளர்களால் அறிய முடியாமல் இருக்கின்ற, தோன்றிய காலம் அறியாத தொன்மைத் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு ஊறு செய்ய வந்துள்ள இந்தி மொழியை எதிர்க்கவே நாம் கூடியுள்ளோம். தமிழின் தொன்மையை ஒருவாறேனும் உணர்ந்துள்ள தமிழ் அமைச்சர் ஒருவர் இந்நாட்டில் இந்தியைக் கொண்டு புகுத்துவது தான் நமக்கும் புதுமையாக இருக்கிறது. இப்புதுமையிலும் புதுமையாக இருக்கிறது, இம்மாநாட்டில் ஏராளமான தாய்மார்கள் வந்து கலந்து கொண்டிருப்பது. இதைப் பார்க்கும்போது அதிகார மமதையில், பதவிப்பித்தில் ஆண் இனத்தைச் சார்ந்த அவினாசியார் கட்டாய ஹிந்தியை இந்நாட்டில் புகுத்துகிறார் என்பதற்காக ஆண் இனத்தையே வெறுத்து பெண் இனம் தமிழ் காக்க முன் வந்துவிட்டது போலும் என்றே எனக்குத் தோன்றுகிறது. அன்று ஆங்கில ஏகாதிபத்தியம் தமிழைக் கெடுக்க ஆங்கிலத்தை இந்நாட்டில் புகுத்தியபோது ஆடவர்கள் பதவிக்காகவும் உத்தியோகத்திற்காகவும் அதை விரும்பிப்படித்தனர். அந்த நேரத்தில் தமிழ் உதாசீனம் செய்யப்பட்டு அடுப்பங்கரை ஏகவும் அதைத் தமிழ்த் தாய்மார்கள் தம் இரு கையேந்திக் காத்தனர். இன்று ஆங்கில ஏகாதிபத்தியம் ஒழிந்து போகவும் தாய்மார்மார்கள் தாம் இதுகாறும் காத்துவந்த தமிழை இதோ தமிழன்னை என்று நம்மிடம் ஒப்படைக்கின்றனர் என்பதாகத் தான் நான் இதைக் கருதுகிறேன். என் முன்னே வீற்றிருக்கும் ஆண்கள் கூட்டமல்ல; இவண் மேடைமீது வீற்றிருக்கும் பெண்கள் கூட்டம் தான், சக்திகளின் கூட்டம்தான்

இந்நாட்டிலிருந்து இந்தியை விரட்டப் போகிறது. போராட்டத்தின் வெற்றி இந்தத் தாய்மார்கள் கையில் தான் இருக்கிறது

## தமிழர் இந்தியை ஏற்கமாட்டார்கள்

போராட்டத்திற்குத் தயாராகப் போர்முரசு கொட்டவே இந்த மூன்று கிழவர்களும் (அடிகள், திரு. வி. க, பெரியார்) இங்கு அமர்ந்திருக்கிறார்கள். தாய்மார்களுக்கும் கிழவர்களுக்கும் இவ்வளவு உற்சாகம் ஏற்பட்டிருக்கும் போது வேறு எந்தத் தமிழன் தான் தூங்கிக்கொண்டிருக்க முடியும்? தமிழன் தூங்கிக் கொண்டிருந்தபோதே வந்த மொழியால் சொந்த மொழியை அழிக்கமுடியாமல்போய் விட்டதென்றால், தமிழன் விழித்துக் கொண்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் இந்த இந்தி மொழியால் யாது செய்ய இயலும்? வரும் மொழி எதுவும் தமிழை அழிக்க முடியாது. வேண்டுமானால் அதைச் சிறிது அடித்துக் காயப்படுத்தலாம். அவ்வளவுதான். அந்த அடி விழாமற்படி பாதுகாக்கவே நாம் கூடியிருக்கிறோமே யொழிய, தமிழ் பலம் இறந்து கிடக்கிறது என்பதற்காகவோ, அல்லது சக்தியற்று கிடக்கிறது என்பதற்காகவோ அல்ல என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். அன்று அவினாசியார் வானொலியில் கூறினார் 'துர் அதிர்ஷ்டவசமாக தமிழ் நாட்டில் இந்தியைக் கொண்டுவந்து புகுத்த நேரிட்டுவிட்டது' என்று. நாம் கூறுகிறோம், அதிர்ஷ்டவசமாக தமிழன் நாக்கு அத்தகைய ஹிந்தி மொழியை ஏற்கத் தயாராயில்லை என்று. தமிழில் பண்பட்ட தமிழன் நாக்கு ஹிந்தியை ஏற்கவே ஏற்காது, எவ்வளவு தான் திணிக்கப்பட்டாலும் கூட. கல்வி அமைச்சர் இதை நன்குணர்வார், தமிழன் நாக்கு ஹிந்தியை ஏற்காது என்று. உணர்ந்ததால்தான் முதலில் ஹிந்தியை இஷ்டபாடமாக்கினார். பிறகுதான் அதே ஹிந்தியைக் கட்டாயப் பாடமாக, அல்ல கஷ்டப் பாடமாக ஆக்கத் துணிந்தார். இடையே ஏற்பட்டதென்ன? கட்டாயப் பாடமாக்கும்படி யாரோ அவருக்குத் தொல்லை கொடுத்திருக்க

வேண்டும். அந்தத் தொல்லைகளை நீக்கத்தான், அந்தத் தொல்லை கொடுத்த கூட்டத்தினின்று அவரை விடுதலை செய்துவிடத்தான், மீட்டுவிடத்தான் நாம் இந்தக் கட்டாய ஹிந்தியை எதிர்க்கிறோம்.

## மந்திரி சபையைக் கவிழ்ப்பது எண்ணமல்ல

இதுதான் உண்மையே ஒழிய, நமக்கு அவினாசியார் ஆட்சியை அழிக்க வேண்டுமென்பதோ, அல்லது ஓமந்தூரார் ஆட்சியை ஒழிக்க வேண்டுமென்பதோ, அல்லது காமராஜரின் தலைமையைக் கவிழ்க்க வேண்டுமென்பதோ, நமது நோக்கமல்ல. கட்டாய பாடதிட்டம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதுதான் நமது ஒரே குறிக்கோள். இந்தக் குறிக்கோளின் காரணமாகத்தான் அரசியலில் கருத்து வேறுபாடுகள் கொண்டுள்ள பலரும் இங்கு ஒரே மேடையில் வீற்றிருக்க ஏது வாய்த்திருக்கிறது. முதலில் மத்ய ஆட்சியில் வேலைக்கமர ஹிந்தி அறிவு வேண்டியது அவசியம் என்று கூறப்பட்டது. இன்று மெள்ள மாகாண அலுவல் கவனிக்கவும் ஹிந்தி அறிவு அவசியம் என்று கூறப்படுகிறது. நாளை அடுப்பங்கரையிலும் ஹிந்திதான் பேசப்பட வேண்டும் என்று கூட உத்தரவு பிறப்பிக்கப்படலாம் போலும். அது தான் ஆட்சியாளரின் உத்தேசம் போலும். இல்லாவிட்டால் நாட்டிலுள்ள சகல செகண்டரி பாடசாலைகளிலும் ஹிந்தி கட்டாய மொழியாக்கப்படுவானேன்? செகண்டரி பாடசாலைகளில் படிக்கும் லக்ஷக்கணக்கான சிறுவர் சிறுமியர் எல்லோருமா மத்ய சர்க்காரில் வேலையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கப் போகிறார்கள்? அப்படித்தான் எல்லோரும் மத்திய சர்க்காரை எதிர்பார்க்கிறார்கள் என்றால், மாகாண ஆட்சி என்ன மாய்ந்து போகவேண்டியதுதானா? மாகாண ஆட்சி மடியவா மாகாண மந்திரி சூழ்ச்சி செய்வார்? இல்லை இல்லை. நமது தாய் மொழிக்கு நமது வீட்டிலுள்ள செல்வாக்கையும் அழித்து, அந்த இடத்தில் இந்தியைக் கொண்டுவந்து அமர்த்தத்தான், அவினாசியார் வடநாட்டாருக்கு அடிமையாகி சூழ்ச்சி செய்கிறார் என்றுதான் கருத

வேண்டியிருக்கிறது. ஆனால் அமைச்சர் கூறுகிறார், "அப் படிக்கில்லை. ஹிந்தி ஆட்சி அலுவலுக்காக படிக்கப்படட் டும். நாம் அத்துடன் தமிழையும் வளர்ப்போம். தமிழ்க்களஞ் சியம் உண்டாக்குவோம்." என்று. அதாவது களையும் வளரட்டும்; அதோடு பயிரையும் வளர்ப்போம் என்று கூறுகி றார் களை வளர்க்கும் பண்ணையாளனுக்கு பயிர்வளர்க்கும் பண்பு இருக்கும் என்று நமக்கு நம்பிக்கையில்லை. நம்பிக்கை இருக்கவும் முடியாது. அப்படி நம்பினால் நாம் ஏமாந்தே போவோம். ஆகவே தான் களையை நாங்கள் எவ்வகையானும் பிடுங்கித் தான் தீருவோம், செழுந் தமிழ்ப் பயிரிடை களையென முளைத்து நிற்கும் இக்கட்டாய இந் தியை ஒழித்தே தீருவோம் என்று முடிவு செய்யவே அதற் கான வழி வகுக்கவே நாம் இங்கு கூடியுள்ளோம்.

## அழைப்பில்லாமலே வந்திருப்பேன்

"ஏனையா அமைச்சரே! ஹிந்தியைத் தாய்மொழியாக கொண்டிராத ஏனைய மாகாணங்களிலெல்லாம் ஹிந்தி கட் டாய பாடமாக்கப்படாத போது இத்தமிழ் நாட்டில் மட்டு மேன் ஹிந்தி கட்டாயமாக்கப்பட வேண்டும்" என்று கேட் டால் 'நல்ல காரியத்தை நாம் தான் முதலில் செய்தால் என்ன?" என்று திருப்பிக் கேட்கிறார். அதே அமைச் சரே கூறுகிறார், ஹிந்திக்கும் தமிழுக்கும் யாதொரு சம்பந் தமும் இல்லையென்று. உண்மையிலேயே அரசியலிலோ, மத இயலிலோ, சமுதாய இயலிலோ, மொழி இயலிலோ, ஹிந்திக்கும், தமிழுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்று யாரும் ஒப்புக்கொள்வர்கள். இதை உணர்ந்து தான் கல்வி அமைச்சர் மாகாணத்தின் மற்ற பாகங்களில் இந்தியைக் கட் டாய பாடமாக்கியபோது, தமிழ் நாட்டில் மட்டும் அதை இஷ்டபாட மாக்கினார். இதே காரணமாகத் தான் மற்ற தெலுங்கு, கன்னட, மலையாள ஆகிய மூன்று மொழிகளி லும்கூட ஜனகணமன, வந்தேமாதரம் என்ற பாடலுக்கு சரியான மொழி பெயர்ப்பு பாடல்கள் இருக்கும்போது அங் கெல்லாம் அதையே தேசியப் பாடலாக வைத்துக்கொள்ளு

மாறு செய்துவிட்டு, தமிழ் நாட்டில் மட்டும் ஜனகணமன, வந்தே மாதரம் ஆகிய இரண்டு பாக்களுடன் வாழிய செந்தமிழ் என்ற பாடலும் தேசியப் பாட்டாக வைத்துக்கொள்ளலாம் என்று ஒப்புக்கொள்ளப்பட்டதாகும். இக்காரணங்களை ஒட்டித்தான் நாமும் கல்வி அமைச்சருக்கு செய்வன திருந்தச் செய்க என்று அறிவுரை கூறுகின்றோம். தமிழ் காக்க வேண்டுமென்றால் அதற்காகக் கதராடை, கருப்புச் சட்டையோடு சேர்ந்து கொள்வதா என்று சிலர் கேட்கிறார்கள். அவர்களென்ன தமிழ் காக்கும் வேலையை கருப்புச் சட்டைக்காரர்களுக்கே தாரை வார்த்துக் கொடுத்துவிட வேண்டும் என்று முடிவு செய்துக் கொண்டிருக்கிறார்களோ தெரியவில்லை.

கருப்புச்சட்டை, கதர்ச் சட்டை, காவிச்சட்டை, கால் சட்டை — எச்சட்டை போட்டிருந்தாலும் தமிழன் என்ற உடல் சட்டையோடு பிறந்துள்ள தமிழர்கள் அத்தனை பேரும் தமிழைக் காக்கக் கடமைப்பட்டவர்கள் தான். நல்ல வேளையாக மாநாட்டினர் எனக்கு அழைப்பு அனுப்பியிருந்தனர். அழைப்பு அனுப்பாதிருந்தாலும், அழையா வீட்டுக்கு நுழையா சம்பந்தி என்ற கௌரவத்தைக்கூட விட்டுக் கொடுத்து விட்டு, நான் மாநாட்டில் வந்து அவசியம் கலந்து கொண்டே இருப்பேன்.

## கட்சி வேறுபாடில்லாத போராட்டம்

தமிழ் காக்க நடத்தப்படும் எம்முயற்சியிலும் எந்தத் தமிழனுக்கும் பங்கு கொள்ள உரிமையுண்டு. நமக்கும் அமைச்சருக்கும் யாதொரு பகையுமில்லை. அவருக்கும் தமிழன் மீது பகையில்லை. அப்படி யிருந்தும் ஏன் கட்டாய ஹிந்தியைப் புகுத்துகிறார்? அங்கு தான் சிந்திக்கவேண்டியிருக்கிறது. அவராகச் செய்யவில்லை. யாரோ ஒரு கூட்டத்தாரின் தூண்டுதலின் பேரில் தான் ஹிந்தியை நுழைத்திருக்கிறார். இஷ்ட பாடமாக முதலில் வைக்கப்பட்ட ஹிந்தியை கட்டாய பாடமாக வைக்கும்படி மந்திரியாருக்கு

எடுத்துக்கூற காங்கிரஸில் ஒரு சாராருக்கு உரிமை யுண்டென்றால், அதேபோல் கட்டாய பாடத்தை இஷ்டபாடமாக்கும்படி எடுத்துக்கூற காங்கிரசில் உள்ள மற்றொரு சாராருக்கும் அதே உரிமையுண்டல்லவா? ஒரு சில வடநாட்டவருக்கும், அவரது வால்பிடிப்போருக்கும் மற்றும் சில பத்திரிகைக்காரர்களுக்கும் அஞ்சி தமது முதல் உத்தரவை அமைச்சருக்கு மாற்ற முடிந்ததென்றால், மற்றொரு பகுதியார், உண்மைத் தமிழ் மக்களின் பெரும்பகுதியார் அதை எதிர்ப்பார்களானால், அவர்களுக்காக ஏன் அமைச்சர் மறுபடியும் தமது இரண்டாவது உத்தரவை வாடஸ் வாங்கிக் கொள்ளக்கூடாது. நமக்குள்ள பேச்சுரிமை, எழுத்துரிமை ஆகிய எல்லா உரிமைகளையும் உபயோகித்து இதை வற்புறுத்துவோம்.

இந்தப் போராட்டத்தில் கட்சி வேறுபாடு பாராட்ட வேண்டிய அவசியமில்லை. சட்டை வேறுபாடுமின்றி ஆண், பெண் அனைவரும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவோம். தமிழனுக்குப் பிறந்த ஒரு சிசு தனக்கு ஹிந்தி படிக்க முடியவில்லையே என்று அழுமானால் அதுவும் ஹிந்தி எதிர்ப்புதான். இந்த எதிர்ப்புக்காக அவினாசியார் தம் உத்தரவை மறுபடி மாற்றித்தான் ஆகவேண்டும். ஜூன் மாதத்தில் ஒரு உத்தரவும் ஜூலை மாதத்தில் ஒரு உத்தரவும் பிறப்பிப்பது ஆளும் அறிவல்லவே என்றாலும், ஒரு முறை மாற்றி பழக்கப்பட்டிருப்பதால் மறுபடியும் அவர் மாற்றிக் கொள்ளலாம். முதன் முறை மாற்றியபோது வேண்டுமானால் தமது உள்ளம் அதற்கு ஒருப்படாமல் இருந்திருக்கக் கூடும். இம்முறை மாற்றும்போது அவருக்கு அத்தகைய வருத்தமும் இருக்க நியாயமில்லை. இந்த ஹிந்தி மொழியை செகண்டரி பாடசாலையில் அல்லாமல் கல்லூரியில் அமைச்சர் நுழைத்திருப்பாரானால் நாம் இவ்வளவு தூரம் எதிர்க்க வேண்டிய அவசியம் எற்பட்டிராது.

ஆரம்ப பாடசாலையில் சளி சிந்தத் தெரியாத குழந்தைதான், செகண்டரி பாடசாலையில் சளி சிந்தத் தெரிந்த குழந்

தையாகக் காட்சியளிக்கிறது. ஆரம்ப பாடசாலை மாணவ மாணவிகளின் பருவத்தைத் தம் தாயின் மடிமீது தவழும் குழந்தைப் பருவத்துக்கு ஒப்பிட்டால், செகண்டரி பாட சாலை மாணவ, மாணவிகளின் பருவத்தை தாயின் காலை கட்டிப் பிடிக்கும் பருவத்துக்கு ஒப்பிடலாம்.

அத்தகைய இளமைப் பருவத்திலுள்ள காலத்தில் தான், அதாவது தன் தாய் மொழியையே நன்கு தெரிந்து கொள்ளாத சமயத்தில்தான் கல்வி அமைச்சர் கட்டாய ஹிந்தியைக் கொண்டுவந்து நுழைக்கிறார். தாய் முகம் அறியாப் பருவத்தில் தாதியிடம் ஒப்புவிக்கப்படும் குழந்தை தன் தாய்முகம் திரும்பிப்பார்க்குமோ, தான் வளர்ச்சியுற்றபோது. தாய்முகம் திரும்பிப்பாராது, திரும்பிப் பார்க்கும் சக்தி பெற்றிராது என்பதைத் தாய்மார்கள் அறிந்திருக்கிறார்கள். நாமும் அறிவோம். அனுபவத்தில் இல்லையானால் ஆராய்ச்சி மூலம். இதே தாய் மொழி யறியாப் பருவத்தில் ஹிந்தியை நுழைத்து விட்டால், தாய் மொழிப்பற்று அழிந்து போகும். அப்புறம் இவர்கள் நிரந்தர அடிமையாகி விடுவார்கள் என்று கனவு கண்டு கொண்டு தான் ஆட்சியாளர்கள் அந்நிய மொழியாகிய ஹிந்தியை நமது குழந்தைகளுக்குத் திணிக்கின்றனர். ஹிந்தியும் கட்டாய பாடம். ஆங்கிலமும் கட்டாய பாடம். தமிழும் கட்டாய பாடம். ஆக மூன்று மொழிகளும் கட்டாய பாடம். இதில் எதைத்தான் ஒரு குழந்தை ஒழுங்காகக் கற்றுக் கொள்ள முடியும்?

## கல்வி அமைச்சருக்கே இந்தி தெரியாதே!

நமது கல்வியமைச்சரையே எடுத்துக் கொள்வோம். அவர் எவ்வளவு காலமாக காங்கிரசிலிருந்து வருகிறார். காந்தியார் சென்ற 30 வருடகாலமாக 'ஹிந்தி இந்நாட்டின்' தேசியமொழி. ஆகவே, அதை எல்லோரும் படிக்க வேண்டும், என்று இடை விடாது கூறி வந்தாரே, அப்படியிருந்தும் கல்வி அமைச்சர் இதுவரை ஹிந்தி கற்றுக் கொள்ளாத காரணம் என்ன? ஒரு எழுத்தாவது கற்றுக் கொண்டிருக்கி

றாரா இவர்? அப்படியிருக்க அறியாத குழந்தைப் பருவத்தில் அநியாயமாக ஒரு அந்நியமொழியைக் குழந்தைகளின் மீது சுமத்தலாமா? அவர்களென்ன யந்திர வார்ப்படங்களா இவ்வளவு பளுவையும் சுமந்து கொள்ள? (B. Com) பி. காம். படிப்புக்கு பிரஞ்சு மொழி கட்டாய பாடமாக வைக்கப் பட்டிருந்தது. (I. C. S.) ஐ. ஸி. எஸ். க்கு சமஸ்கிருதம் கட்டாய பாடமா யிருந்தது. இவை பற்றி யாராவது இவ் வளவு கவலை எடுத்துக் கொண்டார்களா? என்? அந்தப் பருவங்களில் அவசியத்திற்கேற்ப எதையும் பயில முடியும். மேலும் அந்நிலைக்கு வருபவர் வெகு சொற்பப் பேர்தான். ஆனால், செகண்டரி பாடசாலையில் படிப்பவர்கள் குழந்தை கள். பல லட்சக்கணக்கானவர்கள். அவ்வளவு பேரையும் பாதிப்பதால்தான் நாம் இதை எதிர்க்கிறோம்.

தமிழ் தவிர வேறு எந்த ஒரு மொழியும் இத்தமிழ் நாட்டில் கட்டாய பாடமாக இருக்கக் கூடாது என்பதுதான் எனது விருப்பம். ஒரு மொழியை விருப்பப்பாடமாகவோ, கட்டாய பாடமாகவோ ஏற்றுக் கொள்ளும் உரிமை தமிழ் நாட்டில் தமிழ்மக்களுக்குத்தான் உண்டேயொழிய, வேறு யாருக்கும் அவர்கள் மீது எவ்வித ஆதிக்கமும் செலுத்த உரிமை யில்லை. ராஜேந்திர பிரசாத்தின் உத்தரவின் பேரில், ஜவஹர்லால் நேருவின் ஆசியின் பேரில், மவுண்ட் பேட்டன் பிரபுவின் ஆமோதிப்பின் பேரில், இந் நாட்டில் ஹிந்தி கட்டாய பாடமாகப் புகுத்தப்படக்கூடாது என்பது தான் எனது ஆட்சேபனை. தமிழ் மக்களின் விருப்பத் துக்கு மாறாக ஹிந்தி தமிழ் மாணர்வர்களுக்கு வற்புறுத்தப் படக்கூடாது என்பது தான் நமது முடிவு. மந்திரி பதவி யில் இருப்பதால் அவினாசியாருக்கு இதெல்லாம் புரியாமல் இருக்கலாம். அல்லது புரிந்தும் தம் பதவியைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டி இவ்வாறு செய்யலாம். ஆனால் மந்திரி பதவியைவிட மனிதப் பதவி முக்கியமானது.

## வங்காளிகளைப் பாருங்கள்

நான் ஒரு வேளை கல்வி மந்திரியாரின் கண்சிமிட்டலுக்கு கட்டுப்பட்டுப் போய் விடுவேனோ என்று சிலர் சந்தேகப்பட்டிருக்கலாம். கல்வி மந்திரியாரின் கண்சிமிட்டலுக்கல்ல, கண்ணுருட்டலுக்குக்கூட அஞ்சாதவன்தான் நான். நானும் தமிழன். நீங்களும் தமிழர்கள். அவினாசியாரும் தமிழர் தான். நம்மை ஈன்றவளும் தமிழ்த்தாய் தான். நாம் யாவரும் நம் குழந்தைப் பருவத்தில் நம் தாய்மார்களை அம்மா, அம்மா என்றுதான் தமிழில் அழைத்திருப்போம். அத்தகைய அன்பான தாய் முகத்தில் அம்மை வார்த்து தழும்புகள் உண்டாக இருந்தால், அதைத் தடுக்கும் சக்தி நமக்கிருந்தால், நாம் சும்மா பார்த்துக்கொண்டிருக்க முடியுமா? அதைத் தடுக்க நம்மாலானதைச் செய்யச் சிறிதேனும் தாமதம் செய்வோமா? அதேபோல் நம் தாய் மொழியாகிய தமிழுக்கு, ஹிந்தியால் கேடு வருகிறது என்றால், அதை நம்மால் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? வங்கத்தில்—வங்காள மொழியோடு ஒன்றிரண்டு உருது மொழி சேர்க்கப்பட்டு வானொலியில் பேசப்பட்டது என்ற காரணமாக எவ்வளவு கிளர்ச்சி நடந்தது தெரியுமா? உருது சேர்ந்தால் வங்காள மொழி கெட்டுப் போகும் என்று வங்காளிகள் கட்டுப்பாடாகக் கிளர்ச்சி செய்து வெற்றி பெற்றார்கள் என்பது நீங்கள் அறியாததல்லவே. அப்படி இருக்க ஏன் இந்த அறிவற்ற ஆணவச் செயல்? வழியில் ஒரு ஆமை கிடந்ததாம். அதை அடிக்க நினைத்தானாம் ஆறுமுகம். அடிக்கத் தெரியாமல் ஆமை முதுகின் மேல் அடித்தானாம். அதன் ஓட்டின் மீது படவே அது அசையாமல் கிடந்ததாம். அங்கு வந்தானாம், ஆராவமுதன் என்னும் பெயரோன். அவன், 'திருப்பியடியப்பா; அது செத்துப் போகும்' என்றானாம். அவன் சற்று நேரம் கேளாமலே யிருந்து, கடைசியாக ஆமையைத் திருப்பிப் போட்டு அடித்தானாம். ஆமையும் உடனே இறந்து போய் விட்டதாம். செத்தே போயிட்டதடா அட பாவி என்று ஆறுமுகம் கத்தினானாம். ஆறு

முகம் நிலையில் தான் அவினாசியார் இருக்கிறார். ஆராவமுதன் நிலையில் தான் நாம் இருக்கிறோம்.

## சட்ட மறுப்புச் செய்தே தீருவோம்

"ஹிந்தியை எதிர்க்கவேண்டியிருந்தாலும் சிவஞானம் ஏன் ஒரு தனி இயக்கம் நடத்தக்கூடாது; இந்தக் கருப் சட்டைக்காரர்களோடு ஏன் சேர்ந்து கொண்டார்" என்று சிலர் கூறுகிறார்கள். இதெல்லாம் கட்டாய ஹிந்தியை ஒழித்துக் கட்ட செய்யப்படும் கூட்டு முயற்சியைக் கெடுக்க சதிகாரர்கள் செய்யும் சூழ்ச்சி என்பதை நான் அறிவேன். ஆகவே தமிழ் காக்க நான் யாருடனும் உறுதியோடு ஒத்துழைக்கத் தயாராகவே இருந்து வருவேன். தமிழ் நாட்டில் தமிழை இழந்த பிறகு, தமிழனுக்கு வாழ்வு ஏது? தமிழ் நாடு என்ற பேர்தான் ஏது? ஆகவே, ஒருக்காலும் நாம் தமிழ் அழியப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. சட்ட ரீதியான எந்தப் போராட்டத்திலும் நான் கலந்து ஒத்துழைக்கிறேன் என்று கூறியது சிலருடைய சந்தேக மனப்பான்மையைத் தூண்டி விட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். காங்கிரஸ் தமிழர்களுக்குக்கூட ஹிந்தியின் மீது வெறுப்புண்டு. எனக்குத் தெரியும் அன்று கட்டாய ஹிந்தி நுழைக்கப்பட்ட போது காமராஜர் கலக்கம் அடைந்ததும், பக்தவத்சலம் பதறியதும், முத்துரங்கம் முணுமுணுத்ததும். அதே தலைவர்கள் தான் இன்னும் இருக்கிறார்கள். ஆகவே நாம் அதைரியப்பட வேண்டியதில்லை. சட்ட ரீதிக் கிளர்ச்சியென்றால், சட்டரீதியாக நமக்குள்ள எழுத்துரிமை, பேச்சுரிமை—இவ்வுரிமைகளைக் கொண்டு கட்டாய ஹிந்தியை எதிர்த்து நிற்போம். அந்த உரிமையை ஆட்சியாளர்கள் தடைசெய்யத் துணிந்தார்களானால் அவசியம் சட்ட மறுப்பு செய்வோம். சட்ட மறுப்பு எப்போது துவங்குவது என்று அறிவிக்க, அதன் எல்லையைக் காட்ட சட்ட ரீதி என்ற வார்த்தையைச் சொன்னேனே ஒழிய, என்றென்றும் ஆட்சியாளரின் சட்டத்துக்கு அடிபணிந்து கிடப்பேன் என்பதல்ல.

அதன் பொருள் நான் நன்கு அறிவேன், சட்ட மறுப்பு இன்றி ஹிந்தி ஒழிய வேறு வழியில்லை என்பதை.

ஆகவே, சட்ட மறுப்புக்கு நானும் அஞ்சப் போவதில்லை. சட்ட மறுப்பு நடந்து அதன் மூலம் சிறைப்பட்டு ஒரு உடல் எலும்புருவாக நிற்குமானால் முதல் உடல் சிவஞானம் உடலாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். தமிழுக்காக எனது உயிரையும் அர்ப்பணிக்க நான் தயாராகவே இருக்கிறேன்.

## அவினாசியார் அவசரப் புத்தி

இந்தக் கட்டாய ஹிந்தி நுழைப்புக்கு பொறுப்பேற்க வேண்டியவர்கள் வேங்கடத்துக்கு அப்பால், விந்தியத்துக்கும் அப்பால் உள்ள வடநாட்டவர்கள்தான். தூர் அதிருஷ்டவசமாக சற்று அவசரப்பட்டு அவினாசியார் தாமே கூண்டில் ஏறிவிட்டார். அவர்களுக்கு எதிர்ப்பாக, நமது கட்சியின் சார்பாக நின்று சாட்சி சொல்ல சாட்சிக் கூண்டில் நிற்க வேண்டிய அவினாசியார், சற்று அவசரப்பட்டு நேருவும் பட்டேலும் இருக்க வேண்டிய குற்றவாளிக் கூண்டில் அவர்களுக்குப் பதிலாக ஏறிவிட்டார். ஆகவேதான் தண்டனை கடுமையாக இருக்கக் கூடாது என்கிறேன். ஒரு தமிழன் நம்மீது வாள் வீச எண்ணி வாள் பிடிக்கிறான் என்றால் தமிழராகிய நாம் வாள்பிடித்த அந்தக் கையை நசுக்குவதோடு திருப்தியடைவோம். அந்த நபரையே அழித்து விட வேண்டுமென்கிற அவசியம் நமக்கு இல்லை நம்மீது காயம் படாமல் பார்த்துக்கொள்வோம். இவ்வளவுதான் நமக்குத் தேவை.

## இஷ்டபாடமாகவும் ஹிந்தி வேண்டாம்!

தமிழ் மொழி தனி மொழி. தமிழ்ப் பண்பு தனிப் பண்பு. தமிழ் வரலாறும் தனிவரலாறு. தமிழன் அரசும் தனி அரசு. தமிழன் இனமும் தனி இனம். தமிழரின் பண்பும், வரலாறும், அரசும் வடநாட்டுக்கு முற்றிலும் மாறுபட்டது. ஆகவே, வடநாட்டு மொழியான

ஹிந்திக்கு இங்கு ஒருக்காலும் இடம் அளிக்க முடியாது. இஷ்ட பாடமாகவும் ஹிந்தி இருக்க வேண்டிய எந்த அவசியமும் இல்லை. ஆகவேதான் இவ்வளவு பெருங் கூட்டமாக நீங்கள் இந்த ஹிந்தி எதிர்ப்பு மாநாட்டில் கலந்து கொண்டிருக்கிறீர்கள். இந்நேரம் செக்ரடரியேட்டிலும் இந்த எதிர்ப்புக்கு என்ன செய்வதென்று ஒரு கூட்டம் யோசித்துக் கொண்டுதான் இருக்கும். யோசித்துக் கொண்டிராவிட்டாலும் யோசிக்க வேண்டிய கிழமையாவது குறிக்கப்பட்டிருக்கும்.

அவினாசியாருக்கும், ஏனைய தமிழமைச்சர்களுக்கும் அவர்கள் புகுந்திருக்கும் ஒருநல்லபாதுகாப்பான மதிலைக் கட்டிக்கொடுத்தவர் பெரியார்தான். மதில்சற்று உயரமாகிவிட்டது. அதற்கு உட்புறத்தில் என்ன நடக்கிறது என்று நம்மால் இன்று அறியக்கூட வில்லை. ஆகவே, சற்று நாம் எட்டிப் பார்க்க இடம் அளிக்கும் அளவுக்கு அந்த மதிலி லிருந்து ஒன்றிரண்டு கற்களை எடுத்துவிட வேண்டும்.

அப்போதுதான் அவ்வப்போது மதிலுக்கு உட்புறம் இருந்து கொண்டு அவர்கள் செய்ய நினைக்கும் தவறுதல்களை நாம் வெளியில் இருந்து அறிந்து அவர்களைத் திருத்தம் செய்ய முடியும் என்றுதான் பெரியாருக்குச் சொல்ல ஆசைப் படுகிறேன். நமது விளக்கு என்பதற்காக நாம் முத்தங் கொடுத்தால் நம் வாயைத்தான் சுட்டுக்கொள்வோம். ஆகவே தமிழ் வளர, தமிழ் வாழ நாம் சகல முயற்சிகளையும் செய்ய வேண்டியதுதான்.

★

# 7. பாரதிதாசன்

அன்புமிக்க தலைவர் அவர்களே! பெரியார் அவர்களே! தாய்மார்களே! தோழர்களே!

நான் ஒரு ப்ரஞ்சு இந்திய வாசி. எனவே எனக்கு இந்த மாகாண சர்க்காரைப்பற்றி அதிகம் தெரியாது. இருந்தும் எனக்கு இம் மாநாட்டார் அழைப்பு அனுப்பியிருந்தனர்.

என்ன நடக்கிறதென்று பார்த்துப் போகலாம் என்று வந்தேன். வந்த இடத்தில் பேசும்படி கேட்டுக் கொண்டார்கள். அதற்கேற்ப நானும் ஏதோ எனக்குத் தோன்றுவதைச் சொல்லுகிறேன்.

இந்தி மொழியைக் கட்டாயமாகப் படிக்கவேண்டுமாம். ஏனென்றால் அது இந்நாட்டின் பொது மொழியாம். இந்தி பொது மொழி யென்றால் எந்த நாட்டின் பொது மொழி? நாவலந்தீவு என்று ஒரு நாடு இருப்பது உண்மைதான். ஆனால் அதில் இரண்டு தனி நாடுகள் உண்டு. அவைதான் ஒன்று ஆரிய நாடு, ஒன்று திராவிடநாடு, என்பனவாகும். ஹிந்தி ஆரிய நாட்டின் பொதுமொழியா? திராவிட நாட்டின் பொது மொழியா? திராவிடநாட்டின் பொது மொழியா ஹிந்தி? அதுவும் ஒரு திராவிடனாகிய நீயா ஹிந்தி இந்நாட்டின் பொது மொழி என்று கூறுவது? திராவிட நாட்டைத் தனி நாடாகப் பிரிக்க முயற்சி நடந்து வருவது உனக்குத் தெரியாதா? அல்லது திராவிட நாட்டுப் பிரிவினைக்குள்ள மக்கள் ஆதரவு உனக்குத் தெரியாதா?

இமயம் முதல் குமரி வரையில் ஒரே நாடென்கிறாயே. எப்போதாவது இந்நாவலந்தீவு முழுமையும் ஒரே நாடாக இருந்ததுண்டா? நாடுள்ள நிலை உனக்குத் தெரியாதா? அல்லது தெரிந்தும் எங்களுக்குத் தீங்கு செய்யப்பார்க்கிறாயா? இன்றென்னமோ கட்டாயத்தால் ஒன்றாய் இருக்கிறோம் என்பது உண்மைதான். என்றாலும் நாளை பிரிய வேண்டியதுதானே திராவிட நாடு! பிரிவினைக்கு இடையேயுள்ள காலமும் மிகச் சொற்பமாகத் தானே இருக்கமுடியும்? அதற்குள் ஏன் நீ தள்ளிப்பார்க்கிறாய்?

ஹிந்தியைப் படித்தால் நன்மை ஏற்படும் என்கிறாயே? அது என்ன உன்னுடைய உத்தேசமா? யாரைக் கேட்டாய் நீ? ஹிந்தியால் நன்மை ஏற்படுமா, தீமை ஏற்படுமா என்று உனக்குத் தெரியுமா? இனி கேட்பதென்ன? மறைமலையடிகளாரும் திரு. வி. க. அவர்களும் "இந்தியால் தமிழ் கெடும், தமிழர்கள் கெட்டுப்போய்விடுவார்கள்," என்று கூறிவிட்ட

பிறகு, இக்கூட்டம் இதை ஒப்புக் கொண்ட பிறகு வேறு யாரை நீ கேட்க வேண்டும்? இவர்களை விட தமிழ் அறிந்தவர்கள், தமிழில் தேர்ச்சி பெற்றவர்கள் வேறு யார்தான் இந்நாட்டில் இருக்கிறார்கள்?

திராவிட நாடு எப்படிப் பிரிய முடியும் என்று உனக்குச் சந்தேகம் தோன்றுகிறதா? போய் ஜின்னாவின் சட்டாம் பிள்ளையைக் கேள். தக்க பதில் கொடுப்பார். முனிஸிபாலிடி எலக்ஷனிலேயே ஓரளவுக்குத் தெரிந்திருக்குமே உன் சர்க்காருக்குள்ள ஆதரவும், எதிர்ப்பும். நீ அவ்வப்போது பேசி வருவதைப் பார்த்தால் இந்தி நுழைப்பில் உனக்கே போதிய இச்சையில்லை என்பது நன்றாக விளங்குகிறதே!

அப்படியிருக்கும் போது ஏன் சில வட நாட்டவருக்கும் இங்குள்ள சில ஒத்தைப் புத்திபார்ப்பனருக்கும் பயந்து இந்தியை இந்நாட்டில் நுழைய விடுகிறாய்! நீ ஏன் தயவுபார்க்கிறாய்! தைர்யமாக வடநாட்டார் உத்தரவை நிராகரித்துப் பார். "திராவிட நாட்டு மக்கள் ஹிந்தியை வெறுக்கிறார்கள்; ஆகவே இந்நாட்டில் ஹிந்தியைக் கட்டாயமாக்க முடியாது," என்று கூறிவிடு. அதற்கு எங்களைச் சாட்சியாகக் காட்டு. நீயாக ஏன் பழியை ஏற்றுக் கொள்கிறாய்? நீ நிராகரித்து விட்டால் அவர்கள் தாமாக எங்களுடைய எதிர்ப்பை ஏற்பார்களா இல்லையா? வீண் குழப்பத்தை ஏன் இந்நாட்டில் உண்டாக்குகிறாய்? அவர்கள் ஆட்டுவித்தபடி ஏன் நீ ஆடிக் கொண்டிருக்கிறாய்? திராவிட மக்களுக்கு உன்னிடமுள்ள நம்பிக்கையை ஏன் இதன் மூலம் கெடுத்துக் கொள்கிறாய்? இந்நாட்டுப் பெரும்பான்மை திராவிட மக்கள் அத்தனை பேருடைய ஆதரவும் உனக்கிருக்கும்போது ஏன் அச்சப்படுகிறாய்? தைர்யமாக வட நாட்டார் உத்தரவை நிராகரித்து விடு. இன்றேல் எங்கள் எதிர்ப்பையேனும் ஏற்றுக் கொள்."

★

# 8 டாக்டர் கிருஷ்ணசாமி

நாம் தொடங்கப் போகும் இந்தப் போராட்டத்தின் பலாபலன்களை நாம் அதிக ஜாக்கிரதையாக ஆராய்ந்து பார்க்கவேண்டு மென்றும், நாம் எந்த நோக்கங்கள், காரணங் களுக்காக இந்தப் போராட்டத்தில் இறங்குகிறோமோ அந் தக் காரணங்களைத் தெளிவுற உணர்ந்து கொள்ள வேண்டு மென்றும் நான் முதன்மையாக எச்சரிக்க வேண்டியிருக் கிறது.

இப்பிரச்னைகளில் எல்லாம் மிகவும் முக்கியமானதும் அடிப்படையானதும் ஒன்றுளது. அதாவது, நாம், ஒரு ஒற்றை மொழிக் குழுவிற்காக மாத்திர மன்றிதென்னிந்தியா வில் அதாவது திராவிட நாட்டிலுள்ள எல்லா மொழிக் குழுவுக்காகவும் நான்கு தென்னிந்திய மொழிக் குழுவினர் ஒவ்வொருவரின் உரிமைகளுக்காகவும், சுதந்திரத்திற்காகவும் இந்த அறப்போராற்றுகிறோம் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்தாகவேண்டும்.

இந்த உரிமைப் போராட்டத்திலே, முதன்மையாகவும் பெரும்பான்மையாகவும் இருக்கும் தமிழர்கள் இந்தக் கலாசார சுதந்தரப் போர்த்தாக்குதலிலே தங்களை, முன் னணி வீரப் படைகளாகக் கருதவேண்டும்.

## வட்டார மொழி

இம் மாகாணத் தலைமையாசிரியர்கள் கூட்டத்திலே, இம் மாகாண கல்வி சீர்திருத்தத்திட்டம் பற்றி, கல்வி மந்திரி யார் கூறிய தெளிவுரையில், முக்கிய அம்சம் வட்டார மொழிக்கு அதிக முக்யத்துவம் தந்ததாகும்.

கலாசாரத்தில் சிறுபான்மையோராக இருப்பவர்கள், அவர்கள் எந்த வட்டாரத்தில் வசிக்கிறார்களோ அந்த வட்

டார மொழியையும் கலாசாரத்தையும் கைப்பற்றி நடக்க வேண்டியவர்களாக விருக்கிறார்கள். ஏனென்றால், வட்டார மொழி இந்தச் சிறுபான்மையோரின் தாய் மொழியாக இருக்கும் என்பதில்லை.

எனவே, இவர்கள் ஒன்று தங்கள் சொந்த கலாச்சாரப் பண்பைதழுவி நடக்கவேண்டும் அல்லது வட்டாரப் படிப்பைப் படித்தாக வேண்டும். இந்த இரண்டில் யாதாவதொன்றைத்தான் அவர்கள் தேர்ந்தெடுத்தாக வேண்டியிருக்கிறது.

தங்கள்சொந்த இன கலாசார சம்பிரதாயத்தைக் கைப்பற்றி நிற்க முற்பட்டால் அவர்கள் வட்டாரப்படிப்பை இழக்க வேண்டியதாகும். ஏனென்றால், அவர்களுடைய தாய் மொழியில் கல்வி போதிக்கப்படுவதில்லை.

## பிற்போக்குத் திட்டம்

இரண்டாவது அம்சம் இரண்டாம் மொழி யொன்றைக் கற்றாக வேண்டிய நிர்பந்தமாகும். இந்த இரண்டாம் மொழிகளில் ஹிந்தியும் ஒன்று. இரண்டாம் மொழியாக ஹிந்தியோ, சமஸ்கிருதமோ அல்லது வேறெந்த இந்திய மொழியோ எடுத்துப் படிக்கலாம். ஆயினும், ஹிந்திதான் பிரதானமாக வலியுறுத்தப்படுகிறது. ஒவ்வொரு பள்ளிக்கூடமும் ஹிந்தி முன்ஷியை நியமித்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

கலாசார சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த ஒரு மாணவன், இரண்டாம் மொழியாகத் தன் தாய் மொழியைத் தேர்ந்தெடுத்துப் படிக்க உரிமையிருக்கிறதாயினும், அவ்விதம் அவன் செய்தால் அந்த மொழியைக் கற்பிக்க அவன் படிக்கு மிடத்தில் ஆசிரியர் யாரும் கிடைக்கமாட்டார்கள். எனவே, இந்த சிறுவனின் கதி என்ன? தன் தாய் மொழியைப் பறி கொடுத்து, ஒரு அயல் மொழியான ஹிந்தியைப் படித்துத் தொலைக்க வேண்டியதாகிறது.

அதுவும் தனக்கு அறிமுக மில்லாத—புரியாத மொழியை நெட்டுருவாக விழுங்க வேண்டிய நிர்பந்தத் திற்குள்ளாக்கப்படுகிறான். எனவே, இந்தப் போராட்டத் தில் சேர்ந்து இந்தப் பிற்போக்குத் திட்டத்தைத் தகர்த் தெறிய முன் வர வேண்டுமென்று எல்லாக் கட்சியையும், எல்லா இனத்தையும் சேர்ந்த ஒவ்வொருவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

## கல்வி மந்திரி "சிருஷ்டி"

எனக்கு முன் பேசியவர்கள் எடுத்துக் காட்டியது போல் நிலைமை மோசமாகயிருந்தாலும், நம்பிக்கை ஒரு சிறுதுளி இருக்கத்தான் செய்கிறது. இந்தத் திட்டம் கல்வி மந்திரியின் சிருஷ்டியாகும். அவருடைய மற்ற மந்திரி சகாக்களுக்கு இதில் எவ்விதமான பங்கும் கிடையாது.

இந்தத் திட்டத்திற்குத் தான் மாத்திரம் பொறுப் பாளியா அல்லது மந்திரி சபை முழுவதும் பொறுப்பாளியா வென்று சட்டசபையிலே கேள்வி கேட்டபோது இந்தக் கல்வி மந்திரி, கல்லுப் பிள்ளையாரைப்போல் வாய்மூடி மௌனியாக வீருந்ததிலிருந்தே, இது கல்வி மந்திரியின் தனிப்பட்ட சிருஷ்டி என்ற முடிவுக்கு நான் வரவேண்டிய தாயிற்று. இந்தத் திட்டத்தை மந்திரி சபை முழுவதும் பரிசீலனை செய்து முடிவு செய்திருந்தால், அப்போது அந்த உண்மையை ஒப்புக்கொள்ள இந்தக் கல்வி மந்திரி ஒருக்காலும் தயக்கம் காட்டி யிருக்க மாட்டார்.

கல்வித் திட்டத்திலும் தாய் நாட்டின் கோடிக்கணக் கான மக்களின் நலத்திலும் இந்தக் கல்வி மந்திரி கண்கட்டு வித்தைத் திருவிளையாடல்கள் நடத்த வியலா தென்று இந்தக் கல்வி மந்திரிக்கு நேருக்கு நேரான வாசகத்திலே நாம் தெரிவித்தாகவேண்டும். காலம் கடந்து விடுவதன் முன்னர் உரிய சமயத்தில் இதில் தலையிட்டு இந்த நாசப் போக்குத் திட்டத்தைத் தடுக்கும்படி மந்திரி சபையைக் கேட்டுக்கொள்ள வேண்டும். இந்தத் திட்டத்தை, மந்திரி

சபை விரைவில் திருத்தியமைக்கு மென்று எனக்கு எல்லா வகையிலும் நம்பிக்கை யிருக்கிறது.

## தென்னிந்திய கலாசாரம்

தோழர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் ஹாஸ் பெட்டிலும், அனந்தப்பூரிலும் பேசிய, துணிகரமான பேச்சுக்களிலே தென்னாட்டின் ஐக்கியத்தையும், தென்னிந்திய கலாசாரம் ஒன்றுற விருக்க வேண்டு மென்பதையும் வற்புறுத்தியிருப்பது நமது நம்பிக்கையைப் பலப்படுத்துகிறது.

தேசிய மொழிப் பிரச்னை திடும் பிரவேசமாக ஒரே நாளில் தீர்த்துக் கட்டி விடப்போவதில்லை. இப்போதே வட நாட்டிலேயே, ஹிந்தியா—அல்லது ஹிந்துஸ்தானியா தேசிய மொழியாக விருப்ப தென்ற போராட்டம் நடந்து வருகிறது. சில வட நாட்டு மாகாணங்களோ, இந்த இரு மொழிகளில் ஏதாவ தொன்றைத் தங்கள் வட்டார மொழி யாக்கிக் கொண்டு வருகின்றன.

தேசிய கீதத்தைத் தேர்ந்தெடுக்கும் சின்ன விஷயத்திலே பல்வேறு அபிப்பிராயங்கள் எழுந்திருக்கும் போது தேசிய மொழியை இவ்வளவு விரைவாக நிர்ணயித்து விட எப்படிச் சாத்தியப்படும்? எனவே, ஹிந்தி இரண்டாம் பாட மொழிகளில் ஒன்றாக இருக்க வேண்டு மென்று கல்வி மந்திரி அவசரப்பட்டே தீர்மானித்து விட்டாரென்று எனக்குப் படுகிறது.

## சதியும் சூழ்ச்சியும்

இவ்விதம் அவதிபவதியாக நடந்து கொண்டதில் திருப்திப்படாது இந்தக் கல்வி மந்திரி பாபமும் செய்தவரா கிறார். ஏனென்றால், அவர் தென்னிந்திய மொழிகளுக்கு பாதகமாகச் சதி செய்ததுடன் நில்லாது, தமது தலைவருக்கு எதிராகவும் சூழ்ச்சி செய்தவராகிறார். (பாராட்டு கைதட்டுதல்) தோழர் டி. ஆர். வெங்கடராம சாஸ்திரி என்பவர் சமஸ்கிருதத்தைச் சிறுவர்கள் நான்காம் மொழியாகக் கற்கச்

செய்ய வேண்டு மென்று கூறுவது கேட்டு நான் ஆச்சரிய மும் திகைப்பு மடைந்து விட்டேன்.

சிறுவர்களுக்குத் தத் தமது தாய்மொழியில் படிப்புச் சொல்லித் தரப்படவேண்டு மென்று வாதிக்கிறார். சமஸ் கிருதத்தைத் தாய் மொழியாகக் கருதும் பார்ப்பனச் சிறுவர் களுக்கு சமஸ்கிருதத்திலேயே போதிக்கப் படவேண்டுமாம். எனவே எல்லாச் சிறுவர்களும் இரண்டு தாய் மொழிகளும், பழக்க வசதிக்காக ஆங்கிலமும் கற்றாக வேண்டும். இதனால் எல்லா மொழிகளுக்கும் சரி சமத்துவ வசதிகளளிக்கப்படு கின்றன. அவரவர் தங்கள் தங்கள் கலாசார சிறப்பைக் குறித்தும் தாராளமாகப் பரணிபாடலாம்.

## சுயநல, ஆதிக்கக் கொள்கை

நமது கோரிக்கைக்குப் போதுமான ஆதரவில்லை யென்று கல்வி மந்திரி எண்ணமிட்டுக் கொண்டிருக்கிறார். நாம் பொது ஜன அபிப்பிராயத்தைத் திரட்டினால் அது கல்வி மந்திரியைத் திகைத்துத் திக்கு முக்காடி விடும்படியாக பிரம்மாண்டமானதாக விருக்கும். இம் மாகாணத்தின் மூலை முடுக்குகளிலும் நாம் பிரசாரம் செய்ய வேண்டும். எல்லா வற்றையும் விட முக்கியமாக நாம் கல்வி மந்திரி தேர்தலுக்கு நின்று சட்ட சபைப் பதவி பெற்ற அந்தப் பல்லடம் வட்டாரத்திற்குச் சென்று, தோழர் அவினாசி லிங்கத்தைச் சட்ட சபைக்கு அனுப்பி வைத்த தவறை வாக்காளர்கள் உணரும்படி செய்ய வேண்டும். மற்றும் இந்தக் கல்விக் கொள்கை சிலரின் சுய நலத்தையும், வட நாட்டாரின் ஆதிக்கத்தையும் உள் நோக்கமாகக் கொண்டிருக் கிற தென்பதையும், பொது ஜனங்களுக்கு நாம் எடுத்துக் காட்ட வேண்டும். வட நாட்டாரின் ஆதிக்கத்தைப் பற்றி இப்போதே நாம் போதுமான அளவுக்கு அறிந்துக் கொண் டிருக்கிறோம். இனாம்களுக்கு நஷ்ட ஈடு தரும் விஷயத்தில் அதிகப்பணம் தரும்படி சென்னை சர்க்காரை டில்லி நிர்ப் பந்தப்படுத்துகிறது. கல்விக் கொள்கையைப் பற்றி டில்லியுடன் கடிதப்போக்கு வரத்து நடத்திவருவதாகக்

கல்வி மந்திரி அசெம்பிளியிலே தெரிவித்தார். நாம் அமைதியாக வாழ வேண்டுமானால் இவ்விதம் பாடம் கேட்கும், பாடம் சொல்லும் முறை ஒழிந்தாகவேண்டும். எனவே, இந்தப் போராட்டம் வடநாட்டுக்கும்,தென்னாட்டுக்கும்நடக்கும் போராட்டமாகவே இருக்கவேண்டும்.

★

# 9. ரெவரண்ட் அருள் தங்கையா

தலைவர் அவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

இங்கு நீங்கள் கடல்போல் திரண்டு கூடியிருப்பது உங்களது உள்ளக்கிடக்கையை வெளிக்காட்டுகிறது. ஹிந்தி எதிர்ப்பதில் உங்கள் அனைவருக்கும் உள்ள ஆர்வமும், அவ்வார்வத்தால் உங்களுக்குள் ஏற்பட்டுள்ள ஒற்றுமையும் நன்கு புலனாகின்றது. இக் கூட்டத்தைக் காணும் எவரும் ஹிந்திக்கு இந்நாட்டில் பலத்த எதிர்ப்பு உண்டு என்பதைக் கண்டு கொள்ளாமல் இரார். அமைச்சர் குழுவுக்கு காணும் கண்கள் உண்டேல் அவர்கள் அவஸ்யம் இம்மாத முடிவுக்குள் கட்டாய ஹிந்தி நுழைப்பை கண்டிப்பாக கைவிட்டு விடுவார்கள். முன்னே நடத்தப்பட்ட ஹிந்திப்போருக்கும், இன்று நடைபெற இருக்கும் ஹிந்திப்போருக்கும் நிறையவேற்றுமை உண்டு. அது நாம் வெள்ளையன் ஆட்சியிலிருந்து விடுதலையடைய முயற்சித்துக் கொண்டிருந்த காலம். இன்றோ ஓரளவுக்கு வெள்ளையன் ஆட்சி ஒழிக்கப்பட்டு கொஞ்சம் விடுதலை பெற்றிருக்கும் காலம். எனவே நம் உரிமையைக் கேட்க நமக்கு முன்னைவிட இப்போது அதிக பாத்யதை உண்டு.

## பயனற்ற ஹிந்தி

எந்த நாட்டுக்கும் மொழிதான் அடிப்படையாகும். இந்நாடுதமிழ் நாடு. இந்நாட்டு மொழி தமிழ் மொழி. ஹிந்தியோ வடநாட்டு மொழி; அந்நிய நாட்டு மொழி. எனவே அதற்

கும் நமக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. தமிழ் நாடு சமீபகாலம் வரை என்றுமே அந்நிய நாட்டின் ஆதிக்கத்தில் இருந்தது கிடையாது. இங்கு ஆங்கிலேயர் கொடி தவிர வேறு அன்னியன் கொடி பறந்ததே கிடையாது. ஆனால் வடநாட்டிலோ, அடிமை அரசர்கள் கூட கொடி கட்டி ஆண்டிருக்கின்றனர். வடநாட்டுக்கும் நமக்கும் அரசியல் தொடர்புமில்லை. மொழித் தொடர்புமில்லை. ஆகவே, அந்தநாட்டு மொழியை இந்த நாட்டில் கொண்டு வந்து புகுத்துவது தவறானது. பயனற்றதுங்கூட. இதில் யாருக்கும் கட்சி பேதம் காரணம் ஆகவோ ஜாதி பேதம் காரணமாகவோ அபிப்பிராயபேதம் இருக்க நியாயமில்லை. நாம் யாவரும் அச்சம் நீங்கி ஒன்றுபட்டுக் கிளர்ச்சி செய்தால் இந்த ஹிந்தி கட்டாயம் ஒழிந்து போகும். இதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம்.

## அறிஞர் குழு நிறுவுக

பொது மக்களுடைய நன்மைக்கான பல ஜீவாதாரமான திட்டங்களுக்குள்ளும் கட்சி பேதங்கள் வந்து புகுந்து அவற்றைக் குட்டிச் சுவராக்கி வைத்து விட்டது போல் கல்வித்திட்டத்திலும் கட்சிகள் வந்து புகுந்து கொண்டு கல்வி முறையை அடியோடு பாழாக்கி வருகின்றன. கல்வி முறையை வகுக்கும் அதிகாரத்தை அரசியல் கட்சியினர் கைப்பற்றிக்கொண்டதும், கல்வி முறை அடியோடு கெட்டுப்போய் விட்டது. கல்வி முறையைக் கட்சிக்காரர்கள் வகுப்பது, ஒருகுருடன் மற்றொருகுருடனுக்கு வழி காட்டியாகத்தான் முடியும். எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், கல்வி திட்டம் அந்தக் கட்சியின் ஆதிக்கத்துக்கு விடப்படாமல் கல்வியில் ஆராய்ச்சியும், அநுபவமும் பெற்ற ஒரு அறிஞர் குழுவுக்கே கல்வி அமைப்பு முறை வேலை விடப்பட வேண்டும். இதன்னியில் அரசியல் கிளர்ச்சிக்காரர்கள் கல்வியில் கைவைக்கப் புகுந்தால் இன்றுள்ளது போன்ற குழப்பந்தான் ஏற்படும். கல்வி அமைப்பு முறைஒரு அறிஞர் குழுவினிடம் விடப்பட்டிருந்தால் அவர்கள் கட்டாயம் ஹிந்தியை இந்நாட்டில் புகுத்தியிருக்க மாட்டார்கள்.

மேலும் மொழி ஒன்றே மக்களைப் பிணைத்து விடும் என்று நினைப்பதும் அறிவீனம்.

## வட நாட்டில் கலவரம் ஏன்?

வட நாட்டினர்ஏறக்குறையஒரேமொழியைப்பேசுகின்றனர் என்று கூறப்படுகிறது. அப்படியானால் ஏன் அங்கு வகுப்பு கலவரம் தாண்டவமாடுகிறது? மொழி யொன்றே மக்களைப் பிணைத்துவிடும் என்றால், இந் நாட்டில் பல நூற்றாண்டுகளாக தமிழ் பேசிவாழும் பார்ப்பனர்கள், ஏன்றோ, தாங்கள் மேல் ஜாதியென்ற அகம்பாவத்தைவிட்டுவிட்டு மற்ற தமிழர்களோடுஒன்று சேர்ந்திருக்கவேண்டுமே.எனவே,மொழியானது அந்நிய நாட்டிலிருக்கும் ஒரேமொழி பேசுவர்களைத் தான் பிணைக்கப்பயன்படுமே யல்லாமல் ஒரே நாட்டிலுள்ள இரண்டு தனி இனங்களைப் பிணைக்க பயன்படாது என்பதை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ளவேண்டும். மேலும் பெரும் பான்மையோர் பேசும் மொழி ஹிந்தி என்பதற்காக இந்நாட்டிலுள்ள எல்லாரும் ஹிந்தி படிக்க வேண்டும் என்று கல்வி மந்திரி கூறுவதைப்போல், இந்நாட்டில் பெரும்பான்மையோர் கோதுமையும் சோளத்தையும் தான் சாப்பிடுகிறார்கள் என்பதற்காக எல்லோரும் கோதுமையும் சோளத்தையும்தான் சாப்பிட வேண்டும் என்று உணவு மந்திரி கூற ஆரம்பித்துவிட்டால் நாம் என்ன செய்வது. நாம் ஒப்புக்கொள்ளவேண்டுமா கோதுமையே சாப்பிட்டு வாழ? அந்த நாட்டு பழக்கம் அது. இந்த நாட்டு பழக்கம் இது.

## அறிவுடமையாகாது

ஆகவே பெரும்பான்மையோரால் பேசப்படும் மொழி என்பதற்காக ஹிந்தியை இந்நாட்டில் கொண்டு வந்து புகுத்துவது அறிவுடமையாகாது. ஹிந்தி தமிழை அழித்துவிடும் என்பது முற்றிலும் உண்மையே. ஆதலால் நாம் ஹிந்தியை இந்நாட்டில் நுழைய விடாமல் விரட்டி அடிப்பதோடு தமிழ் மொழியை நாம் உலகமெங்கும் பரப்பவேண்டும். அதனால் உலகம் பெரு நன்மையடையும். தமிழ் மொழிசமயமொழியாக

மட்டும் முன்னம் ஆகாதிருந் திருக்குமானால், சைவர்கள் அம்மொழியைக் கைப்பற்றாமல் இருந்திருப்பார்களானால் அது இந்நேரம் உலகையேதன்னுள் அடக்கிக் கொண்டிருக்கும். அவ்வளவு சிறப்பு மிக்கது தமிழர் கலாசாரம். எனவே, அதைக் காப்பாற்ற அனைவரும் கடிதின் எழுமின். கட்டாய ஹிந்தியை ஒழிமின்" என்று கூறினார்.

★

# 10. அப்துல்மஜீத்எம்.எல்.ஏ.

தலைவர் அவர்களே! தாய்மார்களே! தோழர்களே!

ஒரு முஸ்லிம் ஆகிய எனக்கு இந்த மேடையில், பேசுவதற்கு எப்படி இடம் கிடைத்தது என்று நீங்கள் அறிய ஆசைப்படலாம். நான் ஒரு முஸ்லிமே ஆனாலும் நானும் தமிழன் தான். நானும் தமிழகத்தில் தான் பிறந்தேன். தமிழ் கலாசாரத்தில் எனக்கு நிறைய அனுபவம் உண்டு. தமிழ் கலாசாரம் எவராலும், எதனாலும் அழிக்க முடியாத ஒரு கலாசாரம் என்பதை நான் அறிந்திருக்கிறேன். தமிழகத்தின் மீது பல தடவை படையெடுத்த சமுத்திரத்தினால் கூட தமிழர்களின் கலாசாரத்தை அழிக்க முடியாமற் போய் விட்டது. அக்கலாசாரம் இன்றும் வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது. அதைக் கெடுக்கத்தான் ஆட்சியாளர்கள் கட்டாய ஹிந்தியைக் கொண்டு வந்து இந்நாட்டில் நுழைக்கிறார்கள். தமிழணங்கை இந்நாட்டை விட்டே விரட்ட செய்யப்படும் சூழ்ச்சி தான் இது.

## கல்வியமைச்சர் அன்று............

நான் கொஞ்ச காலம் அண்ணாமலை சர்வகலாசாலை செனேட் குழுவில் ஒரு அங்கத்தினராக இருந்திருக்கிறேன் அப்போது நடைபெற்ற பட்டமளிப்பு விழா வொன்றில் தோழர் அவினாசிலிங்கம் செட்டியார் சொற்பொழி வாற்றினார். நானும் கேட்டேன். அதில் அவர் ஒவ்வொரு மனிதனும் தன் தாய் நாட்டுக் கலையை, தன் தாய் நாட்டுக் கலாசாரத்தைப் போற்றி வளர்க்க வேண்டுமென்று தெரிவித்திருந்தார். அவரே இன்று அதன் அவசியத்தை மறந்து விட்டார் போலும். தமிழர் கலாசாரம் தனிக்கலாசாரம். தமிழர்களுக்குள் எப்போதும் சாதி வேறுபாடுகள் இருந்ததில்லை. பிறப்போக்கும் எல்லாஉயிர்க்கும்என்பது, இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர் என்பது மான ஒரே கொள்கையை அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கை நடத்தியவர்கள். அவர்கள் யார் எந்த நாட்டிலிருந்து வந்த போதிலும் அவர்கள் தமக்கு நன்மை செய்வார்களோ தீமை செய்வார்களோ என்று சிந்திக்காமல் அனைவர்க்கும் தம் நாட்டில் இடம் அளித்து வந்தவர்கள் தமிழர்கள். அப்படிப்பட்ட காரணத்தால் வந்து குடியேறியவர்கள் தான் இந்த வடநாட்டவர்கள். இவர்கள் நாளடைவில் நம் நாட்டில் ஆதிக்கம் பெற்றுவிட்டனர். ஆதிக்கம் அதிகமாகவே வளர்ந்து, ஆட்சியும்தம் கையில் சிக்கிக் கொள்ளவே இன்று தமிழர்களின் கலாசாரத்திலேயே, இவர்கள் கைவைக்க துணிந்து விட்டார்கள்:

## பெரியாரோடு பங்கு கொள்வோம்

இதைத் தடுக்க இந்நாட்டில் வாழும் கிருஸ்துவர்களும் முஸ்லிம்களும் மற்றும் எல்லோரும் கடமைப்பட்டவர்களே யாவர்கள். ஏன்? இவர்கள் யாவரும் தமிழர்கள். எனவே தமிழர்களின் கலாசாரத்திற்கு வந்திருக்கும் தீங்கை ஒழிக்க பெரியார் அவர்கள் முன்னின்று நடத்தும் இவ்வியக்கத்தில்

ஒவ்வொரு தமிழனும் பங்கு கொள்ள வேண்டியது அவசியம் இந்த இயக்கத்தில் எனக்கும் மற்றும் முஸ்லிம்கள் பலருக்கும் பூர்ண அநுதாபம் உண்டு என்று தெரிவித்துக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன். எனக்கு இந்த சந்தர்ப்பத்தை இம்மாநாட்டினர் அளித்ததற்காக நான் எனது வணக்கத்தைச் செலுத்திக் கொள்கிறேன்'' என்று கூறி முடித்தார்.

★

# 11. வி.பி.எஸ். மணியர்பேச்சு

தலைவரவர்களே! தாய்மார்களே! தோழர்களே!

"இத்தமிழ் நாட்டில் கட்டாய ஹிந்திபுகுத்துவது ஆரிய சூழ்ச்சிதானே ஒழிய வேறொன்றுமில்லை. இந்த ஆரியர்கள் இந்நாட்டில் புகுந் து முதல் நமக்கு இழைத்து வரும் தீங்கு சொல்லத்தரமன்று! சாதியைப் புகுத்தியவர்கள் இவர்கள்தான் நமக்குள் மத வேற்றுமையைப் புகுத்தியவர்கள் இவர்கள்தான். இந்நாட்டில் மோட்சத்தையும், நரகத்தையும், உயர்வையும், தாழ்வையும் உண்டாக்கியவர்களும் இவர்கள் தான். எனவே, இச்சூழ்ச்சிக்காரக் கும்பலின் சதிச் செயலுக்கு நாம் பணிந்து விடக்கூடாது கடைசி மூச்சுவரை போரிட்டேனும் சாக வேண்டியதுதான். போராடி வெற்றி காண்போம். ஹிந்தியை ஒழிப்போம். ஆரிய சூழ்ச்சியை அழிப்போம்'' என்று கூறினார்.

★

# 12. ராமாமிர்தம் அம்மையார்

தலைவர் அவர்களே! தோழர்களே! என்னருமை தோழியர்களே!

கட்டாய ஹிந்தியைக் கொண்டு வந்து நம் குழந்தைகள் மீது சுமத்தும் இந்த அவினாசியாருக்கு நாம் சரியான புத்தி கற்பிக்கவேண்டும். இவர் பெண்களெல்லாம் சமையல் வேலை தவிர மற்ற எந்த வேலைக்கும் லாயக்கற்றவர்கள் என்று கூசாமல் கூறிவருகிறாராம். பெண்டாட்டி இல்லாத இந்த மகானுக்கு பெண்களுடைய திறமையைப்பற்றி என்ன தெரிய முடியும் என்று நான் கேட்கிறேன். மற்ற நாடுகளிலெல்லாம் பெண்கள் தான் விரைவாக முன்னேற்றம் அடைந்து வருகிறார்கள். பெண்களுக்குத்தான் முதலில் கல்வி கற்பிக்கப்படவேண்டும். பெண்கள் கல்வி கற்றால்தான் தம் குழந்தைகளை நல்ல முறையில் வளர்ப்பார்கள். தாமாகவே கூட தம் குழந்தைகளுக்குக் கல்வி கற்றுக் கொடுத்து விடுவார்கள். பெண்கள் லேசானவர்கள் அல்ல என்பதை அவினாசியாருக்கு, அவரை ஆட்டிப்படைக்கும் ஆரியர்களின் சாஸ்திரமே தெரிவித்திருக்கும். த்ரேதாயுகம் சீதையால் அழிந்தது. துவாபரயுகம் திரௌபதியால் அழிந்தது. கலியுகத்தில் ஒவ்வொரு பெண்ணும் அவர்களைப் போல் அழிக்கும் சக்திகளாக விளங்குவார்கள் என்று அவர்கள் சாஸ்திரம் கூறுகிறது.

## வாளாயிரோம்

எனவே நாங்கள் சும்மா இரோம். ஹிந்தியை ஒழிப்பதோடும் விடோம். தனி நாடு பிரிவினைக்கே நாங்கள் போராட ஆரம்பித்திடுவோம். ஹிந்தியை எதிர்ப்பானேன். அதற்கு ஒரு போர் தொடுப்பானேன். ஒரே படியாக நாடுபிரிவினைக்

சே போர் தொடுத்துவிட்டால், அதோடு ஹிந்திச் சனியனும் தொலைந்து போகிறது. இந்த வட நாட்டானோடு சேர்ந்திருந்தால் அல்லவா ஹிந்தியைப் படிக்கச் சொல்வான். பிரிவினைக்கும் போராடலாம். சீக்கிரத்தில் வெற்றியும் பெற்று விடலாம். ஆனால் இதெல்லாம் செய்ய நமக்குச் சீக்கிரத்தில் மனம் வருவதில்லையே. அதுதானே நமக்குள்ள பெரிய குறை. தோழியர்களே! இதைமட்டும்நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஆக்கப்பிறந்தவர்களும் பெண்கள். அழிக்கப் பிறந்தவர்களும் பெண்கள். ஹிந்தியை ஒழிக்க நாம் முன்னின்று போராட வேண்டும். நாடு பிரிவினைக்கும் நாம்தான் முன்னின்று போராடவேண்டும் சென்ற போராட்டத்தின் போது ஆண்கள் படை ஒன்று ஊர் ஊராகச் சுற்றிவந்தது. இம்முறை பெண்கள் படையும் ஒன்று புறப்படும். அடிப்பதும், சுடுவதும் எல்லாம் ஆண்களிடம் தான் பலிக்கும். நம்மிடம் சர்க்கார் அவ்வளவு படுமோசத்திற்கு இறங்கமாட்டார்கள். இறங்கினால் தான் என்ன நாமும் ஒருகை பார்ப்போம். நம்மை ஒருக் காலும் சர்க்காரால் அடக்க முடியாது. அது நிச்சயம்.நிச்சயம் வெற்றிபெறுவோம் எனவே தோழியர்களே! நீங்கள் எல்லோரும் போருக்கு வரத் தயாராய் இருப்பதற்கு அறிகுறியாக எதோ கைதட்டுங்கள் பார்க்கலாம். (அனைவரும் கைதட்டினார்கள்) போதும்! எல்லோரும் கைதட்டிவிட்டீர்கள். இனி பயம் இல்லை. வெற்றி நமக்கே" என்று கூறி முடித்தார்."

———

திராவிடன் அச்சகம், சென்னை.

திராவிடத் தந்தை

# பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுக்கு

முதுபெரும் தமிழ்ப் புரவலர்,

# நாவலர் ச. சோ. பாரதியார் அவர்கள்

அனுப்பிய உறுதிமொழி.

Pasumalai
28-6-48

பெரியார் — திரு. ஈ. வெ.
இராமசாமி அவர்களுக்கு.
அன்புள்ள ஐயா. [illegible]

[illegible]

17—7—48 இந்தி எதிர்ப்பு மாநாடு



மண்டபத்திற்குள்—